APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

Āryamatha - - - Upākhyānam

PART II :: TAMIL



12th Edn.

INTRODUCTION BY

Mr. T. V. SESHAGIRI AIYAR, B.A., B.L.,
High Court Judge.

THE VIVEKA BODHINI OFFICE
MYLAPORE, MADRAS.

துரைத்தனத்தாரும் அங்கீகரித்தது

ஆரியமத உபாக்கியானம்

(இரண்டாம் பாகம்)

இது
திருநெல்வேலி ரிடையர்ட் வக்கில்
ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள்
இயற்றியது.

சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜ்
ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர், பி.ஏ., பி.எல்.,
அவர்கள் முன்னுரையுடன் கூடியது

பன்னிரண்டாம் பதிப்பு

விவேக போதினி ஆபீஸ்,
காபிரைட்] — மயிலாப்பூர், சென்னை — [அணா 10

சித்திரப் படங்கள்

1. பக்தி பாவசத்தால் அனுமார் சஞ்சீவி பர்வதம் கொணர்தல்.
2. தசாவதாரங்கள். (முகப்புப் படம்.)
3. ஏகலவன் குருதட்சிணையாகத் தனது வலதுகைக் கட்டைவிரலைக் கொடுத்தல்.
4. கஜேந்திர மோக்ஷம்.
5. ஸ்ரீகிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் கீதை உபதேசம் செய்தல்.
6. ஸ்ரீகிருஷ்ண பகவான் துரியோதனன் சபையில் விசுவரூபமெடுத்தல்.
7. பீஷ்மர் அம்புப் படுக்கையிலிருந்து பாண்டவர்களுக்கு உபதேசம் செய்தல்.
8. பரமசிவன் மார்க்கண்டேயரை யமனிடருந்து காத்தல்.
9. சீதைக்கு அனசூயை புத்திபுகட்டுதல்.
10. மஹாவிஷ்ணு நரசிங்கரூபமெடுத்து பக்தனைக் காத்தல்.
11. அனுமார் பக்தி பாவசத்தால் கடலைக் கடத்தல்.
12. வருணன் ஸ்ரீராமரிடம் சரணமடைதல்.
13. ஸ்ரீமத் சங்காராசாரியர்.
14. ஸ்ரீமத் ராமானுஜர்.
15. ஸ்ரீமத்வாசாரியர்.

முன்னுரை

(மொழிபெயர்ப்பு.)

இந்த உபயோகமுள்ள புத்தகத்திற்கு ஒரு முன்னுரை எழுதும் வேலை ஒருவாறு வற்புறுத்தி என்னிடமே கொடுக்கப்பட்டது. நம் ஜாதீய நற்குணம், நோக்கம் இவைகளையே பொருத்தது நமது சீரும் சிறப்பும் என்று நான் அடிக்கடி உறுதியாகக் கூறி வந்தமையால் இந்தக் கௌரவம் எனக்கு அளிக்கப்பட்டதுபோலும். ஆழ்ந்த நற்குணம் ஏற்படுவதற்கு வேண்டிய ஆதாரம் நமது இலக்கியங்களில் அடங்கியுள்ளன என்று நான் கூறிவந்த நியாயத்தை நிலை நிறுத்துவது என் முன்னிருக்கும் இப்புத்தகம். இப்பாகத்தில் அடங்கியுள்ள கதைகளைவிட எளிதான கதைகளை, ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் முதற்பாகத்தில் எடுத்தாண்டிருக்கிறார். இதில் அவர் (1) தருமாதரும விவேகம் (2) மதவிஷயம் (3) ஆசாரியர்கள் சரித்திரம் ஆகிய இவைகளைப்பற்றி விஸ்தரித்திருக்கிறார். இதில் அடங்கியுள்ள கதைகள் பொதுப்படையாகவும், அவைகளைத் திரட்டியுள்ள விதம் விலக்குக்கு இடங்கொடாததாகவும் உள்ளன. நமது பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் மதம், நன்னடக்கைக் கோட்பாடு முதலியவைகளைப்பற்றிய கல்வி கற்பிக்கும் விஷயத்தை, நான் கொஞ்சநாளைக்குமுன் அங்கத்தினராக விருந்த ஒரு சங்கத்தில் ஆராய்ச்சி செய்யும்படி நேர்ந்தது. இவ்விஷயத்தில் தகுந்த பாட

புத்தகங்களில்லை என்பது முக்கிய முகாந்தரமாக அதில் எடுத்து வற்புறுத்தப்பட்டது. தமிழர்கள் விஷயத்தில் மாத்திரம் இந்த முறைப்பாட்டிற்கு இடமே இல்லை. நம் நாட்டு தீரர்களை ஒழுங்குபடுத்திய நோக்கங்களையும் போராவல்களையும் பற்றிய ஆழ்ந்த ஞானம், இளமைப் பருவத்திலேயே நமது சிறுவர்களுக்கு உண்டாக்கிவிட வேண்டுமென்ற கருத்துடையவை ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் முயற்சிகள். விவாதத்திற்கு இடமானவைகளை அணுகாது நம் சிறுவர்களுக்கு மதம் நன்னடக்கைக் கோட்பாடு முதலியவைகளைக் கற்பிக்க உபயோகப்படுவனவாகிய நமது புராணங்களுள்ளிருக்கும் விஷய விசித்திரங்களை அவரால் தொகுக்கப்பட்ட கதைகள் நன்கு வெளிப்படுத்துகின்றன. இந்துக்களுள் விவாதத்திற்கு இடம் தராது மத விஷயம் போதிக்க முடியாது என்ற உறுதிமொழி ஆதாரமற்றது என்று எனக்குத் தோன்றிக்கொண்டே இருக்கும். அந்த உறுதி மொழிக்கு இப்புத்தகமே முடிவான கண்டனம்.

கதைகள் நுட்பப் பகுத்தறிவுடன் தொகுக்கப் பட்டுள்ளன என்பதைக் காண எனக்குச் சந்தோஷம் உண்டாகிறது. கதைகள் எழுதுவதில் கல்விச்செருக்கு வெளி வாராமல், சிறுவர்களுக்கும் அறியாதவர்களுக்கும், ரோசகவும் மிகுந்த ஊக்கமாகவும் மனதிற்பதியும்படி அவைகள் அமைந்துள்ளன. தன் வாழ்க்கையில் பிற்பாகத்தை ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள், நம் நாட்டிற்கு உள்ளபடி உழைப்பதில் செலவிடுகின்றனர் என்பதில் சந்தேகமே இல்லை.

டி. வி. சேஷகிரி ஐயர்.

FOREWORD

(ORIGINAL.)

I was asked with some persistence to say a foreword *to this useful publication.* The compliment is probably due to the impression that I have been insisting on national virtues and ideals forming the basis of progress in this country. The book before me justifies my argument that our literature contains materials which ought to furnish the groundwork for the formation of sound character. In Part I, Mr. Krishnaswamy Aiyar dealt with stories of a simpler complexion than in the present volume. In this book three subjects are treated (1) Fruits of good and of evil; (2) Necessity for a religious life & (3) Anecdotes concerning the three Great Founders of Hindu Religious Philosophy. *The stories are absolutely unsectarian and their selection is unexceptionable.* Very recently a Committee of which I was a member had to consider the question of imparting religious and moral instruction in our Schools and Colleges. It was pressed upon the Committee that there are no suitable text-books for the purpose. So far as the Tamil-knowing population is concerned, there is not much room for this complaint. Mr. Krishnaswamy Aiyar's efforts are calculated to give our boys in their most impressionable period of life a good knowledge of the aims and ambitions which guided our national

heroes. The stories collected by him reveal the wealth of material there is in our puranic literature which can serve to impart religious and moral instruction to our children without trenching upon debatable ground. I have always felt that it is a baseless assertion which says that non-polemical religious instruction is impossible among Hindus. **This book is a complete refutation of such a theory.**

I am glad to find that considerable discrimination has been shown in the selection of stories. There is no pedantry in the narration. **They are such as will appeal to young minds with directness and force.** Mr. Krishnaswami Aiyar is spending the evening of his life in real service to the country.

T. V. SESHAGIRI AIYAR.

பொருளடக்கம்

IV. தர்மாதர்ம விவேகம்

V. மதவிஷயம்

VI. ஆசாரியர்கள் சரிதை



பக்திபரவசத்தால் அனுமார் சஞ்சீவிபர்வதம்
கொணர்தல்



தசாவதாரங்கள்

ஆரியமத உபாக்கியானம்

இரண்டாம் பாகம்

IV. தர்மாதர்ம விவேகம்

1. வியவகார ரஹஸ்யம் (1)

ஸ்ரீராமர் வனவாச ஆரம்பத்தில் சித்ரகூட பர்வதத்தில் கொஞ்ச நாள் தங்கியிருந்தார். அப்பொழுது சீதையுடன் ஏகாந்தமாக ஓரிடத்தில் உட்கார்ந்து சீதை மடியில் தலை வைத்துக்கொண்டு அவர் உறங்கத் தொடங்கினர். அப்பொழுது ஒரு கொடியவன் காக்கை ரூபமாக வந்து சீதையைக் கொத்தத் தொடங்கினன். வலி அதிகமாகிவிட்டது. அசைந்தால், எங்கே கணவரது தூக்கம் கலைந்து அவருக்குக் கோபம் உண்டாகுமோ என்று பயந்து சீதை அசையாமல் இருந்துவிட்டாள். காக்கை விடாது கொத்தவே சீதை தேகத்திலிருந்து இரத்தம் பெருக ஆரம்பித்தது. இரத்தம் இராமர்மேற் பட, அவர் விழித்தெழுந்து சீதையின்

அலங்கோலத்தைக் கண்டார். அப்பொழுதும் விடாது கொத்திக் கொண்டிருந்த காகத்தைக் கண்டு இராமர் கோபங்கொண்டு அருகேயிருந்த சிறு புல் ஒன்றை எடுத்து பிரமாஸ்திர மந்திரத்தை உச்சரித்துக் காக்கையின்மேல் விட்டுவிட்டார். இராமபாணம் காக்கையைக் கொல்லத் தொடர்ந்தது. காக்கை மிகப் பயந்து பிரபஞ்சமெங்கும் சுற்றி எல்லாத் தேவதைகள், மூர்த்திகள் ஆகிய இவர்களிடம் சென்று சரணம் புகுந்தது. "இந்தத் துக்கம் தீர, ஸ்ரீராமரிடம் நீ சரணம் புக வேண்டுமே யொழிய வேறு மார்க்கமில்லை" என்று அவர்கள் காக்கையைத் தள்ளிவிட்டனர். காக்கை கதியற்று இராமரை நோக்கி ஓடிவரத் தொடங்கியது. அப்பொழுதும் இராமபாணம் காக்கையின் பின்புறமிருந்து அதைத் துரத்தியது. ஓடும்போது எதிரியைக் கொல்லாதிருத்தல் இராம பாணத்தின் குணம். காக்கை இராமர் பாதத்தில் சரணமென்று வந்து விழுந்தது. காகத்தால் பீடிக்கப்பட்ட சீதையும் காக்கையின் துக்கத்தை அப்பொழுது கண்டு மனமிரங்கி ஸ்ரீராமருக்குச் சிபார்சு செய்ய, ஸ்ரீராமர் அதன் ஒரு கண்ணை வாங்கிவிட்டு அதை உயிரோடு விட்டார். அதுமுதல் காக்கைகளுக்கெல்லாம் ஒருவித சாய்ந்த பார்வை எற்பட்டதென்று புராணங்கள் கூறும்.

செய்தக்க வல்ல செயக்கெடும்: செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

— இராமாயணம், சுந்தர காண்டம்.

2. வியவகார ரஹஸ்யம் (2)

ஸ்ரீராமர் தமக்குச் சகாயமாய் ஏற்பட்ட வானர சேனைகளுடன் தெற்கு சமுத்திரக்கரை வந்துசேர்ந்தார். அதை அறிந்து, இராவணனுக்கு நற்புத்தி கூறிய விபீஷணரும், அவனால் நிராகரிக்கப்பட்டு இராமரிடம் வந்து சரணமடைந்தார். பின்னர், கடலை எவ்வாறு கடப்பதென்ற ஏக்கம் ஸ்ரீராமருக்கு வந்துவிட்டது. அப்போது சமுத்திர ராஜனாகிய வருணனை அழைத்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாமென்று எல்லோரும் தீர்மானித்தனர். தேவதைகளைப் பிரத்தியக்ஷமாகும்படி செய்யப் பொதுவாக அனுஷ்டிக்கப்படும் விரதங்களை ஸ்ரீராமர் அனுஷ்டிக்கத் தொடங்கினார். சமுத்திரக்கரையில் தர்ப்பைகளைப் பரப்பி, மௌனமாக ஆகாரமொன்றுமின்றி வருணனைத் தியானித்துக்கொண்டே ஸ்ரீராமர் அதில் படுத்தார். வருணன் இவர் தவத்துக்கு மெச்சி, திருப்தியடைந்து பிரத்தியக்ஷமாகும் வரையில் அவ்வாறிருப்பதாக ஸ்ரீராமர் தீர்மானித்துவிட்டார். வேண்டிய காலம் வரையில் அவ்வாறே அவர் இருந்துபார்த்தார். வருணன் பிரத்தியக்ஷமாகவில்லை. உடனே அவர் கோபங்கொண்டு ஆவேசத்தோடு எழுந்து தம் விரதத்தை சமுத்திர ராஜன் அவமதித்ததால் அவன் இருப்பிடமாகிய சமுத்திர முழுமையும் வற்றடிப்பதற்காக முயன்று, ஆக்நேயாஸ்திரத்தை மந்திரித்து விட்டு விட்டார். சமுத்திர முழுவதும் கொந்தளித்துக் கொதிக்கத் தொடங்கியது. அதனுள்ளிருந்த ஜீவாசிகளெல்லாம் தத்தளித்தன. வருணனது கதியும் அதோ கதியாய் விட்டது; தன் இருப்பிடத்தில் தரித்து நிற்கமுடி

யாது தத்தளித்து மிகப் பயந்து, "இராமா, சரணம்" என்று கதறிக்கொண்டே, தன் தேவிமார்கள் சூழ ஓடிவந்தான். இராமர் மிகுந்த கோபத்தை அடைந் திருந்தும், வருணன் இவ்வாறு வருவதைக் கண்டு மனமிரங்கி, அவனுக்கு அபயப்பிரதானம் செய்து காத்தருளினர். பின்னர் அவனது ஏற்பாட்டின் படி சமுத்திரத்தின் குறுக்கே அணையிடத் தொடங் கினர். ஆகையால், ஒருவன் அவசியமான வேளை யில் கோபத்தைக் காட்டாவிடில், அவனை எவனும் மதிக்கமாட்டான். கோபம் சண்டாளமாயினும், வேண்டிய சமயங்களில் அதை மேற்கொண்டு, அள வுக்கு மிஞ்சாமல் அதைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

கொட்டினல் தேள்; கொட்டாவிட்டால்
பிள்ளைப் பூச்சி

— இராமாயணம், யுத்த காண்டம்.

3. அதிக ஆவல் கூடாது

பாரத யுத்தத்தில் பதினேழாம் நாள் சுமார் இரு பது நாழிகைக்கு, தருமபுத்திரர் கர்ணனல் முறியடிக் கப்பட்டு அவமானம் பொறுக்கமுடியாது படைவீடு சென்றார். அங்கே போனதும், தன்மேல் பட்டிருந்த காயங்களின் மிகுதியாலும், வெட்கத்தின் அதிகத்தா லும் தலைதூக்க முடியாது, ஒரு படுக்கையில் படுத்து விட்டார். அப்பொழுது அர்ஜுனன் அன்று கர்ண னைக் கொல்வதாகச் செய்திருந்த சபதம் அவருக்கு ஞாபகம் வந்தது. கர்ணன் இறந்தால்தான் தனக்கு

ஏற்பட்டிருக்கும் அவமானம் நீங்கி மனம் சாந்தம் அடையுமென்று அவருக்குத் தோற்றியது. நாழிகை இருபத்தைந்துக்குமேல் ஆய்விட்டபடியால் அர்ஜுனன் தன் சபதப்படி நடத்தியிருப்பான் என்ற எண்ணம் அதிகரித்தது. உடனே எப்பொழுது அர்ஜுனன் தம்மிடம் வந்து கர்ணனைக் கொன்றுவிட்ட சங்கதியைச் சொல்லப் போகிறான் என்ற ஆவல் வர வர அதிகமாயிற்று. "இப்பொழுது அர்ஜுனன் சந்தோஷத்தோடு வந்துகொண் டிருப்பான், இன்னும் கொஞ்சம் நாழிகையில் நம்மிடம் வந்துசேருவான்" என்று மிகுந்த ஆவலுடன் அர்ஜுனன் வரவை அவர் எதிர்பார்த்திருந்தார். இதனால் ஒரு நாழிகைப் பொழுது ஒரு யுகமாகத் தோன்றி அவர் மனம் பதைத்தது.

இங்கு இப்படியிருக்க, 'தருமபுத்திரர் அடிபட்டுத் தியரென்று ஓடிவிட்டார்' என்ற சங்கதி யுத்தகளம் முழுவதும் பரவி அர்ஜுனன் காதிலும் விழுந்தது. நாழிகை ஆய்விட்டது. எப்படியாவது கர்ணனைச் சீக்கிரம் கொல்லவேண்டும் என்று மிகுந்த பரபரப்புடன் அர்ஜுனன் வந்துகொண்டிருந்தான். இந்தச் சங்கதி கேட்டதும், தருமபுத்திரர் கதி என்னவாயிற்றோ என்ற ஏக்கம் அர்ஜுனனுக்கு வந்துவிட்டது. உடனே அவன் படைவீட்டிற்குத் தேரைச் செலுத்தும்படி கண்ணனை வேண்டிக்கொண்டான்.

படைவீடுசென்று, அர்ஜுனன் தருமபுத்திரர் முன் நின்றான். தருமபுத்திரர் தாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததற்கேற்ப, "உன்னைப்போல் மஹா வீரன் உண்டா? கர்ணனைக் கொன்று என்னைக்

காத்தாயே! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்" என்று பலவாருக அவனைப் புகழ்ந்துபேசத் தொடங்கினர். அப்பொழுது அர்ஜுனன் மகா விநயத்துடன் தான் வந்த காரணத்தைக்கூறி, "உங்கள் நிலை எப்படி இருக்கிறது என்று பார்த்துவிட்டுப் போக வந்தேன். கர்ணனைக் கொல்லவேண்டும் என்று ஆவல் கொண்டு வருகையில் உமது சங்கதி கேள்விப்பட, அதற்குமேல் ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. ஆதலால் மன்னித்து எனக்கு விடைகொடுத்தால், விரைவில் நான் கர்ணனைக் கொன்றுவிட்டுத் திரும்புகிறேன்" என்று விண்ணப்பம் செய்துகொண்டான். உடனே தருமபுத்திருக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் தடியன்போல் அவமானப் பட்டுக் கொண்டிருக்கிறேன்! என்னை என்ன பார்வை? உன் காரியத்தை முடித்துக்கொண் டல்லவோ நீ இங்கு வாவேண்டும். நீ என்ன வீரனு? உன் காண்டீவம் என்ன காண்டீவம்? அதை வேறு எவனிடத்திற் கொடுத்தாலும் கர்ணனை இதற்குள் கொன்றிருப்பான். நீ என்ன பேடிதானே" என்று பலவாருக அவனை இகழ்ந்துபேசினர். காண்டீவத்தைப் பழித்ததும் அர்ஜுனனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'தருமபுத்திரரைக் கொன்று விடுகிறேன்' என்று கத்தியை உருவி விட்டான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் சொன்ன புத்திமதியின் பேரில் தருமபுத்திரரை ஏகவசனத்திற்பேசி அவமதித்தான். இதற்குள் தருமபுத்திரர் கோபம் அடங்கியது. மிகுந்த ஆவலுடன் உலக விஷயங்களில் பற்றுவைத்தலை எதிர்பார்த்தால் வந்த இக் கோபம் மதியீனமே. அதற்கு அர்ஜுனன் அவமதிப்புத் தகுந்த மருந்தென்று மனம்

தெறியிருந்தார். அர்ஜுனன், தமையன் விஷயத்தில் தான் செய்த அவமரியாதையை எண்ணி எண்ணிப் பரிதவித்துக்கொண்டு கர்ணனைக் கொல்லச்சென்றான்.

மிகுந்த ஆவலுடன் ஒன்றையும் எதிர்பார்க்காதே;
நிராசை பரம சுகம்

— மஹாபாரதம், கர்ண பர்வம்.

4. பொது நன்மை விஷயத்தில் எச்சரிக்கை

இராமர் அரசாண்ட காலத்தில் ஸர்வார்த்தஸித்தன் என்ற ஏழைப் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் அயோத்திமுழுவதும் காலைநேரங்களில் பிச்சையெடுத்து நடுப்பகலில் அதை வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் காலங்கழித்து வந்தான். இப்படி அவன் செய்துவந்த போது ஒருநாள் ஊரெங்கும் சுற்றி அலைந்தான்; பகலிற் பதினைந்து நாழிகை ஆய்விட்டது. கொஞ்சங்கூடப் பிச்சை அகப்படவில்லை. வெயிலில் அலைந்து களைத்து என்ன செய்வதென்று தெரியாது அவன் ஒரு தெருப்பக்கம் திரும்பினான். முதல் வீட்டில் எச்சில் இலை விழ, ஒரு நாய் அதை மிகுந்த ஆவலுடன் புசிக்கத் தொடங்கியது. ஸர்வார்த்தஸித்தன் துக்கம் அதிகரிக்க, அவனுக்கு அப்பொழுது அடங்காக் கோபம் வந்துவிட்டது. கையிலிருந்த தடியால் அந்த நாயின் மண்டையில் அவன் இரண்டு மூன்று அடி அடித்துவிட்டான்.

அடிபட்ட நாய் மிகவும் வருந்தி அழுதுகொண்டு இராமர் சபை வாயிலில் வந்து நின்றது. அந்தச் சம

யத்தில், வழக்கு உள்ளவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று பார்க்க, இலக்ஷ்மணர் வாசலுக்கு வந்து சேர்ந்தார். அந்த நாயையும் பிராமணனையும் கண்டு, இருவரையும் ஸ்ரீராமர் முன்பு கொண்டுவந்து நிறுத்தினர். உடனே நாய் தனது வழக்கை எடுத்துரைத்து, "நான், ஒரு அபகாரம் அல்லது அபராதம் செய்யாதிருக்கையில் என்னை அகாரணமாய் இந்த ஸர்வார்த்தஸித்தன் அடித்துவிட்டான்" என்று முறையிட்டது. அப்பொழுது ஸ்ரீராமர் பிராமணனை விசாரிக்க, "எனக்கு ஒன்றும் அகப்படாமற் போக, நடுப்பகல் வரையிலும் அலைந்து பசியால்வருந்திக் களைத்திருக்கும் போது நாயின் உத்ஸாகத்தைக்கண்டு என் மனம் பொறுக்கவில்லை" என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டான். தகுந்த தண்டனை விதிக்க முடியாமல் சபையோர் தத்தளிக்க, அவர்களை நோக்கி அந்த நாய், "இந்தப் பிராமணனுக்கு **கௌலபத்யம்** (பலரைக் காப்பாற்றும் நிலை) கொடுங்கள்; அதுதான் இவனுக்குத் தகுந்த தண்டனை" என்றது.

இம்மாதிரி தண்டனை விதிக்கவேண்டிய காரணம் என்னவென்று கேட்க, நாய் சொல்லுகிறது:—"நான் முன் ஜன்மத்தில் ஒரு குலபதியாக (கௌலபத்யம் என்பது கோயில்மணியம் முதலியவேலைகள்) இருந்தேன். அப்பொழுது பொதுவிஷயத்திற்காக இருந்த தனம், பொருள் முதலியவைகள் என்னை யறியாமல் என் சொந்த விஷயத்திற்கு உபயோகப்படும்படி நேரிட, எனக்குப் பாபம் வந்தது. அந்தப் பாபத்தால் இந்த ஜன்மம் எடுத்தேன். ஆகலால் கௌலபத்யம் என்பது எவ்வளவு சிறப்பான நிலையாயினும், அஜாக்கிரதையா

யிருப்பவனுக்கு மிகுந்த பாபத்தை உண்டாக்கும். இந்தப் பொறுமை நிறைந்த ஸர்வார்த்தஸித்தனுக்கு என் கதி வருமென்பதற்குச் சந்தேகமே இல்லை. ஆதலால் தான் இத்தண்டனை விதித்தேன்'' என்றது.

பொதுநன்மை விஷயங்களில் அஜாக்கிரதை கூடாது.

— இராமாயணம், உத்தர காண்டம்.

5. யாகமும் தானமும்

தருமபுத்திரர் அசுவமேதயாகம் செய்தார். அதில் யாக விமரிசைகள், பெரியோரது ஆராதனங்கள் முதலிய எல்லா விஷயங்களும் மிகச்சிறப்பாக நடந்தேறின. யாகம் முடிந்து எல்லோரும் இராஜசபைகளைப் பிரவேசித்து இளைப்பாறிக்கொண் டிருக்கையில், அவர்கள் முன் ஒரு கீரிப்பிள்ளை ஓடிவந்தது. அதன் தேகத்திற் பாதி பொன்னிறமாக இருந்தது. வந்ததும், யாக சாமான்கள் மேலெல்லாம் அது புரண்டு கொஞ்ச நாழிகை கழித்தெழுந்து, "இந்தயாகம் என்ன யாகம்! மிகச் சிறந்ததொன்றையும் காணோமே; அப்படி ஏதாகிலும் ஒருவித சிறப்பு இருந்தால் என் தேகத்தின் மறு பாதி பொன்னிறமா யிருக்கவேண்டுமே'' என்று அந்த யாகத்தைப் பலவாறாக இகழ்ந்து பேசியது. "முற்பாதி பொன்னிறமானதற்குக் காரணம் என்ன?'' என்று அங்கிருந்தோர் வினவ, கீரிப்பிள்ளை கூறுகிறது:—

"குருக்ஷேத்திரத்தில் ஒரு பிராமண குடும்பத்தார் வசித்துக்கொண் டிருந்தார்கள். அதில் தலைவர், அவர் பெண்சாதி, அவர் பிள்ளை, அவர் மருமகள் ஆகிய நால்

வருமே இருந்தனர். அவர் ஒழுங்குப்படி தவறாது அநுஷ்டானுதிகளைச் செய்து, ஒழிந்த நேரத்தில் உஞ்ச விருத்தியை அநுஷ்டித்து, வயல்வெளி முதலிய இடங்களிற் சிந்தியிருக்கும் தான்யமணிகளைப் பொறுக்கி வந்து காலக்ஷேபம் செய்வது வழக்கம். இப்படியிருக்கையில் ஒரு பஞ்சம் வர, ஒரு வாரம் வரையில் அவருக்கு தான்யமொன்றும் அகப்படவில்லை. முடிவில் ஏதோ கொஞ்சம் தினை அகப்பட அதைக் கொண்டுவந்தார். அவர் மனைவி அதை மாவாக்கி, நான்கு பங்காகப் பிரித்து, தனித்தனியே ஒவ்வொருவருக்கும் வைத்தாள். நான்கு பெயர்களும் உண்ண உட்காருகையில், ஓர் அதிதி ஓடோடியும் வந்து, தமக்குப் பசி தாங்க முடியவில்லையென்று முறையிட்டார். உடனே அவன் தனது பாகத்தை அவருக்குத் தயங்காது கொடுத்துவிட்டான். அதையுண்டும் பசியாறாது அதிதி அவர்களை நோக்கி, "இந்த மாவு எனக்கு எந்த மூலை? பசி தீர்க்கவந்த விடத்தில், கொஞ்சம் உணவைக் கொடுத்துப் பசியைக் கிளப்பிவிட்டீர்களே!" என்று கதறினர். அப்பொழுது, முறையே யசமானி, பிள்ளை, மருமகள் முதலியவர்கள், தலைவர் செய்ய யத்தனித்த தருமத்தைப் பூர்த்தி செய்யவேண்டியது தமது கடன் என்று கூறி, சந்தோஷமாகவே தமது பாகங்களையும் அதிதிக்குச் சமர்ப்பித்தனர். அதிதி அவைகளை யுண்டு தெளிந்து, அக்குடும்பத்தை வாயார வாழ்த்திச் சென்றனர். அன்றிரவு அக்குடும்பத்தவர் பசிக்கொடுமையால் தேகம் நீங்கிப் பரமபதம் பெற்றனர். மறுநாட் காலையில் நான் அவ்விடத்திற்குத் தற்செயலாய்ப்போக, அங்குப் புரளும்படி நேரிட்டது. அங்குச் சிந்தியிருந்த

தினைமாவின்மேற் புரள, என் தேகத்தின் ஒரு பாதி பொன்னிறமாயிற்று. அம்மாதிரி சிறந்ததொரு விஷயம் எங்கேயாவது நடந்தேற, என் தேகத்தின் மற்றொரு பாதியும் பொன்னிறமாகாதா ?'' என்ற ஆவலுடன் பெரிய ஸத்கர்மங்கள் நடந்த விடங்களிலெல்லாம் இங்குப் புரண்டதுபோல் புரண்டு பார்த்தேன். ஒன்றும் பயன்படவில்லை. ஆதலால் இந்த அசுவமேத யாகம் மிகச் சிறந்ததல்லவென்று பழித்தேன்'' என்று கூறி, கீரிப்பிள்ளை தன் அபிப்பிராயத்தைத் தாபித்தது.

யாகத்தைவிடத் தானம் மிகச் சிறந்தது.

— மஹாபாரதம், அசுவமேத பர்வம்.

6. தருமசிந்தனையற்ற தவம் வீணானது

முன் ஒருகாலத்தில் விதர்ப்பதேசத்தில் சுவேதன் என்றோர் அரசன் இருந்தான். அவன் தன் தம்பிகளுக்கு இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு நிர்ஜனமான ஒரு காட்டை அடைந்து அங்கு ஒரு குளக்கரையில் பர்ணசாலை கட்டிக்கொண்டு தவஞ்செய்ய ஆரம்பித்தான். இப்படி இவன் செய்துவருகையில், இவன் தேகம் நழுவுங்காலம் வர, இவன் இறந்தான். உடனே அங்கு வந்த விமானத்தில் ஏறிக்கொண்டு இந்திரலோகம் போக, இவனுக்குப் பசியும் தாகமும் அதிகரித்தன. இவன் பிரமாவிடம் போய் இதன் காரணத்தை விசாரிக்க, அவர் சுவேதனை நோக்கி, ''அப்பா, நீ தவம் செய்த காலத்தில் உனது தேகத்தை மாத்திரம் போஷித்து வந்தாயே யொழிய, தர்மசிந்தனையோடு இருக்க

வில்லை; ஆதலால் உனக்கு இந்தக் கஷ்டம் வந்தது. இந்தக் கொடிய பசி தீரும்வரை, உன் பிணத்தை நீ பிரதிதினமும் தவறாது தின்னவேண்டும். ஒவ்வொரு நாட் காலையிலும் உன் பிணம் உன் பர்ணசாலைக்கு அருகாமையி லிருக்கும் குளத்தில் மிதக்கும்; போகலாம்" என்றார். சுவேதனுக்கு மிகுந்த துக்கம் வந்து விட்டது. 'இராமேசுவரம் போயும் சனீசுவரன் விடவில்லை' என்ற கதையாக இவன் பிரமதேவனை நோக்கி, "சுவாமி, எவ்வளவு நாள் நான் இவ்வாறு வருந்த வேண்டும்? விமோசனம் இல்லையா?" என்று கேட்க, அதற்கு அவர், "அப்பா உன் பர்ணசாலைக்கு அகஸ்தியர் ஒருதரம் வந்துசேருவார். அவருக்கு ஒரு தானம் செய்தால், உன் பாபம் நீங்கி இக்கஷ்டத்தினின்றும் நீ விடுபடுவாய்" என்று அனுக்கிரகித்தார்.

இப்படியிருக்கையில், ஒருநாள் சாயங்கால சமயத்தில் யாத்திரை செய்துவந்த அகஸ்தியர், தவறி இந்த வனத்திற்குள் புகுந்து, சுவேதனது பர்ணசாலையின் அருகே வந்துசேர்ந்தார். குளமோ மிக ரமணீயமா யிருந்தது. ஒரு மனிதன்கூட அவர் கண்ணிற் படவில்லை; பர்ணசாலையுள் புகுந்தார். அங்கும் ஒருவரையும் காணோம்! சூரியாஸ்தமன சமயமா யிருந்தாலும், அவ்விடம் நிச்சப்தமாகத் தபசுக்குத் தகுந்தாயிருந்ததாலும் அக்குளத்தில் மாலைக்கடனை முடித்துக்கொண்டு பர்ணசாலையில் அன்றிரவு தங்கினார். விடியற்காலம் அனுஷ்டானத்திற்காக எழுந்து அவர் குளத்தைப் பார்த்தார். அதில் பிணம் ஒன்று மிதக்கக் கண்டார். "இப்பர்ணசாலையில் தவம் புரிந்துகொண்டிருந்தவன், நான் வரும்முன் காலகதியால் குளத்துள்

விழுந்து மாண்டானோ? என்று திகைத்து நின்றார். உடனே ஆகாயத்தில் ஒரு திவ்ய விமானம் தோன்றியது. அதில் அப்ஸரஸுகளால் மரியாதை செய்யப்பட்ட ஒரு திவ்விய புருஷன் வீற்றிருந்தான். விமானம் குளக்கரை வந்ததும், மிதந்த பிணம் அவன் அருகே வந்தது; மிகுந்த ஆவலுடன் அவன் அதைப் புசித்தான். "இந்தத் திவ்விய புருஷனுக்கு இந்நிலை எவ்வாறு வந்தது?" என அகஸ்தியர் பரிதவித்தார். அவனை அணுகி அவன் வரலாற்றை அவர் விசாரித்தார். அவனுக்கு அப்பொழுது பிரமாவின் அனுக்கிரகம் ஞாபகத்தில் வர, இந்த நிர்ஜனமான காட்டில் ஒரு நாளும் இல்லாது, இன்று திடீரென்று தோன்றியவர் தன்னைக் கரையேற்ற வந்த அகஸ்தியராகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்தான். "நான் பரோபகார சிந்தையே இல்லாது தபசுசெய்து இறந்தேன். இவ்வாறு செய்ததால் அடங்காப் பசிதாகம் என்னைச் சுவர்க்கத்திலும் பீடிக்க, எந்தத் தேகத்தைப் பரோபகாரமின்றிக் கொழுப்பேறும்படி செய்தேனோ, அதைத் தின்றே பசியாறும்படியான நிலை எனக்கு வந்தது" என்று சொல்லிப் பரிதவித்துத் தன் கழுத்திலிருந்த உயர்ந்த ஆபரணம் ஒன்றை எடுத்து, "உங்களைக் கண்டேன்! என் பாபம் என்னை விட்டகன்றது. இனி இக்கொடிய பசிதாகம் என்னை அணுகாது. இந்தத் தானத்தை வாங்கிக்கொண்டு என்னை விடுவிக்கவேண்டும்" என்று மிகுந்த அன்புடன் கூறி அகஸ்தியருக்கு மகா விநயத்துடன் அதைத் தானஞ் செய்தான். பிணம் தின்னும் கோரத்தொழில் அன்றோடு அவனைவிட்டு அகன்றது; பசிதாகமும் நீங்கின.

அவன் சுவர்க்கம் சென்று சுகமாக வாழ்ந்திருந்தான்.

பரோபகாரமற்ற தவம் பெரும்பாலும் வீணேயாம்.

— இராமாயணம், உத்தர காண்டம்.

7. நன்மை கஷ்டம் விளைத்தது (1)

விசுவாமித்திரரிடம் காலவர் என்ற ஒரு ரிஷி சிஷ்யராக இருந்தார். இவர் வெகுகாலம் அவரிடமிருந்து கல்வி கற்றும், பணிவிடை செய்தும் அவருக்கு மிகுந்த திருப்தியை உண்டாக்க, அவர் மிகுந்த சந்தோஷத்துடன் கிருகஸ்தாசிரமத்தை மேற்கொள்ளும்படி காலவருக்கு உத்தரவு செய்தார். அப்பொழுது, அவருக்குத் தகுந்த குருதட்சிணை கொடுக்கவேண்டும் என்று காலவருக்கு ஆவல் பிறந்தது. அதைக் குருவினிடம் தெரிவித்தார். அதற்கு அவர், "அப்பா, என்னிடம் நீ இவ்வளவு காலம் ஒழுங்காக நடந்துகொண்டதே குருதட்சிணைக்குச் சமானம்; மேலும் நீ ஏழை; வீணாகப் போவல்கொண்டு வருந்தாதே. எனக்கு யாதொரு தட்சிணையும் வேண்டுவதில்லை" என்று பல வாறாகப் புத்திமதிகூறி, காலவரைத் திருப்ப முயன்றார். என்ன சொல்லியும், காலவர் பிடிவாதமாய் இருந்தது கண்டு, அவர், "தேகமெல்லாம் வெளுத்ததாயும், ஒரு காது மாத்திரம் கருத்ததாயுமுள்ள எண்ணூறு குதிரைகள் எனக்கு வேண்டும். கொண்டுவா, பார்ப்போம்" என்று கேட்டார். உடனே காலவர், இவைகளைச் சம்பாதித்துவரப் புறப்பட்டார். இவர் தேடிய விடங்களில் இவை அகப்படாமற் போக,

கருடனது சகாயத்தால் உலகெங்கும் சுற்றிப் பார்த்தார். மிகக் கஷ்டப்பட்டுச் சுற்றிவருகையில் யயாதி ராஜனிடம் வந்துசேர்ந்தார். இவன் தன்னிடம் குதிரைகள் இல்லையெனக் கூறி, அவைகளைச் சம்பாதிக்கும் உபாயத்தைச் சொல்லிக்கொடுத்தான். இதன் பின்பும், காலவர் மிகுந்த கஷ்டப்படவேண்டி வந்தது. என்ன செய்தும், அவருக்கு 600 குதிரைகளுக்குமேல் கிடைக்கவில்லை. மேல் ஒன்றும் தோன்ருது, காலவர் திகைத்து நிற்கையில் கருடன் தோன்றி, ''நீர் விசுவாமித்திரர் காலிலேயே விழுந்து உமது கஷ்டத்தைச் சொல்லி, 'இன்னும் 200 குதிரைகள் கிடைக்கவே இல்லை. ஆதலால் அவைகளைத் தந்துவிட்டதாகக் கொள்ளவேண்டும்' என்று மன்ருடும்; வேறு வழியில்லை'' என்று புத்திமதி கூறிற்று. அதன்படியே காலவர் செய்துமுடித்தார். இவ்வளவு கஷ்டப்பட்டுக் காலவரிஷி குருதட்சிணை கொடுத்தல் என்ற சன்மார்க்கத்தில் நிலைபெறவேண்டி வந்தது. இவர் செய்தது நன்மையாயினும், குருவின் சொல்லுக்கு விரோதமாகப் பிடிவாதம் பிடித்தமையால் இவ்வளவு துக்கத்திற்கு இவர் ஆளாகவேண்டி வந்தது.

சன்மார்க்கத்திலும் வீண் பிடிவாதம் ஆகாது.

— மஹாபாரதம், உத்தியோக பர்வம்.


8 நன்மை கஷ்டம் விளைத்தது (2)

முன்னொரு காலத்தில் உத்தங்கர் என்று ஒரு ரிஷி இருந்தார். இவர், குருகுலவாசம் செய்த காலத்து குருவினது அக்கினியை மிகுந்த சிரத்தையோடு பாது காத்துவந்தார். இவரது குரு, மற்றைய சிஷ்யர்களுக் கெல்லாம் குருகுல வாசம் தீர்ந்ததும் விடைகொடுத்து அவரவர் ஊர்களுக்கு அனுப்பிவிட்டார். இவர்மேலி ருந்த அன்பால் இவருக்கு மாத்திரம் அவர் உத்தரவு கொடுக்கவில்லை. குருகுலத்திலேயே இவர், வயது முதிருகிற வரையில் தங்கி, நாள் போவதுகூடத் தெரி யாது, குருவுக்குத் தொண்டு செய்துவந்தார். ஒரு நாள் விறகு சுமந்து வந்து போடுகையில் இவர் தலை மயிர் விறகு கட்டையில் சிக்கி வேரோடு பெயர்ந்தது. இவர் தேகம் தளர்ந்துபோ யிருந்தமையால் இந்த நோய் பொறுக்கமாட்டாது இவர் கண்ணீர்வடித்தார். இதைப் பார்த்திருந்த குருவின் பெண் தனது கையால் கண்ணீரையேந்திச் சூடு பொறுக்க மாட்டாது கீழே விட்டுவிட்டாள். இவைகளைப் பார்த்திருந்த குரு, சிஷ் யன் மனோநிலையை அறிந்து கிருகஸ்தனாக உத்தர வளித்து அவனுக்கு யௌவனம் வரும்படி செய்து தம் பெண்ணையும் விவாகம்செய்து கொடுத்தார்.

விவாகமானதும், உத்தங்கர் குருவுக்குத் தட் சிணை கொடுக்க யத்தனித்தார். குரு எவ்வளவு தடுத் தும் உத்தங்கர் பிடிவாதமா யிருக்க, தன் பெண்சா திக்கு வேண்டியதைக் கொடுத்து விடும்படி அவர் ஆஞ்ஞை செய்தார். ஸௌதாஸ ராஜன் பெண்சாதி காதில் அணிந்திருந்த நாகரத்தின ஓலை தனக்கு வேண்டுமென்று குரு பத்தினி கேட்க, அதற்கு



ஏகலைவன் குருதக்ஷிணையாகத் தனது வலது கைக்
கட்டைவிரலைக் கொடுத்தல்



கஜேந்திர மோக்ஷம்

இசைந்து, வசிஷ்ட சாபத்தால் காட்டில் மனிதரைக் கொன்று தின்றுவந்த ஸௌதாஸனிடம் வந்து, உத்தங்கர் தம் காரியத்தை வெளியிட்டார். அவன் உத்தங்கரைக் கொல்ல யத்தனிக்க, குருதக்ஷிணை கொடுத்துவிட்டு வருவதாகக் கூறி ஸௌதாஸனிடம் ஓர் அடையாளம் பெற்று அவன் மனைவியண்டை வந்து சேர்ந்தார். அவன் மனைவி, அடையாளத்தைக் கண்டதும் தன் ஓலையைக் கழற்றி உத்தங்கர் கையிற் கொடுத்து, அதை ஒருபோதும் கீழே வைக்கவே கூடாது என்று எச்சரிக்கை செய்தாள். இதை வாங்கிக்கொண்டு உத்தங்கர் அரசனிடம் வர, அப்பொழுது அவனுக்கு இராக்ஷஸ நிலை மாறியிருந்ததால் தன்னிடம் மறுபடி வரவேண்டியதே இல்லையென்று உத்தரவு செய்தான். போகும் வழியில் உத்தங்கருக்குப் பசி அதிகமாயிற்று. அருகிலிருந்த வில்வ மரத்தில் பழம் பழுத்துத் தொங்குவதைக் கண்டு, மரமேறி அவைகளைப் பறிக்க யத்தனித்தார். மடியிலிருந்த ஓலைகள் கீழே விழுந்தன. உடனே கீழேயிருந்த புற்றுக்கள் ஒன்றிலிருந்து ஒரு பாம்பு வெளிப்பட்டு அவைகளை எடுத்துக்கொண்டு மறைந்தது. புற்றை மூன்று நாள் உத்தங்கர் வெட்டிப் பார்த்தும் அவரது முயற்சிகள் எல்லாம் வீணாயின. பின்னர், இந்திரன் சகாயத்தால் பாதாள லோகம் சென்று, அங்கு ஒன்றும் செய்யமுடியாமல் தத்தளித்தார். அப்பொழுது இவர் ஆராதித்த அக்கினி, குதிரை ரூபமாக வந்து தன் காதில் ஊதும்படி வேண்ட, உத்தங்கர் அவ்வாறே செய்தார். உடனே நாகலோகமெல்லாம் புகை சூழ்ந்துகொள்ள, நாகங்கள் பொறுக்கமாட்டாது உத்

தங்கருக்கு ஓலேகளைக் கொண்டுவந்து கொடுத்தன. அவர் தமது குருபத்தினியிடம் அவைகளைக் கொண்டு வந்து சேர்த்தார். உத்தங்கர் நல்ல காரியத்தில் முயன்றும், வீண் பிடிவாதத்தால் படாத பாடுக ளெல்லாம் பட்டார்.

பெரியோர் வாக்குக்கு விரோதமாகச் செய்யும்
நன்மையும் கஷ்டங்களை விளைவிக்கும்

—மஹாபாரதம், ஆதி அசுவமேத பர்வங்கள்.

9. தர்ம சங்கடம்

பதினேழாம் நாள் பாரதப்போரில் கர்ணனைக் கொன்றுவிட்டுத்தான் அர்ஜுனன் தம்மிடம் வரு வான் என்று தருமபுத்திரர் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். தருமபுத்திரரது க்ஷேமத்தை விசாரித்துவிட்டு, பின்னர் கர்ணனைக் கொல்லலாம் என்று அப்பொழுது அர்ஜுனன் தருமபுத்திரரிடம் வந்தான். அர்ஜுனன் வந்த விதத்தை யறிந்த தருமபுத்திரருக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. அர்ஜுனனையும் அவன் காண்டீவத்தையும் வாய் ஓயப் பழித்துவிட்டார். அர்ஜுனன் தன் காண்டீவத் தைப் பழித்தவர்களை உயிருடன் விடுவதில்லையென்று சபதம் செய்திருந்தான். இதை நிறைவேற்ற, தரும புத்திரரைக் கொல்லவேண்டுமென்று எண்ணி உடை வாளை உருவினன். கண்ணபிரான் அவனைப் பார்த்து நகைத்து, "என்ன காரியம் செய்யப்போகிருய்?" என்று கேட்டார். "காண்டீவத்தைப் பழித்தவனைக் கண்டம் துண்டமாய் வெட்டி எறிந்து என் சப

தத்தை நிறைவேற்றப் போகிறேன். இதுதானே க்ஷத்திரிய தர்மம்" என்று மிகுந்த பாபரப்புடன் அர்ஜுனன் கூறினன். "காண்டீவத்தைப் பழித்தவர் உன் தமையனுயிற்றே; தமையனைக் கொல்வது தருமமா?" என்று பகவான் கேட்டார். "க்ஷத்திரியருக்குத் தம் சபதமே முக்கியம். சபதத்தைக் காப்பதே தருமம்" என்று அர்ஜுனன் யுக்தி உரைத்தான். அதற்குப் பகவான், "இப்பொழுது உனக்கு இரண்டு தருமங்கள் எதிர்ப்பட் டிருக்கின்றன. அவையாவன:- சபதம் காத்தல், தமையனைக் கொல்லாமை. இவைகளுள் ஒன்றைக் கடைப்பிடித்தால் மற்றொன்றுக்கு விரோதம் வருகிறது. ஏதாவதொன்றை நீ கடைப்பிடித்தே தீரவேண்டும். இந்தத் தர்மசங்கடத்தில் என்ன செய்வது என்று தீரயோசித்தே செய்யவேண்டும். அவசரப்பட்டு ஏதாவதொன்றைச் செய்துவிட்டுப் பின்னர் வீணுகத் துக்கிப்பதில் பயனில்லை" என்று விஸ்தாரமாக அப்பொழுது வந்திருக்கும் தருமசங்கடத்தின் சொரூபத்தை நன்ருக வெளிப்படுத்தினுர். 'தருமத்தைக் கைவிடலாகாது' என்று தோன்றிய அர்ஜுனனுக்கு அப்பொழுது இன்ன தருமத்தைக் கைக்கொள்வதென்று விளங்கவில்லை. 'நீரே எனக்குக் கதி' என்று பகவானை நோக்கி விண்ணப்பம் செய்துகொண்டான். 'இப்பொழுது உன் சபதத்தைக் காக்காவிட்டால் உனக்குத் திருப்தி வராது. சபதத்தைப் பூர்ணமாக நிறைவேற்றிவிட்டால் தமையனைக் கொன்றுவிட்டோமே என்ற மீளாத் துக்கத்திற்கு ஆளாகி நீ இறப்பாய். ஆகவே உன் சபதத்தையும் ஒருவாறு நிறைவேற்ற வேண்டும். உன்

தமையனையும் கொல்லக்கூடாது. சாஸ்திரத்தில் பெரியோர்களைச் சிறியோர் ஏகவசனமாய் வாயில் வந்தபடி இகழ்ந்து பேசிவிட்டால், அவர்களைக் கொன்றதற்குச் சமானம் என்றிருக்கிறது. ஆதலால் உன் வாயில் வந்த படி உன் தமையனுரை இப்பொழுது ஏகவசனத்தில் ஏசிவிடு. இதுவே இப்பொழுது செய்யத்தக்கது" என்று பகவான் வழிகாட்டினர். அவ்வாறே அர்ஜுனன் செய்து, "என் இப்படிச் செய்துவிட்டோம்" என்று பின்பு துக்கத்தை அடைந்தான்.

தர்மசங்கடங்களில், தாழ்ந்த தர்மத்தை முற்றிலும் கடைப்பிடியாது உயர்ந்த தருமத்தை முக்கியமாகக் கைக்கொள்ளவேண்டும்.

— மஹாபாரதம், கர்ண பர்வம்

10. மௌனத்தின் சிறப்பு

மூன்று ரிஷிகள் சுவர்க்கம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். போகும் வழியில் ஒரு பருந்து, பாம்பு ஒன்றைத் தூக்கிப்போவதைக் கண்டார்கள். அப்பொழுது ஒரு ரிஷி, "இது என்ன துக்கம்! இந்தப் பஞ்சையான பாம்பு, அநியாயமாய் இந்தப் பருந்தின் வாயில் அகப்பட்டு வருந்துகின்றதே" என்று சொல்லிப் பரிதவித்தார். உடனே அவர் பூமியை நோக்கி விழுந்துவிட்டார். இதைக் கண்ட மற்றொரு ரிஷி, "இக்கொடிய பாம்பிற்கு இம்முடிவே தகுந்தது" என்று சொல்ல, அவரும் கீழே விழுந்து விட்டார். மூன்றும் ரிஷி, "பிரபஞ்ச விசித்திரத்தின் நியாயா நியாயங்களை எடுத்துக்கூற நமக்கு என்ன

வல்லமை இருக்கிறது? உண்டென்று சொல்வதற்கும், இல்லையென்று சொல்வதற்கும் நமக்கு என்ன அதிகாரம்? பகவானால் சிருஷ்டிக்கப்பட்டு அவராலேயே பாலிக்கப்பெற்றதாகிய இவ்வுலகில் நடக்கும் விஷயங்களை அநியாயம் என்றுகூற நமக்கு அதிகாரம் இல்லை. நியாயம் என்று கூற எவ்வாறு மனந்துணியும்? அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆகையால், நடப்பவைகளைக்கண்டு மனங்கோணாது, செய்வன செய்து பொறுமையுடன் இருத்தலே நமது கடமை" என்று எண்ணமிட்டுக்கொண்டு மனதைச் சமாதானப்படுத்தி மௌனமாக விருக்க, யாதொரு கஷ்டமுமின்றிச் சுவர்க்கம் சென்றடைந்தார். மௌனமே பெரியோர் மனத்துள் வரம்பின்றிக் குடிகொண்டிருக்கும் ஞானத்திற்கு வெளியே தோன்றும் ஓர் அடையாளமாக விருக்கின்றது.

மோன மென்பது ஞான வரம்பு.

— ஹிதோபதேசம்.

11. தருமம் அதர்மமானது

இரண்டு நதிகள் சேருமிடத்திலிருந்த ஒரு கிராமத்தினருகில் வேதசாஸ்திர சாரங்களை அறிந்த கௌசிகன் என்ற அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் 'ஸத்யம் வத' என்ற உபநிஷத் வாக்கியத்திற் கேற்ப எப்போதும் உண்மையை உரைக்கவேண்டும் என்ற விரதம் கொண்டவன். இவன் நடத்தையால் இவனுக்கு மிகுந்த கீர்த்தியுண்டாக, அது ஊரெங்கும் பரவியது. வழிபறிக்கும் திருடர்களுக்குக்கூட கௌசிகன் சத்தியஸந்தன் என்பது தெரிந்திருந்தது. இப்படி

யிருக்கையில் ஒருநாள் இரவில் அநேகர், திருடர் கூட்டங்களால் துரத்தப்பட்டு ஓடிவந்து இக்கௌசிகன் இருந்தவிடத்திற்கு அருகாமையிலிருந்த ஒரு காட்டிற் புகுந்து ஒளிந்துகொண்டார்கள். இதை அவன் பார்த்துக்கொண்டே இருந்தான். கொஞ்ச நாழிகையான பின்பு, துரத்திவந்த திருடர்கள் அங்கு ஓடிவந்தார்கள். அவர்கள் கௌசிகனைக் கண்டு, "ஐயா சத்தியவானே! எங்களுக்குப் பயந்து ஓடிவந்த ஜனங்கள் எங்கே போயினர்? நீர் எப்பொழுதும் உண்மை உரைப்பவர் அல்லவா? இந்த விஷயத்தில் உண்மையை எங்களுக்குக் கூறும்" என்று கேட்டார்கள். தருமத்தின் சூக்ஷ்மத்தை அறியாத கௌசிகன், தான் பார்த்திருந்தவைகளை எல்லாம் ஒளிக்காது சொல்லி, ஜனங்கள் மறைந்துகொண்டிருந்த காட்டையும் காட்டிவிட்டான். உடனே திருடர்கள் அங்கு சென்று, அவர்களை எல்லாம் இரக்கமின்றி வெட்டிச் சாய்த்து அவர்கள் சொத்தை யெல்லாம் வாரிக் கொண்டுபோயினர். இவ்வாறு கொடிய பாபம் இக் கௌசிகனால் சம்பவித்தமையால், அவன் நரகில் வீழ்ந்து வெகுகாலம் கஷ்டப்பட்டான். இங்குசத்தியம் உரைத்தல் என்ற தருமமானது சமயத்திற்கேற்ப அசத்தியம் உரைத்தலா லுண்டாகும் பலனைக்கொடுத்தது. கள்வர்கள் கேட்டசமயத்தில், 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்று சொல்லி கௌசிகன் தப்பித்துக் கொண்டிருந்த போதிலும் அவனுக்கு இக்கொடிய நரகம் வந்திராது.

பெருங்கேடு விளைக்கும் தர்மம் அதர்மமே.

— மஹாபாரதம், கர்ண பர்வம்.

12. அதர்மம் தர்மமானது

பலாஹகன் என்ற வேடன் ஒருவன் இருந்தான். அவன் தன் குடும்பத்தை வகிப்பதற்காகக் காட்டில் தன் ஜாதித் தொழிலின்படி வேட்டையாடி வந்தான். தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் வேண்டிய அளவு மாமிசம் கிடைத்துவிட்டால், உடனே வேட்டையை நிறுத்திவிடுவான். அவன், எப்பொழுதும் வேட்டையாடுவதில் வெறிகொண்டு, கொலைத்தொழிலை இரக்கமின்றிச் செய்துவரும் கொடிய கிராதகர்களைப் போன்றவன் அல்லன். இத் தர்மாத்மாவான வேடன் ஒரு நாள் தன் குடும்ப உபயோகத்திற்காக வேட்டைக்குப் புறப்பட்டான். காடெங்கும் ஓடியாடித் தேடினான். ஒரு மிருகம் கூட அவனுக்கு அன்று அகப்படவேயில்லை. பொழுதோ அதிகமாகிவிட்டது. தனது தாய் தந்தையர்களை ரக்ஷிக்கும் வகை இன்னதென்று அறியாது ஒரு குளக்கரையில் வந்து அவன் திகைத்து நின்றான். அப்பொழுது கொஞ்ச தூரத்தில் ஒரு குருட்டு மிருகம் தண்ணீர் குடித்துக்கொண் டிருப்பதைக் கண்டான். உடனே குடும்ப ரக்ஷணம் செய்ய வேண்டுமென்ற தருமத்தைக் கைக்கொண்டு, குருட்டு மிருகங்களைக் கொல்லலாகாது என்ற தருமத்தையும் கவனியாது அந்த மிருகத்தை அவன் கொன்றான். அந்த மிருகம் தபோபலத்தால் மற்றைய மிருகங்களைக் கொன்று, காட்டிலுள்ள சகல ஜீவஜந்துக்களுக்கும் யமன்போல உலாவி வந்துகொண் டிருந்தது. வேடனால் இது அடிபட்டுமாளவும், காட்டிலிருந்த மற்றைய பிராணிகளின் துக்கம் அன்றோடு நீங்கியது. வேடன் சுவர்க்கம் அடைந்து சுகம் பெற்றான். ஆதலால்,

"அஹிம்ஸா பரமோ தர்ம:" என்ற விதிக்கு விரோதமாக, வேடன் குருட்டு மிருகத்தை அடிக்கும்படி நேரிட்டபோதிலும் அதனாலேயே குடும்ப ரக்ஷணம் என்ற தருமத்தையும், பிராணிகளது துக்க நிவிர்த்தி என்ற ஹிதத்தையும், செய்து முடித்ததால் அவன் செய்த அதர்மம் சந்தர்ப்பத்திற்கேற்ப தர்மத்தின் பலனைக் கொடுத்தது. இவன் அந்தக் குருட்டு மிருகத்தைக் கொல்லாது கருணையுடன் விட்டிருந்தால் இவனுக்கு இச்சமயத்தில் மிக்க சிரமம் நேர்ந்திருக்கும்.

போதுநன்மைக்காக ஏற்படும் அதர்மமும் தர்மமேயாம்
— மஹாபாரதம், கர்ண பர்வம்.

13. பிடிவாதத்தால் நன்மை விளைதல்

கௌசிகர் என்பவர் ஒரு பெரிய அரசர். அவர் தமது பரிவாரங்களுடன் காட்டில் வேட்டையாடச் சென்ற காலத்தில் மிகக் களைப்படைந்து வசிஷ்டரது ஆசிரமம் வந்துசேர்ந்தார். அவர்கள் எல்லோருக்கும் விருந்தளிப்பதாக வசிஷ்டர் ஒப்புக்கொண்டு காமதேனுவை வரவழைத்து விமரிசையாய் எல்லோருக்கும் விருந்து செய்வித்தார். இதைக்கண்ட கௌசிகர், "காட்டில் தனிமையாய் இருந்து, தவம் செய்யும் ரிஷிகளுக்குக் காமதேனுவைப் போன்ற அருமையான பொருள் எதற்கு? எங்களைப்போன்ற அரசர்களிடம் இது இருந்தால் அன்றோ, மிகுந்த உபகாரமாயிருக்கும்" என்றார். அதற்கு வசிஷ்டர், "இப் பசு எங்களுக்குச் சொந்தமல்ல; இது எல்லா ரிஷிகளுக்கும் பொது; நாங்களாக, வேண்டும் என்று பிரார்த்தித்துக்

கிடைத்த வஸ்துவல்ல; ஆதலால் என்னால் அதைக் கொடுக்கவே முடியாது. அது வந்தால் அழைத்துக் கொண்டு போ" என்று சொல்லிவிட்டார். கௌசிகர் காமதேனுவைப் பிடித்துக் கட்டியிழுத்துக் கொண்டு போகும்படி பரிவாரங்களுக்கு உத்தரவு செய்தார். அது வசிஷ்டரது நோக்கத்தை உணர்ந்து, அவர் அனுமதியின்பேரில் தனது தேகத்திலிருந்த ரோமக்கால்களிலிருந்து அநேகம் ஆயிர வீரர்களைச் சிருஷ்டித்துத் தன்னைப் பிடிக்க வந்தவர்களைச் சின்னபின்னப் படுத்தித் தப்பித்துக் கொண்டது. மிகுந்த வெட்கமடைந்த கௌசிகர், தமது ஊர்சென்று பெரிய படைகளை ஏராளமாகச் சேர்த்துக்கொண்டு வசிஷ்டரை எதிர்த்துச் சண்டைசெய்ய வந்தார். இதைக் கண்ட வசிஷ்டர் பிரமதண்டத்தை தமக்கு முன்னே ஊன்றி, அதன் பின்புறம் சாந்தமாக உட்கார்ந்துவிட்டார். கௌசிகர் விட்ட அஸ்திரங்களெல்லாம் வசிஷ்டர்மேல் தாக்காது, அவர் பிரமதண்டத்தால் விழுங்கப்பட்டன. தம் சக்தியெல்லாம் வீணானது கண்டு கௌசிகர் மிகுந்த கோபங்கொண்டு, கொடிய தவம் தாம் செய்தாகிலும், நினைத்த காரியத்தை நிறைவேற்றத் தீர்மானித்தார். இடையில் அவருக்கு நேர்ந்த இடையூறுகளுக்கோ அளவில்லை. அவர் அவைகளையெல்லாம் ஒரு பொருட்டாக மதியாது முடிவில் காரியசித்தி பெற்றார்.

நன்மையெல்லாம் நன்மையாய் முடியும்.

— இராமாயணம், பால காண்டம்.

V. மத விஷயம்

14. ஸ்வதர்ம அனுஷ்டானம் (1)

ஓர் ஊரில் கௌசிகன் என்ற பிரமசாரி ஒருவன் இருந்தான். அவன் ஒரு மரத்தடியில் ஹடயோகாப்பியாசம் செய்து காலம் கழித்துவந்தான். இடை இடையே தேகத்தைக் காப்பதற்காக அருகாமையிலிருந்த கிராமத்தில் பிக்ஷை எடுத்தல் முதலியன செய்யக் கொஞ்சநேரம் வருவான். ஒருகால் இவன் மரத்தடியில் யோகாப்பியாசம் செய்துகொண் டிருக்கையில் அவன் மேலே சில இலைகள் உதிர்ந்தன. யோகம் கலைந்து மேலே நோக்கினான். அவன் கோப விழிகளுக்கு அம்மரத்தின் மேலிருந்த ஒரு கொக்கு விஷயமாயிற்று. அப்பொழுது அவன் கண்ணிலிருந்துவந்த கோபக்கனலால் அது எரிந்து சாம்பராகி விழுந்தது. "ஏது நமது யோகம் பலித்துவிட்டதே!" என்று கௌசிகன் கர்வங்கொண்டான்.

மிக்க சந்தோஷத்துடன் இவன் கிராமத்துக்குள் சென்று ஒரு வீட்டிற்புகுந்து, 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று சொல்லிக்கொண்டு நின்றான். உடனே, "சற்றுப் பொறு" என்று ஒரு சத்தம் உள்ளேயிருந்து வந்தது. சற்றுப் பொறுத்தான். "ஏதோ கிருகணிக்கு அதிக வேலைபோ லிருக்கிறது. இரண்டொரு வீடு போய் மறுபடி வருவோம்" என்று எண்ணுவது வழக்கமா யிருந்த அவனுக்கு, "நம்மைக் காக்க வைக்கலாயிற்றே ஓர் அற்பப் பெண்?" என்ற கோபம் அன்று வந்துவிட்டது. முகம் சிவந்து வியர்க்

கத் தொடங்கியது. "அவள் வரட்டும். அவளை என்ன செய்துவிடுகிறேன் பார்" என்று இருந்து காத்துக்கொண்டிருந்தான். இதற்குள் இருகனி பிக்ஷை எடுத்துக்கொண்டு வெளியே வந்து கௌசிகனுக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பினள். கோபத்தால் கௌசிகன் ஒரு கணைப்புக் கணைத்தான். உடனே அவள் திரும்பி, "ஐயா நான் கொக்கல்ல! ஏன் இவ்வளவு கோபம்! என் தருமத்தை அனுஷ்டித்து முடிக்க இவ்வளவு நேரம் ஆயிற்று. இதுவரையில் உம்மைக் காக்கவைத்தேனு? இன்று நீர் வரும் தருணத்தில் என் கணவனும் வந்துவிட்டபடியால் இவ்வாருயிற்று. வீண் கோபம் எதற்கு?' என்று சாந்தமாகக் கூறினள்.

"காட்டில் நான் கொக்கை எரித்தது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கௌசிகன் கேட்டான். "எனக்கு உமது யோகம் ஒன்றும் தெரியாது. கணவனைப் பேணுதல் என்னும் கற்புடைய மாதர் கடமையிலேயே நான் முக்கியமாகப் பழகிவருகிறேன். இந்தத் தர்மானுஷ்டானத்தால் நீர் கொக்கை எரித்தது தெரியவந்தது. மற்றைய விவரங்கள் ஒன்றும் எனக்குத் தெரியாது. உமக்குத் தெரியவேண்டுமாகில் மிதிலா நகரத்தில் ஒரு வியாதன் இருக்கிறன். அவன் ஒரு கசாப்புக்கடைக்காரன். அவனிடம் வேண்டுமானுல் போம்" என்று கூறி வீட்டுக்குள் போய்விட்டாள். கர்வம் அடங்கிய கௌசிகன், "இவளிடமே இவ்வளவு சிறப்பிருந்தால் வியாதனிடம் எவ்வளவு சிறப்பு இருக்கவேண்டும்!" என்று எண்ணமிட்டுக்கொண்டு மிதிலா நகரம் சென்

றான். இவனைக் கண்டதும் தர்மவியாதன், இவன் விஷயமாக நடந்தவைகளை எல்லாம் முன்னர் எடுத்துக் கூறி, பின்னர் தான் கசாப்புத்தொழிலில் இருந்த போதிலும் தனக்கு இம்மாதிரியான மேன்மை வருவதற்குத் தன் ஸ்வதர்ம அனுஷ்டானமும், தாய் தந்தையரை வழிபடுதலுமே முக்கிய காரணங்கள் என்று தன் தாய்தந்தையர்களை அவனுக்குக் காட்டினான்.

ஒருவனது ஸ்வதர்மம் எப்படி யிருந்தபோதிலும், அதை அனுஷ்டிக்கும் விதத்தாலேயே அவன் ஏற்றத் தாழ்வு வெளியாகும்.

— மஹா பாரதம், ஆரண்ய பர்வம்.

15. ஸ்வதர்ம அனுஷ்டானம் (2)

மஹாபாரத யுத்தம் தொடங்கிய காலத்தில், அர்ஜுனன் கிருஷ்ணபகவானை நோக்கி, "இருபக்கத்திலுமுள்ள சேனைகள் முதலியவற்றை நான் பார்க்கவேண்டும். இரண்டு சேனைகளுக்கும் மத்தியில் இரதத்தைக் கொண்டுபோய் நிறுத்தும்" என்று கேட்டுக்கொண்டான். பகவான் அவ்வாறே செய்ய, அப்பொழுது அர்ஜுனன் திரும்பிய இடங்களிலெல்லாம் உறவினர்களும், ஆசாரியர்களும், சிநேகிதர்களும், மரியாதை பெறத் தகுந்த மற்றையோரும் நிறைந்திருப்பதைக் கண்டான். உடனே, "இவர்களை எல்லாம் கொன்று நாம் ராஜ்யம் அடையும்படி ஆயிற்றே" என்ற எண்ணம் தோன்ற, அவனுக்கு மிகுந்த துயரம் உண்டாயிற்று. அப்பொழுது பகவானை நோக்கி, "கொலைத் தொழிலைச் செய்து கீர்த்திபெறுவதை விட,



ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்தல்



ஸ்ரீ கிருஷ்ண பகவான், துரியோதனன் சபையில்
விசுவரூப மெடுக்கும் தருணம்

சந்நியாசம் பெற்று ஒருவருக்கும் யாதொரு தீங்கும் செய்யாது பரமபதம் பெறத் தவம் செய்வதே மேன்மை எனத் தோன்றுகிறது'' என்று மிகுந்த பரபரப்புடனும், துக்கத்துடனும் கூறித் தனது வில், அம்பறாத்தூணி முதலியவைகளைக் கீழே நழுவ விட்டுவிட்டுத் தேர்த்தட்டில் மூர்ச்சையாக விழுந்துவிட்டான். அப்பொழுது பகவான் அவனைத் தேற்றி, ''க்ஷத்திரியனது தருமம் நியாயமான சண்டையைச் செய்து தீர்க்கவேண்டும் என்பதே. இந்த யுத்தமும் முன் பின் யோசிக்காது ஏற்பட்டதல்ல; வேறு கதியில்லை யென்று முடிவானதாகப் பின்பற்றப்பட்ட உபாயமே. மேலும், ஜாதியில் நீ க்ஷத்திரியன்; சந்நியாசம் பிராமணனது தருமம்; விபரீதமான துக்க சமயத்தில் புத்தி கலங்கியிருப்பதால் உனக்கு உன் தருமத்தை விட்டு வேறு ஜாதியார் தருமத்தைச் செய்ய வேண்டும் என்று தோற்றுகிறது போலும்! சண்டை வேண்டாம் என்று உன்னை திருப்பிக் கொண்டுபோய் விட்ட போதிலும், இக்கலக்கம் மாறியதும், உன் புத்தி சண்டையிலேயே பிரவர்த்திக்கும். ஆதலால் ஒருவன் தருமம், எவ்வளவு தாழ்ந்ததாய் இருந்த போதிலும், எக்காலத்திலும் நியாயப்படி மிகுந்த சிரத்தையுடன் அதை அனுஷ்டிப்பதே மேலானது; பிறர் தருமம் எவ்வளவு சிறந்ததாய் இருந்த போதிலும், அதை எந்த அவஸ்தையிலும் அனுஷ்டிக்க முயலவே கூடாது. பிறர் தருமத்தை முற்றிலும் ஒழுங்காய் அனுஷ்டிப்பதை விட, தன் தருமத்தை உள்ளபடி அனுஷ்டிக்க முயன்று, அதை அரை குறையாய்ச் செய்தாலும் அதுவே மேலானது'' என்று பலவாறுக

ஸ்வதர்ம அனுஷ்டானத்தைப் பற்றிக் கூறி, அர்ஜுனன் மனத்தைத் தேற்றினர். அர்ஜுனன் மனந் தெளிந்து தன் குற்றத்தை உணர்ந்து துக்கம் நீங்கிச் சண்டை செய்து, பாரத யுத்தத்தில் ஜயமடைந்தான்.

செய்வன செய்தலே சிறப்பு உண்டாக்கும்.

— மஹாபாரதம், பீஷ்ம பர்வம்.

16. ஆச்சிரமச் சிறப்பு

ஓர் அரசன், தன் சபைக்குவந்த பேர்களையெல்லாம், "சந்நியாசம் பெரிதா? காருஹஸ்த்யம் பெரிதா?" என்று கேட்பது வழக்கம். காருகஸ்த்யம் பெரிதென்று கூறித் தாபிக்க முடியாதவர்களை, கிருகஸ்தாச்சிரமத்தை நன்ருய் அனுஷ்டித்துப் பார்க்கும் படியும், சந்நியாசம் பெரிதென்று கூறித் தாபிக்க முடியாதவர்களை, விவாகம் செய்துகொண்டு கிருகஸ்தர் ஆகும்படியும் வற்புறுத்தி வந்தான். ஒரு நாள் அவன் தன்னிடம் வந்த ஒரு சந்நியாசியை நோக்கி இதே கேள்வியைக் கேட்க, "நடத்துகிறபடி நடத்தினுல் ஒவ்வொன்றும் சிறந்ததே" என்று அவர் மறுமொழி கூறினர். "இதென்ன கோமட்டி சாட்சியா யிருக்கிறதே" என்று அரசன் பரிகாசம் செய்ய, "இதன் உண்மையைக் காட்டுகிறேன் வாரும்" என்று அரசனைக் கூட்டிக்கொண்டு அச் சந்நியாசி தேசாந்தரம் புறப்பட்டார்.

வழியில் ஓர்ஊரில் ராஜகுமாரிக்குச் சுயம்வரமொன்று நடந்துகொண்டிருந்தது. அந்த வேடிக்கையைப் பார்க்கப் போய் இவர்களிருவரும் ஒதுங்கி நிற்க, இது

போல் முன்னர் அநேகம் சுயம்வரங்கள் நடந்தும், ராஜகுமாரிக்குத் தக்க தலைவன் அகப்படாது வீணாயின யென்று அவர்களுக்குத் தெரிய வந்தது. இராஜகுமாரி ஒருவரையும் கவனியாது வேகமாய் வந்ததைப் பார்த்தவர்களுக்கு, இந்தச் சுயம்வரமும் அப்படியே ஆய்விடுமோ என்று தோற்றியது.

இராஜகுமாரி, இருவரும் நின்று கொண்டிருந்த இடம் நோக்கி வந்து, இவர்கள் அருகே இருந்த திவ்ய தேஜோவானான ஒரு சந்நியாசியின் கழுத்தில் மாலையிட்டாள். அந்தச் சந்நியாசி மாலையைச் சரேலென்று கழுத்திலிருந்து எடுத்து, "இதென்ன விபரீதம்! நான் சந்நியாசி யல்லவா? எனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்றார். "என் பெண்ணைக் கொடுக்கும்போது, சீராகப் பாதி ராஜ்யம் கொடுத்து எனக்குப் பிற்காலம் மற்றைய பாதியும் கொடுத்துவிடுவேன்" என்று அரசன் ஆசை காட்டினான். "எனக்கும் ராஜ்யத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று மாலையை உதறி எறிந்து விட்டு, சந்நியாசி ஓட்டம் பிடித்தார். "இவரையன்றி வேறொருவரையும் கனவில்கூட நினையேன்" என்று பின் தொடர்ந்தாள் ராஜகுமாரி. "சந்நியாசி யென்றால் இப்படியல்லவோ விருக்கவேண்டும்" என்று சந்தோஷித்து, வேடிக்கை பார்க்கவந்த சந்நியாசியும் அரசனும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

காட்டின் கிளைவழிகளை நன்குணர்ந்த சந்நியாசி அவற்றுள் ஒன்றனுட்புகுந்து திடீரென்று மறைந்துவிட்டார். இராஜகுமாரி காடெங்கும் அவரைத் தேடிக் காணாமல் தத்தளித்தாள். இதற்குள் அவர்களைப் பின்

தொடர்ந்து வந்த அரசனும் சந்நியாசியும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

அப்பொழுது மாலைப்பொழுதாக இருந்தமை யால் அருகேயிருந்த ஓர் ஆலமரத்தடியில் அன்றிரவு தங்கி, காட்டைவிட்டு அவனை மறுநாள் வெளியேற்றுவதாக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இம்மூவரும் தங்கிய ஆலமரத்தடியில், புறாவொன்று தன் பெட்டையோடும் சில குஞ்சுகளோடும் சுகமாய் வாழ்ந்திருந்தது. இவர்களைக் கண்டதும், "நமது வீட்டுக்கு, அதிதிகள் வந்து விட்டார்கள். இரவோ மிகக் குளிர்ச்சியா யிருக்கிறது. குளிர்காய இவர்களுக்கு எற்பாடு செய்யவேண்டும்" என்று ஆண்புறா கூறி, பல இடங்களிலும் அலைந்து திரிந்து, ஒரு இலேசான கொள்ளிக்கட்டையை அவர்கள்முன் கொண்டுவந்து போட்டது. அவர்கள் அருகேயிருந்த சருகுகளைச் சேர்த்துக் குளிர்காயத் தீமூட்டிக் கொண்டனர். அப்பொழுது ஆண்புறா மற்றப் புறாக்களை நோக்கி, "நாமோ கிருகஸ்தர்கள். அதிதிகளைச் சுகப்படுத்த வேண்டுவது நமது கடமை. நம்மிடத்தோ இப்பொழுது ஒன்றுமில்லை. என் தேகத்தைக் கொடுத்தாவது இவர்கள் பசியைத் தீர்க்க எண்ணுகிறேன்" என்று கூறி, எரியும் நெருப்புட் புகுந்து உயிர் விட்டது. அவர்கள் அதை எடுத்து உண்ண முயற்சி செய்வதைப் பார்த்த பெண்புறா, "இவ் வொன்றால் இம்மூவர் பசி எவ்வாறு அடங்கும்? கணவன் செய்யும் தர்மத்தை மனைவி பூர்த்திசெய்ய வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு அதுவும் நெருப்பினுள் புகுந்து உயிர் நீங்கியது. இவ்வாறு இரண்டு புறாக்க

ளும் நெருப்பில் விழவே, வியப்புடன் திகைப்படைந்த அரசனையும் இராஜகுமாரியையும் நோக்கி, அச் சந்நியாசி இப்புறாக்கள் கிருகஸ்த தருமம் அனுஷ்டித்த விதத்தை எடுத்துக்கூறி வியந்து கொண்டிருக்கையில், மிகுதியாயிருந்த குஞ்சுகளும், "நமது தாய்தந்தையர் தொடங்கிய தருமத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுவது நமது கடமை" என்று சொல்லிக்கொண்டே அக்கினியுள் பிரவேசித்தன. அவர்கள் என்ன முயன்றும், அவைகளைத் தடுக்க முடியவில்லை. தருமாத்மாக்களான புறாக்களைத் தின்ன அவர்களுக்கு மனம் வரவில்லை; இரவு முழுதும் பட்டினி கிடந்துவிட்டு விடியற்காலம் ராஜகுமாரியை அவள் ஊர்கொண்டுவந்து சேர்த்தனர். தமது ஊர்நோக்கிப் போகும்வழியில் அச்சந்நியாசி அரசனை நோக்கி, "சந்நியாசியென்றால், சுயம்வர சந்நியாசியைப்போல், வலியவந்த பெண் இராஜ்யம் முதலியவற்றைக்கூட ஒரு பொருட்டாக மதியாது தன் நிலையில் நிற்கவேண்டும்; கிருகஸ்தனானால், புறாவைப் போல அதிதிஸத்கார (விருந்தோம்பு) விஷயத்தில் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருக்கவேண்டும். இவ்விருவர் சிறப்பிற்கும் பேதமேயில்லை" என்று எடுத்துக்காட்டினார்.

உள்ளபடி அனுஷ்டித்தால் ஒவ்வொரு
ஆச்சிரமும் சிறந்ததே.

— மஹாபாரதம், சாந்தி பர்வம்.

17. ஸமதிருஷ்டி

ரந்திதேவர் சந்திரகுலத்திற் கீர்த்திபெற்ற ஓர் அரசர். அவர் கொஞ்சகாலம் இராஜ்ய பரிபாலனம் செய்து உலகவிஷயங்கள் அநித்யமென்ற வைராக்கிய மடைந்து, தன் ஐசுவரியங்கள் எல்லாவற்றையும் ஜாதி பேதமின்றி ஜனங்களுக்குத் தானம் செய்தார். பின்னர் மனையாளுடன் வனம் சென்று அங்கு வானப்பிரஸ்தாச்சிரமத்தி லிருந்து ஸத்கர்மங்களை யனுஷ்டித்துக் காலங்கழிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அவ்வாறே வனஞ்சென்று வானப்பிரஸ்தாச்சிரமத்திற் பழகிக்கொண்டு வந்தார். அப்படியிருக்கையில் நாற்பத்தெட்டுநாள் ஓர் உபவாஸ விரதமிருந்து நாற்பத்தொன்பதாம் நாள்காலையில், அவர் பாரணைக்கு வேண்டிய அளவு மிதமான ஆகாரம் சேகரித்துப் பாரணைசெய்ய யத்தனிக்கையில், ஒரு பிராமணன் மிக்கப் பசியுடன் வந்து தனக்கு ஆகாரம் கொடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டான். இந்தச் சமயத்திலும் அவர் தன் கஷ்டத்தைக் கவனியாமல் பாதி உணவை அந்தப் பிராமணனுக்குக் கொடுத்துவிட்டார். பின்னர், சதுர்த்தன் ஒருவன் பசியுடன்வர, அவர் அவனுக்கும் இரங்கி, மிகுதியாயிருந்த ஆகாரத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடுத்தார். அவன் போனதும், ஒரு நாய் வாலைக் குழைத்துக்கொண்டு பசியுடன் வந்தது. மிகுதியிருந்த உணவை அதற்குக் கொடுத்துவிட்டுத் தன் னிட மிருந்த சிறிய அளவு பாலைக் குடிக்க எண்ணும் தருணத்தில், மற்றும் ஒருவன் அவர் எதிர்வந்து, "எனக்கு அதிக தாகமாக இருக்கிறது; தாகம் தணிய ஏதாவது கொடுத்தால் உபகாரமாகவிருக்கும்" என்று

கேட்டுக்கொண்டான். இந்தச் சமயத்திற்கூட அவர் மனம் நொந்துகொள்ளாது, பாலை அவனுக்குக் கொடுத்துவிட்டு, "எனக்கு மோக்ஷம் வேண்டுவ தில்லை; உலகத்திலுள்ளோர் துயரமெல்லாம் என்னி டம் வந்துசேருவதால், அவர்களுக்குச் சுகம் ஏற்படு மாயின் நான் துக்கம் அனுபவிக்கச் சித்தமாக விருக் கிறேன். இப்படிச் செய்தால் எனக்கு அஞ்ஞானம் நீங்கிவிடும்" என்று கூறினர். அப்பொழுது பக வான் பிரத்தியக்ஷமாகி, அவருக்கு ஆறுதல் உண் டாகும்படி செய்ய அவர் மேலான பதவியை அடைந்தார். அவருடன் இருந்தவர்களும் சிறந்த பக்த சிரோமணிகள் ஆயினர்.

உலகம் முழுவதையும் ஒரே மாதிரியாய்ப் பார்ப் பார் உத்தமர்.

— ஸ்ரீமத் பாகவதம், 9-வது ஸ்கந்தம்.

18. குருபக்தி விசேஷம்

அஸ்தினபுரத்துக்கு அருகேயிருந்த ஒரு காட் டில் ஏகலவன் என்றவேடராஜன் ஒருவன் இருந்தான். அவன் துரோணசாரியருடைய வில்வித்தைச் சிறப் பைக் கேள்வியுற்று, அவரிடம் வில்வித்தை கற்க வேண்டும் என்று ஆவல்கொண்டான். நல்ல தருணம் பார்த்துத் துரோணரை அடுத்துத் தன் விருப்பத்தை யும் அவன் வெளியிட்டான். அர்ஜுனன்மே லிருந்த பக்ஷத்தால், ஏகலவனைத் துரோணர் சிஷ்யனாக ஒப்புக் கொள்ளவில்லை. அப்படியிருந்தும், ஏகலவனுக்குத் துரோணர்மேலிருந்த பக்தி மாறவில்லை. தன் சிலம்பக்

கூடம் சென்று துரோணரைப்போன்ற விக்கிரகம் ஒன்று செய்துவைத்து அதற்கு வந்தனை வழிபாடுகள் எல்லாம் முறைப்படி செய்துவந்தான். அதன் பின்னர், துரோணரே தனக்கு நேரில் வில்வித்தை சொல்லிக் கொடுப்பதாகப் பாவனை செய்துகொண்டு, அந்த விக்கிரகத்தின் சந்நிதானத்தில் விற்பயிற்சி செய்து வந்தான். துரோணர் அர்ஜுனனுக்கு இரகசியமாக எவ்வித அஸ்திரங்களை கற்றுக்கொடுத்தாரோ அவைகள் எல்லாம் பக்திவிசேஷத்தால் ஒழுங்காக ஏகலவன் மனதில் தோற்ற, அவைகளில் அவன் மிகுந்த தேர்ச்சியடைந்தான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் துரோணர் பாண்டவர்களை அழைத்துக்கொண்டு வேட்டையாடச் சென்றார். ஏகலவன் சிலம்பக்கூடத்தருகில் வரும்போது, அர்ஜுனனுடைய நாய் அதனுட் புகுந்து ஆபாசம் செய்தது. அதைக் கண்ட ஏகலவன் ஒரு விசித்திர பாணம்விட, அது நான்காகப் பிரிந்து நாயை நான்கு புறங்களிலும் காயப்படுத்தியது. நாய் குரைத்துக்கொண்டு அர்ஜுனனிடம் வர, நாயின்மேலிருந்த காயத்தை அர்ஜுனன் கண்டு, "நம்மிடம் இரகசியம் என்று சொல்லிக்கொடுத்த அஸ்திரம் வேறொருவரிடம் எவ்வாறு வந்தது?" என்று திகைத்து நின்றான். உடனே நாய் அவர்களை ஏகலவனிடம் அழைத்துச் சென்றது. அர்ஜுனன் அவனை நோக்கி, "நீ யார்?" என்று கேட்க, "நான் துரோணரின் சிஷ்யன்" என்று அவன் கூறித் துரோணருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து, தான் துரோணரிடமிருந்து அஸ்திரங்களைக் கற்றுக்கொண்ட விதங்களை விஸ்தாரமாக எடுத்துரைத்

துத் துரோணர் விக்கிரகத்தையும் காட்டித் தான் நாயை யடித்த காரணத்தையும் அவர்களுக்கு எடுத்துரைத்தான். துரோணர் அவன் பக்திக்கு மிகவும் மெச்சி ஒரு வேளை அவன் அர்ஜுனனுக்கு விரோதியாக வந்துவிடுவானோ என்று பயந்து, "உன் வலது கைக் கட்டை விரலை எனக்குக் குருதட்சிணையாகக் கொடு" என்று ஏகலவனைக் கேட்டார். அதற்கும் பின்னடையாது துரோணருக்குத் தன் வலதுகைக் கட்டை விரலை ஏகலவன் அர்ப்பணம் செய்து, தனது குருபக்தி விசேஷத்தை வெளிப்படுத்தினான்.

குருவை ஈசுவரனாகவே மதிக்கவேண்டும்.

—மஹாபாரதம், ஆதிபர்வம்.

19. ஈசுவரன் ஸர்வ வியாபி (1)

முற்காலத்தில் இரணியகசிபு என்ற ராக்ஷதன் ஒருவன் இருந்தான். அவன் கர்வியாயும், தெய்வம் உண்டு என்கிற நம்பிக்கை இல்லாத நாஸ்திகனாயும் இருந்தான். அவனுக்கு பிரகலாதன் என்ற ஸத் புத்திரன் ஒருவன் உண்டானான். நாரதர் அனுக்கிரகத்தால் அவன் சிறு வயதிலேயே மஹாவிஷ்ணுவினிடம் விசேஷ பக்தி செலுத்தி ஆராதனை செய்யும் குணமுடையவனாய் இருந்தான். நாஸ்திகனான பிதாவுக்கு இதைக் கண்டதும், மிகுந்த கோபம் உண்டாயிற்று. இப் பழக்கத்தை எப்படியாகிலும் நிறுத்திவிட வேண்டும் என்று அவன் பலவாறு முயன்று, பிரகலாதனை மிகுந்த கஷ்டப்படுத்திப் பார்த்தான். பிரகலாதன், பகவான் அனுக்கிரகத்தால் அந்தக் கஷ்டங்களி

லிருந்து தப்பித்துக்கொண்டு வருவதைக் கண்டு ஆச்சரியமடைந்த இரணியனுக்கு முன்னிருந்த கோபம் அதிகரித்தது. அப்பொழுது அவன் தனது சிங்காசனத்தை விட்டுக் கீழே இறங்கி, உருவின கத்தியும் கையுமாய் பிரகலாதன் அருகில் வந்து, "உனது ஹரியைக் காட்டு, பார்ப்போம்; அவரையும் உன்னையும் சேர்த்துக் கொன்றுவிடுகிறேன்" என்று கர்ச்சித்தான். சற்றேனும் அச்சமடையாத அச்சிறுவன், "அவர் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார்; அவர் எங்கும் இருப்பார்" என்றான்.

அப்பொழுது இரணியன் "இந்தத் தூணில் இருந்தால் அவன் உன்னை வந்து ரக்ஷிக்கட்டும்; நான் இப்பொழுது உன்னை வெட்டப்போகிறேன்" என்று கர்ச்சித்துக்கொண்டு அருகிலிருந்த தூணைக் காலால் உதைத்தான். உடனே அண்டங்கள் பிளக்கும்படியான சிரிப்புச் சப்தம் எழ, தூண் படீர் என்று பிளக்க, அதன் உள்ளிருந்து பகவான் நரசிங்க மூர்த்தியாக வெளிவந்து, கொடியவனான இரணியகசிபுவைக் கொன்று தமது பக்தனான பிரகலாதனைக் காப்பாற்றினார். இறக்குந் தருணத்தில் அவன் பகவானை நோக்கி வெகுவாறு துதித்து, "எனக்குப் புழு, புல், பூண்டு முதலிய தாழ்ந்த ஜன்மங்கள் வந்தாலும் வரட்டும்; அப்பொழுதும் உமது பக்தி என்னைவிட்டு அகலாதிருந்தாற் போதும்" என்று பிரார்த்தனை செய்து பகவான் கோபாவேசத்தை மாற்றினான்.

—பாகவதம், 7-வது ஸ்கந்தம்.

20. ஈசுவரன் ஸர்வ வியாபி (2)

மிருகண்டு என்ற ஒரு மஹரிஷிக்கு வெகுநாள் பிள்ளையில்லாதுபோக, அவர் பரமசிவத்தைக் குறித்துத் தவம் செய்து, ஸத்புத்திர னொருவனைப் பெற்றார். அந்தப்பிள்ளைக்கு மார்க்கண்டேயர் என்று பெயர். வயது வந்ததும், அவர் தமக்கு ஆயுள் கொஞ்சந்தான் இருக்கிறதென்று தமது பெற்றோரால் அறிந்துகொண்டு, வனம் சென்று அங்கே சிவலிங்க ரூபியாகிய கடவுளை மிகுந்த மனவுறுதியுடன் அவர் பூசித்து வந்தார். மார்க்கண்டேயர் முடிவு காலம் வந்ததும், யமன் தனது தூதர்கள் மூலமாய் அவர் உயிரைக் கவரப் பலவாறாக முயன்றான். ஒன்றும் பயன்படவில்லை; தானே அவர் தவம் செய்யும் இடம் வந்து பார்த்தான். அவரது தவக்கனலால் அவரிடம் அணுக முடியாமற் போக, யமன் அவரைப் பலவாறாக அழைத்துப் பார்த்தான். எல்லாம் வீணானமை கண்டு தனது காலபாசத்தைச் சுழற்றிப்போட யமன் யத்தனித்ததை நோக்கி, மார்க்கண்டேயர், "எங்கும் நிறைந்த பரம்பொருளே! நீரே கதி" என்று மிகுந்த பரபரப்புடன் சிவலிங்கத்தைக் கட்டிக்கொண்டார். அப்பொழுது யமன் முன்பின் யோசியாது, காலபாசத்தால், அவரையும் லிங்கத்தையும் சேர்த்து இழுக்கத்தொடங்க, லிங்கத்தினுள் ஒரு பெரிய சப்தம் உண்டாயிற்று. யமன் திடுக்கிட்டுத் திகைத்து நிற்கையில், லிங்கம் பிளந்து அதனுள்ளிருந்து பகவான் மிகுந்த கோபத்துடன் வெளியானார்; நெற்றிக்கண் திறந்தவண்ணமாகவே இருந்தது. கையில் இருந்த சூலத்தால் அவர் யமனைக் குத்தித் காலால் உதைத்

துத் தள்ளிவிட்டு, மார்க்கண்டேயரிடம் யமன் அனு காவண்ணம், அவருக்கு என்றும் பதினாறு வயதாக இருக்கும்படி அனுக்கிரகித்தார். மார்க்கண்டேயருக்கு அன்றுமுதல் யமபாதை நீங்கிவிட்டது.

— ஸ்காந்தம், சங்கர ஸம்ஹிதை.

21. ஈசுவரன் ஸர்வ சக்திமான் (1)

பாண்டவர்களுக்காகக் கண்ணன் தூதுசென்ற காலத்தில், அவரைத் திரும்பிப் பாண்டவர்களிடம் போகவிட்டால் தமக்கு ஜயம் வராது என்று துரி யோதனன் எண்ணி, தன் துஷ்ட சிநேகிதர்களான சகுனி, கர்ணன், துச்சாஸனன் முதலியவர்களோடு இவ் விஷயத்தைப்பற்றிக் கலந்து யோசித்தான். மறுநாள் சபைக்கு வரும்பொழுது, அன்பிற்குக் கட்டுப்படும் மாதவனாகிய கிருஷ்ணனைக் கயிற்றால் கட்டிச் சிறை பிடித்துவிடுவது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். மறுநாள் பகவான் தமது தூதின் முடிவை உணர்ந்து செல்லத் துரியோதனன் சபைக்கு வந்தார். துரியோ தனன் அவரை ஓர் ஆசனத்தில் இருத்தி, அவருடன் ஆழ்ந்து பேசிக்கொண் டிருப்பதுபோல் நடித்தான். இப்படியிருக்கையில், முன்னர் செய்த ஏற்பாட்டின் படி, சிலர் கையும் கயிறுமாய் மறைவாக வந்து கண்ண பிரானைப் பிடித்துக் கட்ட முயன்றனர். அவர் அருகே யிருந்த விதுரர் முதலிய பக்தர்களில் ஒருவர், பகவா னைக் கட்டவருபவர்களை எதிர்த்துத் தமது கத்தியால் வீச யத்தனித்தார். உலகளந்த பெருமாளான பக வான் சற்றேனும் அஞ்சாது, அவர் கையைப் பிடித்

துத் தடுத்து நிறுத்தி, மனக்கலக்கமின்றி மிகுந்த கம்பீரமாய் அசையாது உட்கார்ந்திருந்தார். கட்டுபவர்கள் அருகே வந்துவிட்டனர். அப்பொழுது பகவான் தமது விசுவரூபத்தை எடுத்துக்காட்டி, வந்தவர்களை இருந்தவிடம் தெரியாமல் அடித்துக் கோர தாண்டவம் ஆடிச் சபையில் இருந்தோர் எல்லோரும் அஞ்சி நடுங்கி அசைவற்றிருக்கும்படி செய்தார். பீஷ்மாதி பக்தர்கள் பகவானைத் துதிக்க, கொஞ்ச நாழிகையில் அவர் தமது பழைய வடிவம் கொண்டார்; உடனே "சண்டை நடப்பது நிச்சயம்" என்று முடிவு கூறிச் சபையைவிட்டு வெளியேறினர்.

— மஹாபாரதம், உத்தியோக பர்வம்.

22. ஈசுவரன் ஸர்வ சக்திமான் (2)


பிரகலாதன் தகப்பனாகிய இரணியகசிபு, தனக்கு, எவ்விதத்திலும் மாணம்வாராமலிருக்கவேண்டுமென்று ஆவல்கொண்டு, பிரமாவைநோக்கிக் கொடியதவம் புரிந்தான். பிரமா பிரத்தியக்ஷம் ஆனதும், அவன் தனக்கு அமரத்வம் வேண்டுமென்று கேட்க, அதற்கு அவர், "என்னால் அந்த வரத்தைக் கொடுக்கமுடியாது; குறிப்பாக இன்னின்ன பொருள்களிலிருந்து மரணம் வரக்கூடாது என்று கேட்பாயானால், நான் கொடுக்க முடியும்" என்றார். அப்பொழுது அவன், 'எனக்கு இரவிலும் பகலிலும், மரணம் வரக்கூடாது ; ஆகாயத்திலும் பூமியிலும் மரணம் வரக்கூடாது ; எவ்வித பிராணிகளாலும் மரணம் வரக்கூடாது; உயிருள்ள வஸ்துவாலும், உயிரில்லாத வஸ்துவாலும் மரணம் வரக்கூடாது;

என்னைக் கொல்ல எண்ணித் தேகத்தை வெட்டுங்கால் உதிரம் கீழே சிந்தினால், ஒவ்வொரு துளியிலிருந்தும் என்னைப்போன்ற பலவான்களான இராக்ஷதர்கள் பலர் உண்டாகவேண்டும்; எவ்வித ஆயுதங்களினாலும் எனக்கு மரணம் நேரிடக்கூடாது; வீட்டின் உள்ளிலும் வெளியிலும் மரணம் வரக்கூடாது'' என்று இவ்விதமாகப் பல வரங்களைக் கேட்டு வாங்கிக்கொண்டு, தனக்கு நித்தியத்வம் வந்து விட்டதாகக் கர்வம் அடைந்திருந்தான். கொஞ்சகாலம் சென்றபின், அவன் தன் பிள்ளையான பிரகலாதனைப் பலவாறாக வருத்தி, தான் மரணதண்டனை யடையத்தகுந்த குற்றம் செய்ததும், ஸர்வசக்தனான பகவான் வெகு தந்திரமாக நரசிங்க வடிவம் எடுத்து, இரணியனைத் தூக்கிச் சென்று சந்தியாகாலம் வரும்வரை அவனுடன் போர் செய்து, அந்தச் சமயத்தில் அவனைத் தூக்கிச் சென்று ஒரு வாயில் நிலையில் உட்கார்ந்துகொண்டு மடியின் மேல் அவனைப்போட்டுத் தன் கைகளில் பலவகைப் பட்ட ஆயுதங்களிருந்தும் அவைகளை எடுக்காமல் தமது நகங்களால் அவன் வயிற்றைக் கிழித்து, அவன் உதிரம் ஒரு துளிகூடக் கீழே விழாமல் உறுஞ்சிக் குடித்து, பிரமாவின் வரங்களுக்கு ஒருவித பங்கமும் வாராமல் அவனைக் கொன்று தமது பக்தனான பிரகலாதனைக் காப்பாற்றினார்.

— பாகவதம், 7-வது ஸ்கந்தம்.

23. ஈசுவரன் ஸர்வ சக்திமான் (3)

பாற்கடலி லிருந்து அமிர்தம் எடுக்கத் தேவர்களும் அசுரர்களும் முற்காலத்தில் அதைக் கடைய



பீஷ்மர் அம்புப்படுக்கையிலிருந்து பாண்டவர்களுக்கு உபதேசம் செய்தல்



பரமசிவன் மார்க்கண்டேயரை யமனிடமிருந்து காத்தல்

லாயினர். அப்பொழுது மந்திரகிரியை மத்தாகவும், வாசுகியைக் கயிறுகவும் வைத்துக்கொண்டு, கடையும் தொழிலை அவர்கள் கைக்கொண்டு வருகையில், அப் பாற்கடலிலிருந்து மிகப் பெரிய பயங்கரமான கரு நிறமுள்ள விஷம் தோன்றிற்று. அதற்கு ஆலாஹலம் என்று பெயர். அது எல்லாவற்றையும் எரித்து நாசஞ் செய்யத் தொடங்கவே, தேவர்களும் அசுரர்களும் நிலைபெருது மயங்கி ஓடத்தலைப்பட்டனர். எல்லோரும் பயந்து, சர்வஜீவ தயாபரனுகிய பரமசிவத்தினிடம் சென்று சரணம் அடைய, சகல லோகங்களையும் ரக்ஷிக்க வேண்டுமென்று அவருக்குக் கருணை உண்டா யிற்று. உடனே பாற்கடலை யடைந்து வெகு இலகு வாக அந்த விஷத்தைக் கையில் எந்தி வாயில் இட்டு, கண்டத்தில் நிறுத்தித் தம் கருணையை வெளியிட் டார். தேவர்கள் ,எல்லோரும் இவ்வாறு விஷபாதை நீங்கினது கண்டு மிகுந்த சந்தோஷமடைந்து உற் சாகத்துடன் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்று முடிவில் அமரர் ஆயினர்.

— பாகவதம், 8-ம் ஸ்கந்தம்.

24. ஈசுவரன் ஸர்வக்ஞன் (1)

திரிகூட பர்வதத்தில் பராக்கிரமமுடைய ஒரு யானை இருந்தது. அதற்குக் கஜேந்திரன் என்று பெயர். அது வனத்திற் சஞ்சரித்துக்கொண்டு வரும் போது, தாமரைப் புஷ்பத்தால் நிறைந்த மடுவொன் றைக் கண்டது. கண்டதும் அதில் இறங்கி தாகத்தைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்க, அதனுடன் கூடவந்த

யானைகளும் அவ்வாறே செய்தன. யானைகள் மடுவில் இறங்கிவிட்டாற் சும்மா விருக்குமா? அங்குமிங்கும் ஓடியாடி மடுவைக் கலக்கி உள்ளிருந்த ஜலஜந்துக்களுக்கு மிகுந்த துன்பத்தை உண்டாக்கின. அதைக் கண்டு மிகவும் கோபங்கொண்ட ஒரு முதலை, கஜேந்திரன் காலைக் கவ்வி அதன் இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கிற்று. அதனிடமிருந்து தப்ப, யானை பல வகையாக முயன்றும் முடியாமற் போயிற்று. ஜன்மாந்தர வாசனையால் மிகுந்த அபாயசமயத்தில் அதற்கு ஈசுவர பக்தி உண்டாயிற்று. அது தன் நிலை முதலியவற்றை யெல்லாம் மறந்து, 'ஆதிமூலமே' என்று கதறிப் பரம்பொருளைக் கூவி அழைத்தது. உடனே பகவான் அங்கு தோன்றி, தமது சக்கராயுதத்தால் முதலையை அறுத்துக் கஜேந்திரனைக் காப்பாற்றினர்.

— பாகவதம், 5-ம் ஸ்கந்தம்.

25. ஈசுவரன் ஸர்வக்ஞன் (2)

பாண்டவர்கள் வனவாசம் செய்யத்தொடங்கிய காலத்தில், அர்ஜுனன், வியாஸர் உத்தரவின்பேரில், 'மேல் நடக்கப்போகும் பாரத யுத்தத்தில் தனக்குச் சகாயமாய் இருக்கப் பாசுபதாஸ்திரம் பெறவேண்டும்' என்று தீர்மானித்தான்; உடனே அவன் வியாசரிடம் மந்திரோபதேசம் பெற்றுக் கைலாய மலைச்சாரலை அடைந்து பரமசிவனைக் குறித்துக் கொடிய தவம் செய்யத் தொடங்கினன். இடையில் வந்த தடைகளை யெல்லாம் கவனியாது அவன் செய்த தவம் உலகம் எங்கும் பிரசித்தமானதே. அர்ஜுனன் பாசுபதாஸ்தி

ரம் பெற்றால், தான் எங்கே பாண்டவர்களை ஜயிக்க முடியாமற் போய்விடுமோவென்று பயந்து, துரியோதனன் தன் தோழனான மூகாஸுரனை ஏவி, எவ்விதத்திலாவது தவம் பூர்த்தியாவதற்கு முன்னர், அவன் அர்ஜுனனைக் கொன்றுவிடவேண்டுமென்று ஏற்பாடு செய்தான். அவ்வசுரன் பெரிய காட்டுப்பன்றி உருவங் கொண்டு அர்ஜுனன் தவம் செய்யும் இடம் வந்து, அருகிலிருந்த புதரில் மறைந்து அவன்மேற் பாயத் தருணம் பார்த்துக்கொண் டிருந்தான். எல்லாவற்றையும் அறிந்த பரமசிவன், அப்பொழுதே ஒரு வேடனுருக்கொண்டு, தம்மைச் சேர்ந்தவர்கள் தாம் எடுத்த வேஷத்திற்குத் தகுந்த உருவுடன் சூழ்ந்துவரக் காட்டிற்குள் நுழைந்து வேட்டையாடி வருவதுபோல் அங்கு வந்துசேர்ந்தார். தூரத்திலிருந்தே மூகாஸுரனாகிய பன்றி ஒளிந்திருப்பதைக்கண்டு அதன்மேல் ஓர் அம்பு எய்தார். அர்ஜுனனும் அம்பொன்றை எய்தான். பன்றி விழுந்து இறந்தது. அப்பொழுது பரமசிவன் வேடர்களின் குலமுறைப்படி அர்ஜுனனைச் சண்டைக்கு இழுத்து, அதில் அவன் காட்டிய பராக்கிரமத்தைக் கண்டு வியந்து அனுக்கிரகித்துப் பாசுபதாஸ்திரத்தையும், அதனை உபயோகிக்கும் முறையையும் அவனுக்குக் கிருபை செய்தருளினார்.

— மஹாபாரதம் ஆரண்ய பர்வம்.

26. அவதாரங்கள்

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகம் கஷ்டத்துக்கு உள்ளாகுங்கால், அதை நிவர்த்திக்கும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அவதாரங்கள்

பலவற்றை எடுப்பது வழக்கம். அவற்றுள் முக்கியமாக எடுத்துக் கூறப்படுபவை விஷ்ணுவின் பத்து அவதாரங்களே. திருமாலும், பரமசிவனும் அவசரங்களுக்கு ஏற்ப அநேக அவதாரங்கள் எடுத்திருக்கின்றனர். அவற்றுள் பின்வரும் பத்து அவதாரங்கள் முக்கியமானவை:

திருமால்:—

1. பிரமனிடமிருந்து வேதங்களைத் திருடி கடலிற் கொண்டுபோய் ஒளித்துவைத்திருந்த மதுகைடபர் என்னும் அசுரர்களை மச்சாவதாரம் எடுத்துக் கொன்று அவ்வேதங்களைச் சுவாயம்புவமனுவுக்கு உபதேசித்து அவரைப் பிரளயத்திலிருந்து காப்பாற்றினர்.

2. அமிர்தத்துக்காகத் தேவாசுரர்கள் பாற்கடலைக் கடைய, மந்தரகிரி கீழே அழுந்தாதபடி அதன் அடியில் கூர்ம ரூபமாய் இருந்து தாங்கினர்.

3. பிரளய நீரிற் பூமியைப் பாய்போற் சுருட்டிக்கொண்டு எடுத்து மறைந்த இரணியாக்ஷனை வராகாவதாரம் எடுத்துக் கொன்று, பூமியைத் தமது கொம்பால் முன்னிருந்த ஸ்தானத்தில் கொண்டுவந்து நிறுத்தினர்.

4. எளிதில் இறக்கக்கூடாதென்று வரம் வாங்கினவனும், பகவத் துவேஷம் நிறைந்தவனும், பக்த சிரோமணியான பிரகலாதனைப் பலவிதமாய் வருத்தினவனுமாகிய இரணியகசிபுவை நரசிங்க ரூபமாகத் தூணிலிருந்து வெளிப்பட்டுக் கொன்று தன் பக்தனைக் காப்பாற்றினர்.

5. தேவதைகளை இருந்த விடம் தெரியாமல் அடித்து, நெறி தவருது அரசாண்டுவந்த பக்திமானும்

கர்விஷ்டனுமான மகாபலியிடம் வாமன ரூபியாய்ச் சென்று மூன்று அடி மண் யாசித்துப் பெற்று, உடனே பெரிய திரிவிக்ரம வடிவங்கொண்டு எல்லா உலகங்களையும் இரண்டடியால் அளந்து, மூன்ருவது அடியை மகாபலி தலையில் வைத்து அவனைப் பாதாளத்திற்கு அனுப்பித் தேவர்களைக் களிக்கச்செய்தார்.

6. நெறி தவறி அரசாண்டு, பெரியோர்களை மிகக் கஷ்டப்படுத்தி ராஜ தர்மம் நிலை குலையும்படி செய்த க்ஷத்திரியர்களை, பரசுராமாவதாரம் செய்து, தம் தகப்பனுரை அவர்களுள் ஒருவன் கொன்ற காரணத்தை முன்னிட்டு, க்ஷத்திரியர்களை இருபத்தோரு தலைமுறை கொன்று தம் தகப்பனுரது மாணத்துக்குப் பழிக்குப்பழி வாங்கினுர்.

7. பிரமன் கொடுத்த வரபலத்தால் சகல உலகங்களையும் கஷ்டப்படுத்திவந்த இராவணனை இராமாவதாரம் செய்து, தம் மனைவியை அவன் எடுத்துப் போன காரணத்தை வைத்துக்கொண்டு, வானர சகாயத்தைப் பின்பற்றி நிர்மூலமாக்கி, இராஜ தர்மத்தை நன்ருக அனுஷ்டித்துக் காட்டினுர்.

8. கிருஷ்ணுவதாரம் செய்து, பாரத யுத்தத்தில் துஷ்டர்களைக் கொன்று பூபாரம் நீக்கியும் வேத ரகசியங்களை வெளிப்படுத்தியும் பக்தியையும் தருமத்தையும் உலகத்தில் நிலைநிறுத்தினுர்.

9. மகா கர்விகளான ஜனங்களுக்குக் கர்மத்தில் நம்பிக்கை குறையும்படியாகப் புத்தாவதாரம் செய்து, பக்குவம் அடையாத காலத்தில் ஞானேபதேசம் செய்தார்.

10. கலியுக முடிவில், உலகில் அதர்மம் மேலி டும்பொழுது ஒரு சிஷ்டர்குலத்தில் கல்கி அவதாரம் செய்து குதிரையின் மேலேறிக் கத்தியை மாத்திரம் ஆயுதமாகக் கொண்டு கொடியவர்களை வெட்டிச்சாய்த் துப் பூமியை வலமாக வந்து தமது ஊர்சேரும் காலத் தில் பெற்றோர் இறந்திருப்பதைக் கண்டு மறைந்து விடுவர். பின்னர்—ஸத்ய யுகம் தொடங்கும்.

முற்கூறிய அவதாரங்கள் எல்லாம்:—

" மீனுமை சோலமொடு நரசிங்க மாகிநில
விறகா லளந்த குறளாய்
ஆனுது சிறுமழு வில்லுங்கொள் வெல்லுமுனை
யலமுற்ற செங்கை யவராம்
வானுடர் சென்றுதொழ மண்ணுட ரைவரையும்
வாழ்விக்க வந்தவடிவாம்
ஈானு விதங்கொள்பரி யாளாகி நின்றருளும்
நாரா யணுய நமவே "

என்ற வில்லிபுத்தூரார் பாட்டில் அமைந்து கிடப்பதைக் காண்க.

மேற்கூறிய அவதாரங்களின் நோக்கம் :—

(1) " சாதுக்களை இரக்ஷித்தல், (2) துஷ்டர்களை ஒழித்தல், (3) தருமத்தை நிலைநிறுத்தல் ஆகிய இவை களே " என்று கீதையிற் கண்ணன் சொல்லி யிருக்கிறார். — பாகவதம்.

27. மூர்த்தித் துவேஷம் கூடாது

முற்காலத்தில் பிரமாவின் பிள்ளையாகிய தக்ஷன் தனது பெண்ணாகிய ஸதி தேவியைப் பரமசிவனுக்கு

விவாகம் செய்துகொடுத்தான். அவன் ஒரு யாகம் நடத்துகையில் அங்கிருந்த பரமசிவன் தனக்கு மரியாதை செய்யாதது கண்டு, அவரைத் தனக்குச் சாதாரணமான மருமகன் என்று அவரிடம் துவேஷம் பாராட்டத் தொடங்கினன். அப்படிக் கொஞ்ச காலமாகிய பின்னர், அவன் ஒரு சிறந்த யாகம் செய்யத் தொடங்கி, தனது மருமகனுகிய பரமசிவனுக்கு அவிர்ப்பாகம் கொடுக்காமலே யாகத்தை நிறைவேற்றுவது என்ற கெட்ட எண்ணத்தைக் கொண்டான். யாகம் மிகச் சிறந்ததானதால் தேவர்கள் எல்லோரும் அந்த யாகத்துக்குப் புறப்பட்டனர்; அதை யறிந்த ஸதியின் மனத்தில் தன் தகப்பனைப் பார்த்து வெகு நாளாய்விட்டது என்ற எண்ணம் தோன்ற, அவள் பரமசிவனிடம் சென்று, "இந்த யாகத்திற்குப் போக எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும்" என்று கேட்டாள். அதற்குப் பரமசிவன், "எனது உண்மை சொரூபத்தை அறியாது உன் தகப்பனர் என்னிடம் விரோதம் பாராட்டுகிறுர்; ஆதலால், அங்குச் சென்ருல் உனக்கு அவமானம் நேரிடும்; அதனுல் பெரிய ஆபத்துக்கள் உண்டானுலும் உண்டாகும். போக வேண்டாம்" என்று மறுத்துக் கூறினர். அவர் கூறியும், தகப்பன் மேலிருந்த அன்பினுல் ஸதி மன்ருடி, யாகத்திற்குப் போய்வர பரமசிவனிடமிருந்து அனுமதி பெற்றுச் சென்ருள். சென்றவிடத்தில் தகப்பனர் அவளை லக்ஷ்யமே செய்யவில்லை. அதனுல் அவளுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. உடனே அவள் தகப்பனை நோக்கி, "யோகமூர்த்தியாகிய பரமசிவத்தின் உண்மைச் சொரூபம் அறியாது, இவ்வாறு

நீர் அவரைத் துவேஷிப்பது எனக்கு மிகவும் வருத்தமா யிருக்கிறது. உமது பெண் என்று சொல்லிக் கொள்வதற்குக் கூட எனக்கு வெட்கமாக இருக்கிறது. பாபியாகிய உம்மால் உண்டாக்கப்பட்ட தேகத்தை இப்பொழுதே நீக்கிவிடுகிறேன்" என்று கூறி யோகாப்பியாசம் செய்து அதனுல் உண்டான அக்கினியில், யாகசாலையில் இருந்தவர் முன்னிலையில் பிரவேசம் செய்தாள். அதைக் கேட்டதும் பரமசிவனுக்கு மிகுந்த கோபம் வர, அதினின்று வெளியான வீரபத்திரர் அவர் உத்தரவுப்படி தக்ஷன் யாகசாலைவந்து அவன் தலையை வெட்டி யாகத்தை அழித்தார். பின்பு தேவர்கள் எல்லோரும் பரமசிவனைத் துதிக்க, அவர் தக்ஷனை, ஆட்டுத் தலையுடன் எழுந்திருக்கச் செய்ய, அவர் சந்நிதானத்திலேயே யாகம் தடையின்றிப் பூர்த்தி பெற்றது. அதில் மஹாவிஷ்ணு சம்பந்தமாக முக்கிய ஆஹுதி கொடுத்த காலத்தில் மஹா விஷ்ணு தோன்றி, "எனக்கும் பிரமாவுக்கும், பரமசிவனுக்கும் யாதொரு பேதமும் இல்லை; பேதப் படுத்தாது வழி படுபவருக்கே பரமபதம் எளிதில் கிடைக்கும். அவ்வாறின்றி எங்களுள் யாரிடத்திலாவது துவேஷம் பாராட்டுபவனுக்குத் தக்ஷனது கதியே என்று திருவாய் மலர்ந்தருளினுர்.

இரணியகசிபு என்ற அரக்கன், தனது சகோதரன் இரணியாக்ஷன் மஹாவிஷ்ணுவின் வராகாவதாரத்தாற் கொல்லப்பட்டானென்று கேள்விப்பட்டு, அரியிடம் துவேஷம் கொண்டு பிரமனை நோக்கித் தவம் புரிந்து அற்புத சக்திகளைப் பெற்று மஹாவிஷ்ணுவையும் அவர் பக்தர்களையும் மிகக் கஷ்டப்

படுத்தி முடிவில் மஹாவிஷ்ணுவால் இறந்தான். அவன் விஷ்ணுவைத் துவேஷித்ததால் நாசமடைந்தவன். அம்மாதிரியே இராவணனும் பரசிவனைச் சிறந்தவராக எண்ணி, விஷ்ணுவைத் துவேஷித்து முடிவில் நிர்மூலமாய் அழிந்தான். வைஷ்ணவர்கள் ஆராதிக்கும் விஷ்ணு, சைவர்கள் ஆராதிக்கும் சிவன், மற்றைய மதத்தினர் ஆராதிக்கும் அந்நிய தெய்வங்கள் ஆகிய எல்லாம், முழுமுதற்கடவுளின் வெவ்வேறு அவதாரங்களாகையால், அவர்களைத் தாழ்வாக எண்ணுவது பாபத்திற்கு இடமாகும். அவ்வாறு எண்ணுபவர்களுக்குத் தமது ஆராதனையிலேயே பலன் உண்டாகாது. தாம் ஆராதிக்கும் தெய்வம் பரதெய்வம் என்றும், மற்றைய தெய்வங்களெல்லாம் இந்தத் தெய்வத்தின் ரூபாந்தரங்கள் என்றும் சம புத்தியுடன் துவேஷமின்றி வழிபடுவதே மேலான பதவியை அடைவிக்கும்.

ஔவையாரும், 'தெய்வம் இகழேல்' என்று கூறியிருக்கிறார்.

— பாகவதம், 4, 7-ம் ஸ்கந்தங்கள், இராமாயணம்.

28. நாம ஸங்கீர்த்தனம்

சிறப்புற்ற அந்தணர் குலத்தில் அஜாமிளன் என்ற ஒருவன் இருந்தான். அவன் அவர்களுக்கு ஏற்பட்ட நெறி தவறாது நடந்துவந்தான். இப்படியிருக்கையில் ஒரு நாள் அவன் தகப்பனார், காடு சென்று தமக்குக் காய், கனி, கிழங்கு முதலியவைகளைச் சேகரித்து வரும்படி சொன்னார். போய் வரும்

வழியில் ஒருவன் தன் அடிமைப்பெண் ஒருத்தி யோடு வெகு உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருந்த தைக் காண, அவன் மனம் கெட்டுப் போய்விட்டது. அன்று முதல் அவனுக்கு, 'எப்படியாவது அந்த அடிமைப் பெண்ணை விவாகம் செய்துகொள்ள வேண்டும்' என்ற பைத்தியம் பிடித்துவிட்டது. நாளடை வில் குணவதியான தன் பெண்சாதியைத் தவிக்க விட்டுவிட்டு, அந்த அடிமைப் பெண்ணுக்குத் தனது சொத்துக்கள் எல்லாவற்றையும் கொடுத்து அவளோடு வெகுநாள் வாழ்ந்துவந்தான். அவளிடம் அவனுக்கு பத்துக் குழந்தைகள் உண்டாயின. தன் குடும்பத் தைக் காக்க கெட்ட வழியிலேயே முயன்று வந் தான். தன் உயர்ந்த நிலையைக்கூட அவன் மற ந்து விட்டான். அவன் குமாருள் இளையவனான நாராயணனிடம் அவனுக்கு அதிகப் பிரீதி. இப்படி யிருக்கையில் அவனுக்குப் பெரிய நோய் கண்டது உயிர் போகும் தருணமும் அவனுக்கு வந்துவிட்டது. அப்பொழுது அவன்மனம், இளையவனான நாராயணன் மேலேயே பாய்ந்தது. இப்படியிருக்கையில் அவன் கண்முன் குரூரமான மூன்று உருவங்கள் காணப் பட்டன. அவன் மிகப் பயந்து அருகே விளையாடிக் கொண்டிருந்த கடைக்குட்டியை நாராயணா என்று குளறிய மொழியாற் கூறியழைத்தான். உடனே ஸ்ரீநாராயணனது தூதர்களும் வந்து சேர்ந்துவிட் டனர். அப்பொழுது யமதூதர்கள், "இந்த அஜாமிளன் மஹா பாபி; தன் நிலையைக் கெடுத்துக்கொண்டவன். இவனை யமபட்டணம் கொண்டுபோய்த் தகுந்த தண் டனைக்கு ஆளாக்கப் போகிறோம்" என்றனர். அதற்

குத் திருமாலின் தூதர்கள், "இவன் எவ்வளவு பாபியாகிலும், இந்த ஆபத் ஸமயத்தில் யாது காரணத்தாலோ ஜகந்நாதராகிய எங்கள் பிரபுவின் நாமத்தை உச்சரித்துவிட்டான். இவன் பாபங்களெல்லாம் போய்விட்டன. நீங்கள் இவனைத் தொடக்கூடாது" என்று தடுத்து யமதூதர்களை ஓட்டிவிட்டனர். இந்தச் சம்பாஷணை அஜாமிளன் காதிற்பட, அவன் மனம் பச்சாத்தாபத்தால் உருகியது; உடனே தனது மனத்தை யடக்கிப் பகவான் பாதார விந்தங்களில் வைக்கப் பாடுபட்டான். உடனே அவன் மனம் பரிசுத்தமாயிற்று. நோயும்; தீர்ந்தது. தீர்ந்ததும் அவன் தன் குடும்பத்தைக் கவனியாமல், ஹரித்வாரம் சென்று மனத்தைப் பகவானிடம் செலுத்தி நிஷ்டையில் மூழ்கிக் கொஞ்ச நாள் இருந்தான். ஆயுள் முடிவுகாலம் வர, முன்னர் அவன் கண்ட திருமாலின் தூதர்கள் அவன்முன்தோன்றினர். அவர்களுக்குத் தகுந்த வந்தனை வழிபாடுகள் செய்து அங்கேயே தனதுதேகத்தை நழுவவிட்டான். உடனே அவன் மேலான பரமபதத்தை யடைந்தான்.

பகவானது நாமத்தை உச்சரித்த மாத்திரத்தில் அது மனதைச் சுத்தப்படுத்தி நல்வழியிற் செலுத்தும்.

— பாகவதம், 6-ம் ஸ்கந்தம்.

29. மானஸ பூஜையின் சிறப்பு

அபிமன்யு இறந்தான் என்று மிக்க வியாகூலத்தோடு, மறுநாள் செய்யவேண்டுவது இன்னதென்று அறியாதவனாய்க் குழப்பத்துடன் அர்ஜுனன் பதின்மூன்றும் நாள் இரவில் உறங்குகையில், கண்ணனோடு கைலாயம் சென்றதாகக் கனவு கண்டான். அப்

பொழுது அவனுக்குத் தன்னைவிடச் சிவ பக்தியில் சிறந்தவர் ஒருவரும் இல்லை ; பீமன் கேவலம் மூடன்; அவனுக்குப் பக்தியே கிடையாது என்ற எண்ணங்கள் இருந்தன. கைலாயத்திற் போகையிற் கண்ணனது மாயையால், ஒருவன் ஒரு பெரிய வண்டி நிரம்ப வாடிய புஷ்பங்களைக் கொண்டுவருவதை இருவரும் கண்டார்கள்; அர்ஜுனன் 'இதென்ன' என்று வண்டி இழுத்து வருபவனைக் கேட்க, வேலையில் கருத்தாக இருந்த வேலைக்காரன் ஒன்றும் மறுமொழி கூறவில்லை. உடனே இருவரும், அவன் என்ன செய்யப் போகிறான் என்பதைப் பார்க்க அவன் பின்னே சென்றார்கள். ஒரு மலைபோல் குவிந்திருந்த வாடிய புஷ்பக் குவியலுடன் அப்புஷ்பங்களைக் கொண்டு போய்க் கொட்டுவதைக் கண்டார்கள். அங்கு நின்று கொண்டிருக்கையில் நூற்றுக் கணக்கான வண்டிகள் வாடிய புஷ்பங்களைக் கொண்டு கொட்ட, அதைக் கண்ட மாத்திரத்தில் அர்ஜுனனுக்கு அவற்றின் உண்மையை அறியவேண்டும் என்ற அடங்கா ஆவல் உண்டாயிற்று. அங்கு வேலை செய்பவரை அவன் பல முறை கேட்டும் அவர்கள் மறுமொழி சொல்ல ஒழிவின்றி, விரைவாகத் தமது வேலையையே செய்து கொண்டிருந்தனர். விடாமல் வெகு நாழிகை வரையில் அர்ஜுனன் அவர்களைக் கேட்க, ஒருவன் மாத்திரம் வெகு கோபத்துடன் பின்வருமாறு சொன்னான்:—

"எங்களுக்கு வேலையோ அதிகம் ; நீர் எங்களை இவ்வாறு தடைசெய்வது சரியல்ல, ஐந்நூறு வண்டி நிர்மாலியங்கள்தான் நாங்கள் இங்குக் கொண்டுவந்து கொட்டியிருக்கிறோம்; இன்னும் ஐந்நூறு வண்டிப்

புஷ்பங்கள் சிவபெருமானது பாதத்திற் குவிந்துகிடக்கின்றன. நேற்றுப் பாண்டவ வீரனாகிய பீமசேனன் செய்த பூஜையில் விழுந்த புஷ்பங்கள் இவை. அவன் இன்று பூஜை செய்யத் தொடங்குவதற்கு இன்னும் கொஞ்ச நாழிகைதான் இருக்கிறது. அதற்குள் நாங்கள் இந்த நிர்மாலிய புஷ்பங்கள் எல்லாவற்றையும் எடுத்தெறிந்துவிட வேண்டும். இனிமேல் எங்களை இவ்வாறு தடை செய்யாதேயும்" என்று சொன்னான். இதைக்கேட்டதும் அர்ஜுனனுக்கு ஆச்சரியம் அதிகரிக்க, "அர்ஜுனனா இவ்வாறு பூஜை செய்வது? அல்லது பீமசேனனா?" என்று அவன் அந்த வேலைக்காரனைக் கேட்டான். அதற்கு அவன், "பீமன்தான் இப்பூஜை செய்தவன். அர்ஜுனனது பூஜையெல்லாம் வெறும் ஆடம்பரந்தான்" என்று மறுமொழி கூறுகையில், அங்கு ஒருவன் சிறு கூடையிற் கொஞ்சம் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு வருவதை அர்ஜுனன் கண்டான். உடனே பகவான் அவனை நோக்கி, "இது யார் பூஜை செய்தது?" என, அவன், "இது அர்ஜுனன் என்ற ஆடம்பரக்காரனால் செய்யப்பட்ட பூஜை" என்றான். அப்பொழுதுதான், தான் செய்யும் ஆடம்பரமான பூஜையைவிட, பீமன் சாப்பாட்டிற்கு முன் மனதாரச் செய்யும் பூஜையே மேலானது என்று அர்ஜுனனுக்குத் தோன்றியது. உடனே அவன் கர்வம் அடங்கிப்போயிற்று.

பகவானை மனதார ஆராதியாமல் எவ்வளவு ஆடம்பரத்துடன் பூஜை செய்தபோதிலும் பயன் இல்லை.

— பாரதம், துரோண பர்வம்.

30. பகவத் தரிசன விசேஷம்

உத்தானபாதனது பிள்ளையாகிய துருவன், தகப்பன் மடியில் உட்காரக்கூடாதென்று தனது சிற்றன்னை கூறிய கொடுஞ்சொல்லால் மிகுந்த துக்கமடைந்து, தன் தாயின் உபதேசத்தால் தவஞ்செய்யக் கானகம் சென்றான். போகும்பொழுது, தன் தகப்பன் மடியில் எப்படியாவது உட்கார்ந்து மேலான பதவியை அடையவேண்டும் என்ற ஆவல் துருவனுக்கு அதிகமாக இருந்தது. சிறுபிள்ளை யாதலாலும், தாயார் கூறிய வாக்கின் பெருமையாலும் இவனுக்கு மாறாத திடம் உண்டாக, வழியில் ஏற்பட்ட தடைகளை யெல்லாம் அவன் எளிதில் தாண்டிக் காட்டிற்குச் சென்று ஆறுமாதம் கொடிய தவம் செய்தான். அதன் முடிவில் பகவான் பிரத்தியக்ஷமாக, அதுவரையிலும் பேசாத துருவனுக்கு "யோந்த ப்ரவிச்ய" என்று தொடங்கும் சுலோகம் புதிதாகச் செய்ய எண்ண முண்டாயிற்று; உடனே அவன் கடவுளை அச் சுலோகத்தால் துதிக்க ஆரம்பித்தான். அதன் பொருள், "எவ்வித பலத்திற்கும் இடமாகவுள்ள ஈசுவரன், தன்னுடைய சக்தியால் என்னுள்ளே புகுந்து, என்னுடைய வாக்கு, கை, கால், அங்கங்கள் உயிர் முதலிய எல்லாவற்றையும் காப்பாற்றுகின்றான். அப்படிப்பட்ட பரம் பொருளுக்கு நமஸ்காரம்" என்பதே. இவ்வாறு பகவானைத் தரிசித்துத் துதித்ததும் துருவனுக்கு மனம் சுத்தமாயிற்று. தான் முன்னர் உத்தேசித்துவந்த எண்ணங்கள் எல்லாம் நீங்கின. "உனக்கென்ன வேண்டும்?" என்று பகவான் கேட்க, துருவஸ்வாமி, "எனக்கு அழியாப் பதவிவேண்டும்; அல்லது



சீதைக்கு அநுசூயை புத்தி புகட்டுதல்.



மஹாவிஷ்ணு நரசிங்க ரூபமெடுத்து பக்தனைக் காத்தல்.

அது கிடைப்பதற்கு உதவியான ஸத்ஸங்கம் வேண்டும்" என்று கேட்டானேயொழிய தன் தகப்பன் மடியில் உட்காரக்கூடிய பதவிவேண்டும் என்று கேட்கவில்லை. எல்லாம் அறிந்த பகவான் அவன் கேட்டவற்றைக் கொடுத்து அப்பதவிக்கு வருமுன்னர், உலகில் வாழ்ந்து கீர்த்தி பெறும்படியும் அனுக்கிரகித்தார்.

பகவத் தரிசன விசேஷத்தால் மனப்பற்று நீங்கும்.

— பாகவதம் 4-ம் ஸ்கந்தம்.

31. மனத்தின் சஞ்சலம்

மனத்தை அடக்குவது மிகக் கஷ்டம். அது குரங்குபோன்றது என்று பெரியோர் சொல்லுவர். ஒரு குரங்கு இருந்தது. அது சுவபாவத்திலேயே மிகுந்த சஞ்சலமுடையது. போதாதென்று அது கள்ளைக் குடித்துவிட்டது. பின்பு அதை ஒரு தேளும் கொட்டியது. இதனால் குரங்கு குதித்துக்கொண்டு ஓடத்தொடங்க, அது மிகுந்த கஷ்டத்தை யடைந்தது. இதைப் பூர்த்திசெய்ய அதைப் பிசாசு ஒன்றும் பிடித்து விட்டது. இக்குரங்கின் சஞ்சலத்தை யாரால் வர்ணிக்கமுடியும்? இந்தக் குரங்குக்குச் சமானம் நமது மனது என்று ஞானிகள் கூறுவர். அது ஆசை யென்னும் கள்ளைக் குடித்து அலங்கோல தசையை அடைகிறது. மற்றவர்கள் ஆசை பூர்த்தியாவதைக் கண்டதால் உண்டாகும் பொறாமை என்ற தேள் கொட்ட, அது அதிக சஞ்சலத்தை அடைகின்றது. இப்படியிருக்கையில், மனம் எண்ணியவாறு காரியங்கள் பூர்த்தியானால், கர்வம் என்ற பேய் அதைப் பிடித்துக்

கொள்ள, அது முன்னிலும் பதின்மடங்கு அதிக சஞ்சலத்தை அடைகின்றது. "இப்படிப்பட்ட மனத்தை யடக்குவது எவ்வாறு?" என்று கேட்ட அர்ஜுனனுக்குப் பகவான், "வைராக்கியம் (ஒருவனுக்குத் தெரிந்த அல்லது தெரியாத வெளி வஸ்துக்களின் விஷயத்தில் உண்டாகும் துச்சபுத்தி), அப்பியாசம், (தியானத்தாலடையும் பரம்பொருளை மனம் விட்டுப் போகாது, அடிக்கடி ஊக்கத்தோடு மனத்தின்முன் கொண்டுவந்து நிறுத்தல்) ஆகிய இவ்விரு திறங்களால் அலையும் மனத்தை நிலையில் நிறுத்திச் சுகம்பெறலாம்" என்றார். எப்படி வெளியே ஓடி அலையும் ஒரு பசுவை முளையிற் கட்டிப் புல்லிட்டு அடங்கி நிற்கும்படி செய்கிறோமோ, அப்படியே வைராக்கியத்தால் மனம் வெளியே போகாது தடுத்து, அப்பியாசத்தால் அதை உள்ளேயே அடங்கியிருக்கும்படி செய்யவேண்டும்.

மனதைச் சாவதானமாய் அடக்கவேண்டும். அவசரம் கூடாது.

32. தேக தத்துவங்கள்

முற்காலத்து யுத்த முறைப்படி ஒவ்வொரு பெரிய வீரனுக்கும் தகுந்தபடி சாதனங்கள் இருத்தல் வேண்டும். முக்கியமாக, அவன் ஏறி யுத்தகளம் முழுவதும் எளிதிற்சென்று சண்டைசெய்து வர, சுளுவிற் சஞ்சரிக்கக்கூடிய ஒரு நல்ல ரதம் வேண்டும். அதிற் சிறந்த குதிரைகள் கட்டியிருத்தல் அவசியம். அக் குதிரைகளின் கடிவாளங்கள் மிகப் பலமானவைகளாக இருக்கவேண்டும். இவைகளைப் பிடித்துக்

கொண்டு தேரை நன்ருக நடத்தத் தகுந்த சாரதி அவசியம் வேண்டும். எது இருந்தபோதிலும் சாரதியின் திறமையாலேயே ரதிகன் மேன்மை யடையவேண்டும். இவன் சிறந்தவனுக இருந்தால்தான் ரதத்தைத் தகுந்த விடத்திற்குத் தகுந்த காலங்களிற் சரிவர நடத்திச்சென்று ரதிகனுக்கு வேண்டிய சகாயம் செய்ய முடியும். ரதிகன் எவ்வளவு சமர்த்தனு யிருந்தபோதிலும், சாரதி தகுந்தவனுய் இல்லாவிடில் சோபிக்கவே மாட்டான். திறமை வாய்ந்த சாரதியின் சன்னிதான மாத்திரமிருந்தாலே தேர் தகுந்தவழிகளிற் சஞ்சரித்து ரதிகனுக்கு யுத்தபூமியில் மிகுந்த சிறப்பை யுண்டாக்கும். இதுபற்றியே, மஹாபாரத யுத்தத்தில் அர்ஜுனன் ரதிகனுகவும், அவனைவிட மிகச் சிறந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சாரதியாகவும் எற்பட்டுள்ளார்.

ஜீவாத்மாவே முற்கூறிய ரதிகன்; தேகமே ரதம்; இந்திரியங்களே (வெளி விஷயங்களைக் கிரகிக்கும் கருவிகள்) குதிரைகள் ; மனமே கடிவாளங்கள்; புத்தியே சாரதி; இந்திரிய விஷயமாகிய பிரபஞ்சமே ரதம் சஞ்சரிக்கும் இடங்கள். ஆகவே, புத்தி தெளிவாய் இருந்தால் ஆத்மாவுக்கு இந்திரியங்களாற் கஷ்டமுண்டாகாமற் சுகம் கிடைக்கும்; புத்தி தெளிவில்லாமல் இருந்தால், இந்திரியங்களாகிய குதிரைகள், மனமாகிய கடிவாளங்களை அறுத்துக்கொண்டு, தேகம் என்னும் ரதத்தைக் கண்டபடி மேடுபள்ளங்கள் என்னும் சுகதுக்கங்களில் இழுத்துச் சென்று, ரதிகனுகிய ஆன்மாவைப் படுத்தாத பாடெல்லாம் படுத்திவிடும். இந்திரியங்களெல்லாம் அடங்கி மனத்துக்கு வசப்பட, புத்தி

தெளிந்து அவைகளுக்கு அரசனாக இருந்து அடக்கி வந்தால், ஜீவாத்மா நல்வழியே போய் முடிவில் சுக மடைவான். ஆகவே ஒவ்வொருவரும் ஜீவாத்மா, தேகம், இந்திரியங்கள், மனம், புத்தி, இந்திரிய விஷயங்கள் ஆகிய இந்தத் தத்துவங்களை நன்குணர்ந்து, புத்தியைச் சாஸ்திரங்களால் தெளியவைத்து இடைவிடாப் பழக்கத்தால் எல்லா விஷயங்களையும் அடக்கியாளும்படி செய்தால், மாறாச் சுகம் உண்டாகும்.

— கடோபநிஷத்.

33. ஜீவனும் ஈசுவரனும்

ஒரு பெரிய அசுவத்த மரம் உண்டு. அதில் இரண்டு பறவைகள் வாசம் செய்துவருகின்றன. ஒன்று உச்சிக்கிளையில் வெகு ஆநந்தமாக உட்கார்ந்து கொண்டு, இருந்த விடத்திலேயே அசைவற்றுச் சுகமாக வாழ்கின்றது. மற்றொன்றோ, கீழே கிளை விட்டுக் கிளை தாவிக்கொண்டு, சஞ்சலப்பட்டுக் கொண்டே எப்போதும் இருக்கிறது. போகும் வழியில், மரத்தின் பழம் முதலியவைகளை அது தின்று கொண்டும் இருக்கிறது. நல்ல பழங்களைத் தின்றால், சுகப்பட்டுச் சற்று அசைவற் றிருக்கின்றது. கெட்ட பழங்களைத் தின்னும் காலத்து, அது மிகக் கஷ்டப்பட்டுத் தத்தளித்து அங்குமிங்கும் பறந்தோடுகிறது. இம்மாதிரி அவஸ்தைப்படும் சிலகாலங்களில், தற்செயலாய் அது மேலே நோக்கும்படி நேருகிறது. அப்பொழுது அங்கே நிம்மதியாய் ஆநந்தத்தில் மூழ்கிக் கிடக்கும் மற்றப் பறவையின் தரிசனம் இதற்கு ஏற்படுகி

றது. அப்பொழுது, "அது எவ்வளவு சுகமாயிருக்கின்றது! நமக்கு மாத்திரந்தானு இந்தக் கதி; நாமும் அதைப்போல் உச்சியிலிருந்து இம்மாதிரி அசைவற்றிருந்தால் நலமாயிருக்குமே" என்று சிந்திக்கத் தன்னை யறியாமல் ஒரு கிளை மேலே ஏறுகிறது. அதற்குள் கீழே குனிந்துவிட, மேற்பறவையின் தரிசன விசேஷம் போய்விடுகிறது. மறுபடியும் அந்தப் பிரதேசங்களில் உள்ள பழவர்க்கங்களைத் தின்று, மாறி மாறிச் சுக துக்கங்களுக்கு ஆளாகிறது. இப்படிக் கிரமமாகத் துக்க காலங்களில் மேலே நோக்க, படிப்படியாய் ஏறி, முடிவில் உச்சிக்கிளை யருகிற் போகின்றது. அதற்குத் தான் இல்லாததுபோல் உணர்ச்சி ஒன்று தோன்ற, திடீரென்று அது மேற்பறவையாக மாத்திரம் சேஷிக்கின்றது. இம்மாதிரியேதான் உலகில் ஜீவாத்மாவின் நிலை. ஜீவாத்மா சுகதுக்கங்களில் அடிபடும் காலங்களில், ஈசன் கர்மத்துக்குத் தக்கபடி யளந்துகொண்டு சாக்ஷிமாத்திரமாய்ச் சச்சிதானந்த ரூபியாயிருப்பது தோன்ற, மனம் சுத்தமாகி, கிரமமாக மேன்மை யடைந்து, முடிவில் தான் தனித்திருப்பது என்ற பிரக்ஞையை இழந்து ஈசுவரனுகச் சேஷிக்கின்றான்.

— முண்டகோபநிஷத்.

34. சுகத்தின் சுவரூபம்

பிராமணன் ஒருவன் ஒரு காலத்தில், அணுக முடியாத் துஷ்டமிருகங்கள் நிறைந்த ஒருகாட்டுக்குள் வந்து அகப்பட்டுக்கொண்டான். அதில் எங்கும் கொடிய மிருகங்களின் சப்தம் கேட்டுக்கொண்டே

யிருந்தது. அதனால் பிராமணன் மனம் மிகப் பதறியது. அவன் அங்குமிங்கும் ஓடத் தலைப்பட்டான். அந்தக் காட்டைச் சுற்றிலும் வலை போட்டிருந்ததாலும், வெளியே கோரமான ஒரு ஸ்திரீ, தன் கையை விரித்துக்கொண் டிருந்ததாலும் அப் பிராமணனால் காட்டைவிட்டு வெளியேற முடியவில்லை. மேலும் அந்தக் காட்டிற் பெரிதாகிய நாகங்கள் பல உலாவிக் கொண்டிருந்தன. அங்குப் படுகுழி ஒன்று, செடி கொடிகளால் அதிகமாக மூடப்பட்டிருந்தது. பயத்தால் வெருண்டு ஓடிவந்த பிராமணன், தலை கீழாய் அக்குழியில் விழுந்து செடிகொடிகளில் நன்றாய்ச் சிக்கிக்கொண்டான். அப்பொழுது அவனுக்கு அநேக கஷ்டங்கள் உண்டாயின. அந்தக் குழியடியில் ஒரு பெரும் பாம்பு இருப்பதையும், அந்தக் குழியின் கரையில் தன்னை நோக்கி யானையொன்று வருவதையும் அவன் கண்டு, மிகுந்த துக்கத்தை யடைந்தான். அவன் தொங்கிக்கொண்டிருந்த கொடிகளின் வேரை வெள்ளை எலிகளும், கறுப்பு எலிகளும் அறுத்துக் கொண்டே யிருந்தன. அவைகளின் மத்தியிலிருந்த சில தேனடைகளில் உலாவிக்கொண் டிருந்த தேனீக்கள் இவன் விழுந்த வேகத்தால் தாக்கப் பட்டதால், இவனைக் கொட்டிக்கொண் டிருந்தன. அப்பொழுது சில தேன் துளிகள் பிராமணன் உதடுகளில் விழுந்தன. அந்தத் தித்திப்பைப் பெரிதாக எண்ணி நக்கிக்கொண்டு, அவன் தான் படும் கஷ்டங்களைச் சற்று மறந்து, "இன்னும் எனக்குத் தேன் கிடைக்காதா?" என்றும், "இவ்வாறேதான் விழுந்து சுகம்பெற வேண்டும்" என்றும் எண்ணிக்கொண்டு,

தான் தப்புவதைப் பற்றி யோசிக்காது அங்குக் காலங் கழித்துவந்தான். உலக சுகங்களும் இத்தன்மை யானவை.

மிகுந்த துக்கம் நிறைந்த இவ்வுலக வாழ்க்கை யில், மிகுந்த கஷ்டங்களின் இடையிடையே சிற்சில சமயங்களிற் கிடைக்கக்கூடிய நிலையில்லாத் திருப் தியே சுகம் எனப்படும்.

— மஹா பாரதம், ஸ்திரீ பர்வம்.

35. துக்கத்தின் சுவரூபம்

ஸம்ஸப்தக யுத்தத்திலிருந்து அர்ஜுனனும் கிருஷ்ணனும் பதின்மூன்றும் நாள் மாலை திரும்பிவரு கையில், பகவானுக்கு அபிமன்யு இறந்த சங்கதி தெரிந்தது; அதை அர்ஜுனன் உணர்ந்தால் அவனும் இறக்க முயலுவானே என்ற எண்ணம் அவருக்கு வந்தது. உடனே வரும் வழியில் பகவான் தம் மாயா சக்தியால், ஒரு பிராமணன் அக்கினியை வலம் வந்து தீயில் விழுந் தருவாயில் இருக்கும் தோற்றம் அர்ஜுன னுக்குண்டாகும்படி செய்தார். அர்ஜுனன் பிராமண னிடமிருந்து அவன் துக்கத்தின் காரணத்தை யறிந்து கொண்டு, "உன் பிள்ளை இறந்தான் என்பதனால், நீ இவ்வாறு தற்கொலை செய்து பாபத்தைச் சம்பாதிக்க லாமா! பிறந்தவன் இறப்பது சகஜமாக விருக்க, இதற்கு மனிதன் இவ்வளவு துக்கித்தல் அழகன்று" என்று சமாதானப்படுத்தினன். அதற்குப் பிராமணன், "உன் பிள்ளை இறந்திருந்தால் உனக்கு வருத்தம் தெரியும்; ஆகையால் என்னை வீணாகத் தடுக்காதே"

என்று தீயின் அருகிற் சென்றான். அப்பொழுது அர்ஜுனன், "என் பிள்ளை இறந்தால் உன்னைப்போல் துக்கத்தில் ஆழ்ந்து இறக்கமாட்டேன்; நான் புருஷன்; உன்னைப்போல் பெண்பிள்ளை யல்லவே" என்று சொல்லவும், பிராமணன் திரும்பி, "நீ இப்பொழுது சொல்லுவது உறுதிதானா? அப்படி நேர்ந்தால் நான் உயிர்விடேன் என்று சத்தியம் செய்" என்று சொன்னான். அர்ஜுனன் அவ்வாறே சத்தியம் செய்து கொடுக்க, அந்தணன், அக்கினி முதலியவைகளெல்லாம் மறைந்தன. அர்ஜுனன் சத்தியம் மாத்திரம் நின்றது. பகவான் அர்ஜுனனை மிகுந்த ஆச்சரியத்துடன் ஏறவிறங்கப் பார்த்தார். அர்ஜுனன் ஒன்றும் அறியாதவனாகிப் படைவீடு வந்துசேர்ந்தான். உடனே அபிமன்யுவின் மரண சமாசாரம் தெரியவந்தது. துக்கப் பெருக்கத்தால் அவன் தீ வளர்த்து, தான் அதில் விழுந்து இறக்க முயற்சித்தான். அப்பொழுது பகவான், அவன் எதிரில் வந்து, "நியாயம், எவருக்கும் பொதுவே? இஃதென்ன பேதபுத்தி அப்பா" என்று, அவன் வழியிற் செய்த சபதத்தையும், அதன் உட்கருத்தையும் ஞாபகப்படுத்தினார். அவன் துக்கம் அதிகமாயிருந்தும், 'என் வாக்குக்கு விரோதமாக நடக்க முயன்றேனே' என்ற வெட்கம் அதிகரிக்க, துக்கம் அடங்கி, அவன் தீயில் மூழ்காதிருந்தான்.

இதனால் "தனக்கென்றால் ஒன்று, பிறர்க்கென்றால் வேறென்று" என்ற பேத புத்தியே துக்கத்துக்குக் காரணம் என்பது விளங்கும்.

— தமிழ்ப் பாரதம், துரோண பர்வம்.

36. துக்கம் நீங்கும் விதம்

ஸ்ரீராமர், சீதையை ஜனங்கள் ஏளனஞ்செய்த நிமித்தமாகக் காட்டுக்கு அனுப்பி வெகுநாள் ஆன பின்பு, அவர் அசுவமேத யாகம் செய்வதாகத் தீர்மானித்தார். அதற்கு ரிஷிகள் எல்லோரையும் அழைத்திருந்தார். சீதையும் குசலவர்களென்ற ராமரது பிள்ளைகளும் வால்மீகி ரிஷியோடு யாகத்திற்கு வந்துசேர்ந்தனர். யாகங்களில் பிரதிதினம் நடத்தவேண்டிய வைதிக காரியங்கள் முடிந்தபின்னர், சாயங்கால வேளைகளிற் சாஸ்திர விசாரம், புராண சிரவணம் முதலியவைகள் நடப்பது வழக்கம். அந்தச் சமயத்தில் தாம் செய்த ராமாயணத்தைக் குசலவர்களுக்கு அத்தியயனம் பண்ணிவைத்திருந்த வால்மீகி ரிஷி, அதை அவர்கள் மூலமாகச் சுவர்ண சீதையோடுகூட ஸ்ரீராமர் வீற்றிருந்த அசுவமேத மஹாமண்டபத்திற் கானம் செய்வித்தார். சீதை இல்லாமையால், பத்தினி ஸ்தானத்துக்குச் சுவர்ண சீதையை அமைத்துக்கொண்டிருந்த ஸ்ரீராமருக்குக் குசலவர் ரூபம், தேஜஸ் முதலியவைகளைக் கண்ணுற்றதும், தம்மை யறியாமல் மிகுந்த ஆவல் உண்டாக, வால்மீகி ரிஷியிடம் தமது எண்ணங்களை வெளியிட்டார். அப்போது அவர், அச்சிறுவர்கள் சீதையின் குமாரர்கள் என்றும், சீதையும் தம்மோடு வந்திருக்கிறாளென்றும் தெரிவித்தார். மறுபடி சீதையுடன் கூடிவாழலாமென்ற ஆவல் ஸ்ரீராமருக்குப் பிறந்தது. ஜனங்களின் அபவாதத்தை ஒருவாறு நீக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் ஒருபுறம் துன்புறுத்தியது. உடனே வால்மீகி ரிஷியை நோக்கி, "சீதை இந்த அசுவமேத மஹாமண்டபத்திற் பலர்

முன்னிலையில் தனது களங்கமற்ற நிலையை ஒரு சபத மூலமாகத் தாபிப்பாளானல், மறுபடியும் நான் அவளைச் சேர்த்துக்கொள்ளுகிறேன்'' என்று ஸ்ரீராமர் கூறினர். வால்மீகர் சீதையிடம் இதைக்கூறி மறுநாள் அவளைச் சபைக்கு அழைத்துவந்தார். அவளுக்கு அந்தச் சமயத்தில், "நிரபராதியான எனக்கு இம்மாதிரியான கஷ்டநிலை வந்ததே'' என்ற எக்கத்தாற் கொடிய கோபம் பிறந்தது. "நான் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையானல், பூமியே! விரைவிற் பமரென்று பிளந்து என்னையடக்கிக் கொள்வாயாக'' எனக் கொடிய சபதமொன்றைச் செய்தாள். உடனே அவ்வாறே ஆக, வெளிவந்த ஒரு விமானத்திலேறிச் சீதை பூமியுள் மறைந்தாள். மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஸ்ரீராமருக்கு அடங்காத் துக்கம் வந்துவிட்டது. காட்டிற் சீதையைப் பிரிந்த காலத்து எற்பட்ட துக்கத்தைவிட எத்தனையோ மடங்கு இத்துக்கம் அதிகமாக விருந்தது. அவர், உலகத்தையே யழித்துத் தற்கொலை கூடச் செய்து கொள்ளுவாரோ என்று பார்ப்பவருக்குத் தோற்றியது. அப்பொழுது எல்லாத் தேவர்களும் சூழ, பிரமன் ஆகாயத்தில் வந்து, ஸ்ரீராமரது உண்மை ஸ்வரூபத்தை அவருக்கு ஞாபகப்படுத்தி, "நடக்க வேண்டியவை நடந்தே தீரும்'' என்று குறிப்பாகக் கூறினர். உடனே ஸ்ரீராமரது கொடிய துக்கம் அடங்கிவிட்டது.

உண்மை உணர்ந்தால் துக்கம் தீரும்.

— இராமாயணம், உத்தர காண்டம்.

37. ஆத்துமா அழிவற்றது

முற்காலத்தில் கௌதமர் என்ற ஒரு ரிஷி இருந்தார். அவருக்கு நாசிகேதஸ் என்று ஒரு பிள்ளை இருந்தான். அவன் ஒரு யாகசமயத்தில் தன் தகப்பனார் நல்ல வஸ்துக்களைத் தானம் கொடுக்காது சாதாரண மானவைகளையே கொடுத்து வருவதைக் கண்டு, "என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கிறீர்" என்று கேட்டான். தான் தானம் கொடுக்கும் மாதிரியைத் தன் மகன் அறிந்து விட்டான் என்று கோபம் கொண்டு, "உன்னை எமனுக்குக் கொடுத்தேன்" என்று அவர் கூறினார். உடனே நாசிகேதஸ் தன் தகப்பன் சொற்படி எமபட்டணம் சென்று காத்திருந்து, அவனிடம் மூன்று வரங்களைப் பெற்று, "ஜீவன் இறந்தபின்பு ஆத்துமா இருக்கின்றது என்பர் சிலர்; ஆத்துமாவும் இறந்து விடுகின்றது என்பர் சிலர்; இவைகளுள் உண்மை எது?" என்பதை மூன்றாவது வரனாகக் கேட்டான். நாசிகேதஸை வேறொரு வரன் கேட்டுக் கொள்ளும்படி எமதர்மன் மன்றாடியும் பயன்படாமற் போய்விட்டது. நாசிகேதஸ் சிறந்த அறிவும் நல்லொழுக்கமு முடையவனாக இருந்ததால் அவன் எமன் கூறிய நய வாக்கியங்களால் ஏமாறாது தான் கேட்ட விஷயமே தனக்கு அவசியம் தெரியவேண்டுமென்று உறுதியாக இருந்துவிட்டான். எமன் மிக்க அரியவிஷயங்கள் பலவற்றைக் கூறிவிட்டு, "மூச்சுக்களால் மாத்திரம் மனிதன் உயிருடன் இருப்பதில்லை. இம் மூச்சுக்களுக்கு அப்பாற்பட்ட ஒரு வஸ்துவால் இவைகள் நிற்கின்றன. மாணத்துக்குப் பின் தனது கர்மம், எண்ணம் இவைகளுக்கு ஏற்ப இந்த ஆத்துமா பிறக்

கிறான். இப்படியிருப்பினும் இதற்கு யாதொரு குறை வும் இல்லை. இதற்கு அப்பாற்பட்டது ஒன்றும் இல்லை. இந்த ரகசியத்தை உணர்ந்தவனுக்குப் பிறப்பே இல்லை" என்று ஆத்துமாவின் அழிவற்ற நிலையை எடுத்துக் கூறினான்.

இந்த ரகசியத்தையே தருமபுத்திரரும், "எது ஆச்சரியமானது?" என்று கேட்ட யக்ஷனுக்கு, "உல கில் ஒவ்வொரு நாளும் ஜனங்கள் இறந்து போய்க் கொண்டே இருக்கின்றனர்! இதை மற்றவர்கள் இடையறாது பார்த்துக்கொண்டிருந்தும், தாம் மாத்தி ரம் இறவாம லிருக்கவேண்டும் என்ற ஆவலை உடைய வரா யிருக்கின்றனர். இதுவே மிகுந்த ஆச்சரியம்" என்று கூறி வெளியிட்டிருக்கின்றார். அழியாது நீடித் திருக்கவேண்டு மென்ற ஆவல், பிறர் மாணத்தைப் பார்த்துக்கொண் டிருக்கும் போதே, மனிதனிடம் பொங்கி எழுகின்றது. இவ்வாறு ஆவல் எழுவது, மனிதருக்கிருக்கும் ஒரு வஸ்துவின் சிறப்பால் நடக்க வேண்டுமென்பது ஒருவாறு வெளியாகிறது. இந்த ஆச்சரியமான எண்ணமே மனிதனிடம் ஓர் அழிவற்ற வஸ்து புதைந்து கிடக்கின்றது என்பதை நன்கு குறிப் பிக்கின்றது. இவ் வஸ்துவைத்தான் பெரியோர் ஆத் துமா என்று சொல்லுவர்.

— சாந்தோக்கிய உபநிஷத்.

— மஹாபாரதம், ஆரணிய பர்வம்.

38. கர்மத்துக்குத் தகுந்தபடி ஜன்மம்

முற்காலத்தில் நமது தேசத்தில் திருமாலின் அவதாரமாக ரிஷபர் என்றொரு சிறந்த அரசர் இருந்தார். அவருக்கு அநேகம் பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் மூத்தவன் பெயர் பாதன். இப்பாதன் ராஜ்யம் ஆண்டுவந்த சிறப்பால் நமது தேசத்துக்குப் பரதகண்டம் என்ற பெயர் ஏற்பட்டது. அவருக்கு முதிர்ந்த வயது வந்ததும் அவர் வைராக்கியம் பெற்று நாடு முதலியவைகளை யெல்லாம் துறந்து காடு சென்று, தவம் செய்யலாயினர். அப்படியிருக்கையில் ஒருநாள், அவர் ஒரு மான்குட்டி அநாதையாக ஆற்றோடு போவதைக் கண்டு, அதன்மேல் கருணைகூர்ந்து அதைத் தண்ணீரிலிருந்து எடுத்துத் தமது ஆச்சிரமத்துக்குக் கொண்டுபோனார். இராச்சியம், மனைவி மக்கள் முதலியவற்றைத் துறந்து பகவத்தியானம் செய்யவந்த பாதருக்கு அந்த மானின்மேல் அபிமானம் உண்டாக, சற்று அசிரத்தையாய் அதை வளர விட்டுவிட்டார். கால் முளைத்ததும், மான் தன் சுபாவப்படி காட்டிற் சென்று சஞ்சரிக்கத் தொடங்க, ஒருநாள் அது காணாமற் போயிற்று. பாதருக்கு அன்று முதல் ஏக்கம் பிடித்துவிட்டது. அவர் இறக்கும்பொழுதும், மான் ஞாபகம் அவரைவிட்டு அகலவில்லை. அடுத்த ஜன்மத்தில் அவர் ஒரு மானாகப் பிறந்தார்.

அவர் மானாகப் பிறந்தும், பூர்வ ஜன்மத்தில் நல்ல வழிகளிற் பழகியிருந்ததால், விட்டகுறை வந்து தொட்டுக்கொள்ள, பழைய ஞாபகம் அவருக்கு இருந்தது. அபிமானத்தை வளரவிட்டமையால் தனக்கு இந்தக் கதி வந்ததென்பதை உணர்ந்த இந்த மான்,

மற்றைய மான்களுடன் சேர்ந்து, தனது அபிமானத்தை வளரவிடாது ஒதுங்கி, தான் முன் ஜன்மத்தில் தவம் செய்துகொண்டிருந்த காட்டிற்கே போய் பகவானிடம் பக்தி செய்துகொண்டு தனிமையாக வசிக்கத் தொடங்கியது. இவ்வாறு சத்காலக்ஷேபம் செய்துகொண்டு மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மானுக்கு முடிவுகாலம் வர, அது அடுத்த ஜன்மத்தில் ஒரு பிராமணனுக்குக் கடைசிப் புத்திரனாகப் பிறந்து எளிதில் மோக்ஷம் பெற்றது.

ஒருவன் சாகுங்கால் அவன் மனத்தில் இருக்கும் கடைசியான எண்ணமே, அடுத்த ஜன்மம் இன்னதென்பதைக் குறிப்பிக்கும். அது எப்படிப்பட்டதாயிருந்தாலும் முன் ஜன்மத்திற்செய்த கர்மங்கள் பயன்படாமற் போகவே மாட்டா.

— பாகவதம், 5-ம் ஸ்கந்தம்.

39. வேதம் ஆத்துமாவைக் காட்டும் விதம்

ஸ்ரீராமர், தாம் சித்திரகூட பர்வதத்தில் இருந்தால் அடிக்கடி அயோத்தியா வாசிகள் வந்து தம்மைக் கஷ்டப்படுத்துவார்கள் என்று எண்ணி, அதை விட்டுத் தண்டகாரணியம் போகப் புறப்பட்டார். வழியில் அத்திரியென்ற ஒரு மஹரிஷியின் ஆசிரமம் இருந்தது. அங்கே அவர் தங்கினர். இராமலக்ஷ்மணர்களுக்கு வேண்டிய உபசாரங்களை அத்திரி மஹரிஷி மிகுந்த சிரத்தையுடன் செய்தார். அந்தச் சமயத்தில் அவர் மனைவியாகிய அனசூயை என்பவள், மிக்க அன்புடன் சீதையை அழைத்துக்கொண்டு உள்ளே



அநுமார் பக்தி பரவசத்தால் கடலைக் கடத்தல்



வருணன் ஸ்ரீராமரிடம் சரணமடைதல்

சென்றாள். அங்கு, சீதைக்கு ஸ்நானம் முதலியவை கள் செய்துவைத்துத் தன்னிடமிருந்த உயர்ந்த வஸ்தி ரங்களைக் கொடுத்து அணிந்துகொள்ளும்படி செய்து, காட்டுப் புஷ்பம் முதலியவைகளால் தனக்கு ஆசை தீரும்வரை அவளுக்கு அலங்காரம் செய்தாள். அவர் கள் அன்புடன் வார்த்தையாடிக்கொண் டிருக்கையில், சீதை தன் கல்யாண வைபவங்களை எடுத்துரைத்து, "இவ்வாறு தனுர்ப்பங்கம் செய்து என்னை ஸ்ரீராமர் கல்யாணம் செய்துகொண்டார்" என்பதை எடுத்து விஸ்தரித்தாள். உடனே அனசூயை, "ஸ்ரீராமரைக் காட்டு பார்ப்போம்" என்றாள். இவர்கள் இருவரும் எழுந்து, ரிஷிகள் மத்தியில் பேசிக்கொண்டிருந்த ஸ்ரீராமரிடத்து அருகில் மறைவாய் வந்துநின்றனர். அப்பொழுது அனசூயை, தன் விரலால் சுட்டிக்காட்டி "இவர்தானா ராமர், இவர்தானா ராமர்" என்று கேட் டுக் கொண்டுவர, சீதை, "இல்லை, இல்லை" என்று சொல்லிக்கொண்டே வந்தாள். முடிவில் இராமரைச் சுட்டிக்காட்ட, சீதை தலைகுனிந்து வெட்கி மௌன மானாள். உடனே அனசூயைக்கு ஸ்ரீராமர் இன்னார் என்று விளங்கிவிட்டது.

இதுபோலவேதான், வேதமும் ஆத்தும விஷயத் தைக் கூறுங்கால், ஆத்துமா, "ஈதல்ல, ஈதல்ல" என்று பிரபஞ்ச வஸ்துக்களை யெல்லாம் ஒதுக்கிக் கொண்டே வந்து, முடிவில் மிகுந்திருக்கும் வஸ்துவை 'இன்ன தன்மையது' என்று கூறமுடியாமல் மௌன மாகிச் சொல்லாமற் சொல்லும்.

— ஸீதாராமாஞ்சனேய ஸம்வாதம்.

40. சன்னியாச லக்ஷணம்

முன்னொரு காலத்தில் சுலபை என்ற சன்னியாசினி உலகம் முழுவதும் திரிந்துவருகையில், மிதிலை அரசனாகிய ஜனகர் மோக்ஷ சாதனத்தை அனுஷ்டித்துத் தேர்ந்தவர் என்று கேள்விப்பட்டு அவரிடம் சென்றாள். ஜனகர் அவளை உட்காரவைக்க, இருவரும் மெய்ம்மறந்து சம்பாஷிக்கத் தொடங்கினர். ஜனகர் அவளை நோக்கி, தாம் பஞ்சசிகர் என்பவரிடம் உபதேசம் பெற்ற விதத்தையும், அதை இராஜ்ய மத்தியிலிருந்தபடியே அப்பியசித்துச் சித்திபெற்ற வழியையும், அப்பொழுது தம் மனம் தாமரையிலைத் தண்ணீர்போல் ராஜ்யத்திற் சம்பந்தமற்றிருப்பதையும் எடுத்துக் கூறினார். இப்படிக் கூறிவருகையில், தாம் ராஜதர்மத்தை விடாது மோக்ஷ சாதனத்திற் பழகுபவன் என்றும் அவள் பெண்ணாக விருந்தும், அவளது தருமப்படி ஒரு புருஷனுக்கு அடங்கியிராமல், சன்னியாசினியாக உலகெல்லாம் திரிந்துவருவது அழகல்லவென்றும் குறிப்பாக எடுத்துக் கூறினார். அதைக் கேட்டு சுலபை, மனங்கோணாது மொழியலானாள்:—

"நான் உயர்குடிப் பிறந்தவள்; பிரதானர் என்ற ராஜரிஷி வம்சம். எனக்குத் தகுந்த புருஷன் அகப்படாததாலும், எனக்கு மோக்ஷ தரும ஞானம் ஏற்பட்டிருந்தபடியாலும், என் நிலையை ஒரு பொருட்டாக எண்ணாது பிரமசாரிணியாக உலாவலானேன். உண்மையாகப் பார்க்கில் மனப்பற்று இல்லாதிருத்தலே மிகச் சிறந்தது. எந்த நிலையிலிருந்தாலும் பெரியோருக்கு இந்த நிலை இருக்கும். நீர் அரசாராகப் பிறந்து ராஜ்யத்திற்கு அதிபதியானீர். அதைவிடாது நீர் சந்நியாசம் சம்பா

கிறீர். எனக்குத் தகுந்த நாயகன் அகப்படாததால், நான் இருந்தபடியே யிருந்து சந்நியாசினி யானேன். நம் மிருவருடைய சன்னியாசத்திற்கும் பேதமே இல்லை. ஆனாலும் உமது வியவகாராதிகளை நோக்கில், அவைகள் உம்மை அடிக்கடி கலக்க, நீர் தேறுகிறீர். எனக் கேற்பட்டிருக்கும் நிலையோ அப்படியல்ல. எப்பொழுதும் கலங்கா நிலையே எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் உலகவாழ்வு சம்பந்தப்பட்டவரையில், நம்மிருவருக்கும் சற்றுச் சுகபேதம் உண்டு. மனச் சம்பந்தபட்ட வரையில் நம்மிருவருக்கும் வித்தியாசமே இல்லாததால், நாம் வீண்தர்க்கம் செய்யவேண்டியதே இல்லை'' என்று சொன்னாள். அதற்கு ஜனகர் பதில் ஒன்றும் கூறாது அடங்கிவிட்டார்.

உள்ளத்துறவே துறவு,வெளித்துறவு அதற்குச் சாதனம்.

— மஹாபாரதம் சாந்தி பர்வம்.

41. பிரமஞான ஸாதனம் (1)

முன்னொரு காலத்தில் ஜபாலை என்றொரு ஸ்திரீ இருந்தாள். அவளுக்கு சத்தியகாமன் என்றொரு பிள்ளை இருந்தான். அவன், வயதுவந்ததும் தாயை நோக்கி, "நான் பிரமசாரியாக விரும்புகிறேன்; என் குலமென்ன கோத்திரம் என்ன?'' என்று கேட்டான். அதற்கு அவள், "நான் சிறுபெண்ணாக இருந்தபோது நீ உண்டானாய். அந்தக் காலங்களில் நான் அதிதிகளை ஆராதிப்பதில் அதிக ஆவலாக இருந்துவிட்டேன். நீ பிறப்பதற்குள், உன் தகப்பனார் இறந்துவிட்டார். உன் குலகோத்திரங்களை விசாரித்துத் தெரிந்துகொள்ள

எனக்குக் முடியாமற் போய்விட்டது; எனக்கு ஜபாலே என்று பெயர். உனக்கோ சத்தியகாமன் என்ற பெயர் இருக்கிறது. ஆதலால் உன்னைக் கேட்கும்போது நீ சத்தியகாம ஜாபாலன் என்று சொல்லிக்கொள்; இதுவே போதும்'' என்றாள். அவன் தாயின் உத்தரவைச் சிரமேற்றாங்கி கௌதமரென்ற ரிஷியினிடம் சென்று தன் கருத்தைத் தெரிவித்தான். குலகோத்திர விஷயமாக அவர் அவனை விசாரிக்க, தன் தாய் கூறியபடி ஒன்றையும் ஒளிக்காது அவன் கூறிவிட்டான். அவனது கபடமற்ற மொழியைக் கேட்டு நன்மதிப்பும் திருப்தியும் அனுதாபமுங் கொண்டு கௌதமர், அவனைத் தம்மிடம் முறைப்படி வாச் செய்து அவனுக்கு உபதேசிக்க வேண்டுவனவற்றை ஒருவாறு உபதேசித்தார். பின்னர் அவனிடம் நானூறு பசுக்களைக் கொடுத்து, அவைகளை ''மேய்த்துக் கொண்டுவா'' என்று அனுப்பினர். குருவின் குறிப்பை யறிந்த சிஷ்யன், ''இவைகள் நன்றாகத் தேறிப் பெருகிய பின்னர்தான் திரும்பி வருவேன்'' என்று கூறிப் போனான். அவனுக்குச் சத்தியம், குருபக்தி, ஒழுக்கம் ஆகிய நற்குணங்கள் இருந்ததால், எல்லா வஸ்துக்களி லிருந்தும் நல்ல உபதேசங்கள் வெளியாயின. கொஞ்ச காலமானதும், மந்தையிலிருந்த ஒரு பசு சத்தியகாமனைக் கூவி அழைத்து, ''எங்களை உமது குருவீடு கொண்டுபோய்ச் சேர்த்து நீர் சுகமாய் இரும். நாங்கள் பெருகிவிட்டோம்'' என்று கூறி ஒருவாறு பிரமஞானத்தை அவனுக்கு உபதேசம் செய்தது. அதன் விருப்பத்தின்படியே அவன் குருவின் வீட்டிற்குத் திரும்பிவருகையில், அக்கினி அன்

னம் நீர்ப்பறவை முதலியவைகளும் அவனுக்கு பிரம ஞானத்தை உபதேசித்தன. குருவீடு வந்ததும், அவர், அவன் முகத்திற் பிரகாசித்த தேஜஸிலிருந்தும், அவன் மேலான நிலையை யுணர்ந்து உபதேசம் பெற்ற வழியையும் கேட்டறிந்து, திருஷ்டாந்த பூர்வமாக அவைகளை வற்புறுத்திப் பூர்ண உபதேசத்தைச் செய்துமுடித்தார். சத்தியகாமன் ஒரு பெரிய ரிஷி யானான்.

சத்தியமும், தவமும் சிரத்தையும் பிரமஞானத் துக்குத் தகுந்த சாதனங்கள்.

— சாந்தோக்ய உபநிஷத்.

42. பிரமஞான ஸாதனம் (2)

முன்னொரு காலத்தில், நாரதர் சநத்குமாரரை யடுத்துத் தமக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று மிக்க விநயத்துடன் கேட்டார். அதற்கு அவர், "உனக்குத் தெரிந்தவைகளைக் கூறு, மற்ற விஷயங் களை நான் உபதேசிக்கிறேன்" என்றார். அப்பொழுது நாரதர், "நான்கு வேதம் இதிகாச புராணங்கள், வியா கரணம், சிராத்த காண்டம், கணிதம், சகுன சாஸ்திரம் கலாசாஸ்திரம், தர்க்கம், தர்மசாஸ்திரம், ராஜ்யதந்திரம், நிருத்தம், சிக்ஷை, பூதசாஸ்திரம், தனுர்வித்தை, வான சாஸ்திரம், ஜோதிஷம், பாம்பாட்டி வித்தை, கானம் முதலிய ரஸிகசாஸ்திரம் ஆகிய சாஸ்திரங்களை நான் பயின்றிருக்கிறேன். பயின்றிருந்தும் எனக்கு வாக்கு ஞானமும், பேசும் திறமும் ஏற்பட்டிருக்கிறதே யொழிய பிரமஞானம் வந்தபாடில்லை. அது வந்தால்

துக்கநிவர்த்தி என்று கூறப்பட்டிருக்கிறது. எனக்கு இன்னும் துக்கம் தீரவில்லை. என்னைக் கிருபைகூர்ந்து காக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். இப்படிக் கூறியதும், சனத்குமாரர் நாரதனைப் படிப்படியாக நாமம், வாக்கு, மனம், சங்கற்பம், சிரம் முதலியவைகள் மூலமாகப் பிராணன்வரை உணர்த்திக் கொண்டுபோய், அவைகளின் சிறப்பை எடுத்து விளக்கினர். அதன்மேல் சத்தியம், அறிவு, எண்ணம், சிரத்தை, நிஷ்டை, தர்மம், சுகம் முதலியவற்றின் ரகசியங்களைக்கூறி, அகண்டமாகிய ஆத்தும வஸ்துவின் லக்ஷணத்தை எடுத்து விஸ்தரித்தார். இதன்பின்பு நாரதருக்கு, "ஆகாரம் (இந்திரியங்களால் உட்கொள்ளப்படுவது) சுத்தமானதும் (விருப்பு, வெறுப்பு நீங்கியதும்), மனம் சுத்தமாவதற்குக் காரணமாகும், பின்னர் ஞாபகம் திடப்படும். அதனால் பந்தம் நீங்கும்" என்ற மார்க்கத்தைக் காட்டி, நாரதருக்கு அஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட வஸ்துவைத் தரிசனம் செய்வித்தார்.

மனச் சுத்தமும், ஆழ்ந்த விசாரணையும் விடாப் பழக்கமும் பிரமஞான ஸாதனங்கள்.

— சாந்தோக்ய உபநிஷத்.

43. பிரமஞான ஸாதனம் (3)

ஜானசுருதி என்ற அரசனுக்கு ஒரு பேரப்பிள்ளை இருந்தான். அவன் கொடையாளி. உதாரகுணமுடையவன் 'தன் வஸ்துக்களாலே எல்லோரும் நன்மை யடையவேண்டும்' என்ற எண்ணத்துடன்

சத்திரம், சாவடிகள் முதலியவற்றை எங்கும் கட்டுவித்தான். இவன் ஒரு நாள் இரவில் தன் உப்பரிகையின் மேல் உட்கார்ந்திருக்கையில், மேலே சில அன்னப்பறவைகள் பறந்துபோயின. அவற்றுள் ஒன்று மற்றொன்றை நோக்கி, "ஜானசுருதி போன் மகாகீர்த்திமான், அவன் தேஜஸ் சுவர்க்கமெங்கும் பரவியிருக்கிறது. அவனிடம் அணுகினால் நீ பஸ்மமாகி விடுவாய்" என்றது. அதற்கு மற்றொன்று, "இவன், சகடரைக்வரா என்ன? அவர் மகா ஞானி; அவருக்குச் சகல பலனும் கைகூடும். அவரைப்போல அறிந்து தெளிந்தவருக்கல்லவா அவ்வாறு உண்டாகும்! இந்த அரசன் அவருக்கு எம்மட்டு? என் வீணுகத் துதிக்கிறுய்?" என்றது. இதைக்கேட்டு ஜானசுருதி போன், அந்த ரைக்வரைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி தன் வாயில் காப்பவனை ஏவினுன். சேவகன் போய்த்தேடி எங்கும் காணுது, ஒரு வண்டியின் அடியில் சிரங்கு சொறிந்துகொண்டு ரைக்வர் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். இதை அரசன் அறிந்து ஏராளமான திரவியங்களை எடுத்துக்கொண்டு அவர்முன் வந்து, "தாங்கள் உபாசிக்கும் தேவதா ரகசியத்தை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான். அதற்கு அவர், "இவைகள் எனக்கு வேண்டாம், போய்வா" என்ருர். இவர், கிரகஸ்தாசிரமம் நடத்துவதற்குரிய ஒரு பெண்சாதி வேண்டுமென்று விரும்புவதாகக் குறிப்பால் அறிந்த அரசன், திரவியங்களோடும் தன் பெண்ணையும் கொண்டுவந்து ரிஷிமுன் நிறுத்தினுன். உடனே அரசனது நற்குணங்களையும் குருவின் குறிப்பறிந்து நடக்கும் திறனையும் கண்டு

மெச்சி, அவனுக்குப் பகவானது விசுவரூபத்தை யறிதற்குரிய விஷயத்தை எடுத்து உபதேசித்து, அவனுக்குச் சிறந்த ஞானத்தைப் புகட்டினர்.

குருவின் குறிப்பறிந்து வேலைசெய்யும் திறனும், நற்குணமும் பிரமஞான ஸாதனங்கள்.

— சாந்தோக்ய உபநிஷத்.

44. மகான்கள் நிலை

பரதருக்கு மான் ஜன்மம் நீங்கியதும், ஆங்கிரஸர் குலத்தில், இளையாள் வயிற்றில் கடைக்குட்டியாக அவர் பிறந்தார். பிறந்தநாள் முதல், அவருக்குப் பேச்சு வரவில்லை. வயது முதிர்ந்தும், மந்தனைப்போல் காணப்பட்டார். என்ன சொல்லிக்கொடுத்தும் ஒன்றும் ஏறவில்லை. மூன்றும் ஜன்மத்தில் ஜீவகாருணிய மூலமாக அபிமானத்திற்கு ஆளாகி மான் ஜன்மம் அடைந்து தத்தளித்தது அவர் மனத்தைவிட்டு அகலவில்லை. ஆதலால் ஈசுவரத் தியானத்தைத் தவிர வேறு எதையாவது செய்வதில் இந்த ஜன்மத்தில் மனத்தைச் செலுத்திவிட்டால் வேறு என்ன ஆபத்து வருமோ என்று பயந்து, தமது சிறப்பை யெல்லாம் அடக்கிக்கொண்டு நீறுபூத்த நெருப்பைப்போல் அவர் விளங்கினர். "பாலர், உன்மத்தர், பிசாசு இவர்களைப் போல் பெரியோர்கள் இருப்பார்கள்" என்ற வேத வாக்கியப்படி அவர் நடந்துகொண்டதால், அவருக்குச் சடபரதர் என்ற பெயர் வந்தது. அவர் ஒரு வேலைக்கும் உபயோகமில்லை என்று கண்டு, அவர் தமையன்மார் அவரை வயல்வெளியில் பரண்மேல் காவலாக இருக்கவைத்தனர். அங்கிருக்கையில் சில கள்வர்கள்

அவர் தேக திடத்தைக் கண்டு அவரைப் பிடித்துக் கொண்டுபோய்த் தமது எஜமானன் முன்பு விட்டனர்

அவன் திருடர்களுக்குத் தலைவன் ; அவனுக்குப் பிள்ளை இல்லாமையால், பத்திரகாளிக்கு நரபலி யொன்று கொடுப்பதாக வேண்டிக்கொண்டிருந்தான். சடபாதரைக் கண்டதும், அவர் பலிக்கு ஏற்ற பசு என்று மகிழ்ந்து, அவருக்கு எண்ணெய் முழுக்காட்டிக் காளியின்முன்பு கொண்டுபோய், முட்டிபோட்டு உட்காரச் செய்தான். அவர் நிஷ்டையில் இருந்தபடியால், நடந்தவைகள் ஒன்றும் அவருக்குத் தெரியாது.

அவரை வெட்ட, கள்வர் தலைவன் உறையிலிருந்த கத்தியை உருவி ஓங்கினன். காளியினுள்ளும் புறமும் பரவிக் கலந்து அவளுக்குச் சக்தியைக் கொடுக்கும் பரம்பொருளை விடாது தியானம் செய்துவரும் பாதரைக் காளி பலியாக எப்படி அங்கீகரிக்கமுடியும்? பாதாது தவாக்கினியினல் தகிக்கப்பட்டு, விக்கிரகத்துள் இருப்புக் கொள்ளாமல், பிழைத்தாற் போதுமென்று காளி வெருண்டோடி வெளியே வந்து, திருடர் தலைவன் கத்தியைப் பிடுங்கிக்கொண்டு, பாதர் தவிர மற்றவர்கள் தலைகளை வீசி எறிந்துவிட்டு, உக்கிரம் அடங்கி விக்கிரகத்துட் புகுந்தாள். பாதரும், சுயேச்சையாகக் காளிகோவில் வாயிலில் வந்துட்கார்ந்தார். இவ்வாறு தேகம் நழுவுமளவும் உலகப்பிரக்ஞையேயின்றிப் பழகிவந்து, முடிவில் மீளாநெறி ஏகினர்.

மகான்கள் தேகப் பிரக்ஞையின்றி நிஷ்டையிலேயே இருப்பார்கள். எந்தத் தாழ்ந்த தேவதைகளின் சக்தியும் அவர்களிடத்திற் செல்லாது.

— பாகவதம், 5-ம் ஸ்கந்தம்.

45. கர்ம யோகம்

பாண்டவர்களுக்குப் பாட்டனான பீஷ்மர் கர்ம யோகத்தை நன்கு யனுஷ்டித்துக் காட்டியிருக்கிறார். இளவயதிலேயே தமது சுகங்களைக் கருதாது தகப்பனைச் சுகப்படுத்துவது தமது கடமை என்று அவருக்குச் சாஸ்திர ஆராய்ச்சி மூலமாய்த் தோன்ற, கடவுளிடம் பாரத்தைப் போட்டுவிட்டுத் தம் வாழ்நாள் முழுவதும் பிரமசாரியாகவே இருக்க விரதம் பூண்டார். இந்த விரதத்தைக் கலைக்க அநேக இடையூறுகள் உண்டாயின. பெண்மணி யொருத்தி (அம்பா) 'இவரைத்தான் விவாகம் செய்துகொள்வேன்' என்றிருந்தாள். அவளுக்குச் சகாயமாக இவர் குருவான பரசுராமரே வந்தார். தம் சொற்படி அவர், அம்பாவை விவாகம் செய்துகொள்ளாவிட்டால் தம்மோடு சண்டைக்கு வரவேண்டும் என்று கேட்க, பீஷ்மருக்கு அந்தச் சமயத்தில் குருவுடன் சண்டையிடுவதே உசிதம் என்று தோன்ற, அவர் அவ்வாறே செய்து குருவை ஜயித்துத் தமது விரதத்தை நிலைநிறுத்தினார். பின்னர், தமது குலம் சந்ததி யற்றுப்போக, தமது சிற்றன்னை சொல்லைக் கேளாது தமது விரதத்தை நிலைநாட்டினார். அதற்குப் பிறகு பாண்டவ கௌரவர்களுக்கு ஏற்பட்ட மனஸ்தாபங்களில் தம்மாலியன்ற வரையிற் புத்திமதி கூறிக் கௌரவர்களைத் திருப்பிவிடலாமென்று முயன்றார். முடிவில் பாரத யுத்தம் நடந்தே தீரவேண்டுமென்று நிச்சயிக்கப் பெற்றவுடன், இவர் நடந்துகொண்டவிதம் மிகுந்த அற்புதமாயிருந்தது. இவர் அந்தச் சமயத்தில், உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கக் கூடாது என்ற தருமத்

திற்கும், கொடியவர்களுக்குச் சகாயம் செய்து சிறப்புண்டாகும்படி செய்யலாகாது என்ற தருமத்திற்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டார். தம் தேகத்தால் ஆகும் உபகாரம் முழுவதையும் கௌரவர்கள் விஷயத்திற் செலுத்தி விடுவதென்றும், மனத்தாலாகிய ஆசீர்வாதம் முதலிய உபகாரங்களைப் பாண்டவர்கள் விஷயத்திற் செலுத்தி விடுவதென்றும் அவர் தீர்மானித்தார். பாரத யுத்தத்தில் பத்து நாள்வரையில் இவர், மனத்தைப் பாண்டவர்களுக்கும், தேகத்தைக் கௌரவர்களுக்கும் கொடுத்து, மனத்தால், தேக உபகாரம் எவ்வழியிலும் குறையாவண்ணம் சண்டைசெய்த சிறப்பே சிறப்பு. எவராலும் இம்மாதிரியான தரும சங்கட சமயத்தில் நடக்கவே முடியாது. அப்படி வஞ்சனை யொன்றுமின்றிப் பீஷ்மர் சண்டையிட்டு வருகையில், கௌரவர்களுக்கு மாத்திரம் அவர் பக்ஷபாதியென்ற எண்ணம் பலப்பட்டுக்கொண்டே வந்தது. ஒன்பதாம் நாள் இரவில் துரியோதனன் பீஷ்மரை நோக்கி, "பாண்டவர்கள் பக்கம் ஓங்கிவருகின்றது; தாங்கள் ஒன்றும் இயலாதவர்களைப்போற் சும்மா இருந்துவருகிறீர்கள். மேலும் உங்களுக்குப் பாண்டவர்களிடம் பக்ஷம் இருப்பதுபோல் காணப்படுகின்றது. நீங்கள் சண்டை செய்யும் வரையில் என் உயிர்த்தோஷனை கர்ணன் சண்டைபுரிவதில்லையென்று சபதம் கூறியிருக்கிறான். இப்படி நீங்களும் நன்றாகச் சண்டை செய்யாமல், சண்டை செய்பவர்களுக்கும் தடையாயிருப்பதில் பயன் என்ன?" என்று பலவகையாகப் பிரலாபித்தான். பீஷ்மர், "நாளையதினம், என் முழுபலத்தோடும் சண்டையிட்டுவிடுகி

றேன். பாண்டவர்களை அபஜயப் படுத்த முடியா விடில், நானாவது இறந்து விடுகிறேன். உயிருடன் திரும்புவதில்லை'' என்று வாக்குறுதி செய்தார்.

கௌரவர்கள் போனதும், ''நாம் சண்டை செய்வதில் துரியோதனனுக்கு அவநம்பிக்கை அதிகரித்து விட்டது; பாண்டவர்களுக்கும் ஜயம் வாராது. ஆதலால் இருதிறத்தாரும் சாந்தம் அடைய நாம் இறக்க வேண்டியது கடமை'' என்று பீஷ்மர் எண்ணிக் கொண்டிருக்கையிலேயே, பாண்டவர்கள் அவரிடம் வந்துசேர்ந்தார்கள். ''முன்னரே எங்களுக்கு உமது மரணோபாயத்தைக் கூறுவதாக வாக்களித்திருக்கிறீர். இவ்வளவு நாள் தாங்கள் செய்துவந்த சண்டையைப் பார்த்தால், தாங்கள் உயிருடனிருந்து சண்டைசெய்யும் வரையில் எங்களுக்கு ஜயம் கிடைப்பது அரிது என்று தோன்றுகிறது. இந்தக் கஷ்ட சமயத்தில் எங்களைக் கைதூக்கி விடவேண்டும்'' என்று மிகுந்த துக்கத்துடன் கேட்டார்கள்.

தருமபுத்திரருக்கு, தமக்கு யுத்தகளத்தில் ஏற்பட்ட கஷ்டங்களைவிடத் தமது பாட்டனாரைக் கொல்லும்படி வந்ததே என்ற கஷ்டம் அதிகரித்தது ; அவர் அதை எண்ணித் துக்கிப்பதைக் கண்ட பீஷ்மர், மிகுந்த அன்புடன், ''உனது பக்கத்தில் இருக்கும் சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு அர்ஜுனன் என்னுடன் சண்டைசெய்யட்டும்; நான் உடனே தோல்வியடைவேன்'' என்று உபாயம் கூறினார். இதை முன்னரே கூறினால், தம் நடுநிலைமைக்குத் தகுதியாயிராதென்று சொல்லாது விட்டிருந்தார் பீஷ்மர். பாண்டவர்கள் அவ்வாறே மறுநாட் செய்யவே, யுத்தகளத்

தில் பீஷ்மர் குற்றுயிராய்ச் சாய்ந்துவிழ, அவர்மேல் தைத்திருந்த அம்புகளெல்லாம் அவரை உயரத் தூக்கிப்பிடித்தன. உத்தராயணந்தான் தமக்குச் சாகுங் காலம் என்றுணர்ந்த பீஷ்மர், அந்த அம்புகளால் உண்டாகிய நோயை சுமார் அறுபது நாள் சகித்துக்கொண்டிருந்து, முடிவில் சாகவேண்டியது தமது கடன் என்றுணர்ந்து மரணத்தை வரவழைத்துக் கொண்டார். ஆகவே பீஷ்மர் தமது வாழ்நாட்களிற் செய்த விஷயங்கள் எல்லாவற்றையும் தமது கடமை என்று நன்ருக உணர்ந்து, அவைகளால் வரக்கூடிய பலனைக் கவனியாமலே கடவுள்மேல் பாரத்தைப் போட்டு நடந்துவந்தார். கர்ம யோகத்தின் லக்ஷணங்கள் ஆவன :—

(1) பலனில் இச்சையை விட்டுக் கடமைகளைச் செய்தல்.

(2) கர்மங்களின் பலனை பகவதர்ப்பணம் செய்தல் என்பன. — மஹாபாரதம்.

46. பக்தி யோகம்

பாண்டவர்களுடைய பத்தினியாகிய திரௌபதி தேவி, கிருஷ்ண பரமாத்மாவிடம் மிகுந்த பக்தி செய்து வந்தாள். ஆபத்துக் காலத்திலும், சம்பத்துக் காலத்திலும் கிருஷ்ணபகவானது ஞாபகமே அவளிடம் மாருதிருந்தது. அந்த ஞாபகத்தாலேயே, அவளுக்கு வந்த பெரிய ஆபத்துக்களெல்லாம் மிக்க எளிதில் நீங்கின. அநேக அவசரங்களில் அவள் மனம் பூர்ணமாகப் பகவானையே சரணமாகக் கருதி நின்றது. சகுனியோடு ஆடிய மாயச் சூதில் பந்தயம் வைக்கப்

பட்ட காலத்தில், அவள் துச்சாசனனால் இழுக்கப் பட்டுக் சபைக்குக் கொண்டு வரப்பட்டாள். அவ்வி டத்தில் தன்னை அவமானம் செய்யவேண்டுமென்ற துச்சாசனனது கொடிய எண்ணத்தைத் தடுக்க அவள் எவ்வளவோ முயன்றும் முடியாதது கண்டு, தனது சக்தியால் ஆவது ஒன்றுமில்லை என்பதை நன்றாக உணர்ந்து, கையைச் சிரசின் மேல் தூக்கி, "ஹா கிருஷ்ணா! துவாரகாவாஸா" என்று பலவிதமா கத் துதித்து, அவரையே சரணமாக அடைந்து தன் னையும் மறந்து நின்றாள். அப்படி மனத்தையும் அகங் காரத்தையும் இழந்து பகவத்பரமாகவே ஈடுபட்டு திரௌபதி நின்றதும், மிகுந்த அற்புத விஷயம் ஒன்று வெளியாயிற்று. துச்சாசனன் அவள் வஸ்திரத்தை இழுக்க இழுக்க, உள்ளேயிருந்து அதிக விசித்திரமும் அழகும் பொருந்திய அநேக வஸ்திரங்கள் ஓயாது வளர்ந்துகொண்டே யிருந்தன. முடிவில் வஸ்திரங் களை இழுக்க முடியாமற் கைசோர்ந்து துச்சாசனன் கீழே விழும்படி நேரிட்டது.

இம்மாதிரியே வனவாச காலத்தில் துர்வாச முனிவர் பாண்டவர்களிடம் அகாலத்தில் வந்த பொழுது திரௌபதியின் உண்மையான பக்தி வெளிப் பட்டது. அக்ஷய பாத்திரத்தாலும் சோறு அளிக்க முடியாத அந்த அகாலத்தில் பகவானிடம் மனத்தைப் பதித்துத் திரௌபதி துதிக்க, அவர் நேரே வந்து அக்ஷயபாத்திரத்தையும், துர்வாஸ ரிஷி அவர்கள் சிஷ் யர்கள் முதலியோரது வயிற்றையும் ஒரேகாலத்தில் நிரப்பிவைத்து, பாண்டவர்களையும் காப்பாற்றி துர் வாஸருக்குப் புத்திவரும்படி செய்தார்.



ஸ்ரீமத் சங்கராசாரியர்



ஸ்ரீமத் ராமானுஜர்

இப்படியே பாரதக்கதை முழுவதிலும் திரௌபதியின் பக்தி ஆங்காங்கு வெளியாகும்.

இராமாயணத்தில் அனுமார், இராமர் விஷயமாக ஈடுபட்டு அற்புதச் செயல்களைச் செய்ததும் இந்தப் பக்தியின் சக்தியாலேதான். இராமர் என்றால், அனுமாருக்கு மிகுந்த அன்பும் ஆராமையும் உண்டாய் விடும். அவருக்காகப் பாடுபட்டு உழைத்தால் அனுமார் மனம் திருப்தியடையும். இப் பக்தியின் மிகுதியால் இராமர் வசமாகி, சீதையைத் தேடுவதற்காகக் கடலைக் கடந்ததும், இலக்ஷ்மணரை எழுப்புவதற்காகச் சஞ்சீவி பர்வதத்தை வெகு சீக்கிரத்திற் கொண்டு வந்ததுமாகிய இவ்வற்புதத் தொழில்கள் அவரால் செய்யப்பட்டன. 'தான்' என்ற எண்ணமே இல்லாது, இராமரிடம் அவர் ஈடுபட்டு நின்றவர். இப்பொழுதுங்கூட எங்கெங்கே ராமாயணக் கதை நடக்கின்றதோ, அங்கங்கெல்லாம் சிரத்தின்மேற் குவித்த கரத்துடனும், ஆநந்த பாஷ்பம் பெருகும் கண்களுடனும் அனுமார் வந்து சித்தமாயிருக்கிறார் என்று அவர் தோத்திரத்திலே கூறப்பட்டிருக்கிறது.

பக்தர்களுள் சிறந்தவரான பிரகலாதர், பக்தி இன்னதென்பதைப் பின்வருமாறு நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்:—"சாதாரண ஜனங்களுக்கு உலக விஷயங்களில் ஓயாது மனம் சென்று, அவ் உலகப் பொருள்களை எவ்விதத்திலாவது சம்பாதித்துச் சுகம் பெறவேண்டுமென்று எப்படித் தோன்றுகின்றதோ, அவ்வாறே ஓயாது பகவானிடம் மனம் சென்று அவரை அடைந்து ஆநந்திக்க வேண்டும் என்று தோன்றுமாயின் அதுவே பக்தியெனப்படும்." ஆகவே

பக்தி யோகத்தின் முக்கிய லக்ஷணங்களாவன:—

1. ஆராதிக்கும் வஸ்துவினிடம் மனம் இடையீடில்லாமற் பதிதல்;

2. 'நான் வேறு' என்ற எண்ணம் குறைந்து கொண்டே வந்து, முடிவில் அது ஒழிந்து, ஆராதிக்கும் பொருள் மாத்திரமாய் நிற்றல் என்பன.

47. ஞான யோகம்

பாண்டவ கௌரவர்களுக்குச் சிற்றப்பன் முறையில் விதுரர் என்றொருவர் இருந்தார். அவர் மஹா தருமவான். அவர் தமது ஜாதி தருமத்துக்கு ஏற்றபடி சகல கலைஞானங்களையும் கற்றுணர்ந்தவர்.

எல்லா விஷயங்களிலும் திருதராஷ்டிர மஹாராஜன் அவரிடம் புத்திகேட்டு அவர் வார்த்தைகளை மிகக் கௌரவப்படுத்தி நடந்துகொண்டு வந்தான். அப்படியிருந்தும், ஆதிமுதற்கொண்டே உலக விஷயங்களின் நிலையாமையை உணர்ந்தவர்போல் எக்காலத்திலும் எதற்கும் தாமாக முன் வந்து ஒன்றும் சொல்லாது, தம்மைக்கேட்ட அளவில் அவசியமான வரையிற் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி விதுரர் தமது மனத்தில் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாது சாந்தமாகவே இருந்தார். அவர் எவ்விஷயத்திலும் தமக்குத் தோன்றியவைகளை நிர்ப்பயமாக, சொல்லவேண்டிய சமயங்களில் சொல்லி வந்தார். துரியோதனன் பிறந்து கழுதைபோல் கத்திய காலத்தில், அவர் நிர்ப்பயமாய், "இவனால் உலகத்திற்கு மிகுந்த கேடு உண்டாகப்போகிறது; நூறு பிள்ளைகளில் ஒருவன் இறந்தால், என்ன குறை

ந்து போகும்? இவனைக் கடலில் எறிந்து விடுங்கள்" என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பின்னர் வரவரக் கௌரவர் கொடுமை அதிகரித்த காலத்தில் சண்டை சச்சரவுகளை அதிகப்படுத்தாது, விஷயங்களைச் சரிவர நடத்திவந்தார். துரியோதனாதி களுக்கு அநாவசியமான கோபத்தை இவர் உண் டாக்கவும் இல்லை; பாண்டவர்களைத் துரியோதனாதியர் கொடுமைக்கு ஆளாகும்படி விட்டுவிடவும் இல்லை. அரக்குமாளிகை விஷயத்தில் விதுரர் நடந்துகொண்ட மாதிரியே இதற்குச் சிறந்த திருஷ்டாந்தம். பாண்ட வர்கள் மாயச் சூதாடித் தோல்வி யடைந்த காலத்தில் சபைக்குக் கொண்டுவரப்பட்ட திரௌபதியின் கேள் விக்கு இவரே தயங்காது உண்மையான விடையளித் தார். இவ்வாறு விதுரர் வியவகாரங்களிற் சாதாரண மாகத் தலையிட்டுக் கொள்ளாமலும், அப்படி வியவ காரத்துள் புகும்படி நேரிட்ட காலத்தில் நிர்ப்பயமாய் மிகுந்த நேர்மையுடன் நடந்துகொண்டும் தமது காலத்தை ஒதுக்கியே கழித்துவந்தார்.

இவர் இப்படி நடந்துகொண்டு வருகையில், இவர் மனம் நன்றாகச் சுத்தம் அடைந்தது. துரியோத னாதியருடைய கொடுமையும் வர வர அதிகரித்தது. பாண்டவர்களை வனத்திலும் விராட நகரத்திலும் துன்பம் அனுபவிக்கச் செய்து, அவர்கள் வெளி வந்து தமது ராஜ்யபாகம் கேட்ட காலத்தில், ராஜ்யம் கொடுப்பதில்லையென்று திருதராஷ்டிரனைக் கொண்டு துரியோதனன் நயமாகப் பாண்டவர்களிடம் அறிவித் தான். அதற்காகத் தூதுசென்று திரும்பிய சஞ்சயன், 'பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள்ளா

விடில் நீர் உமது பிள்ளைகளை இழக்கும்படி நேரிடும்' என்று திருதராஷ்டிரனைப் பயமுறுத்திச்சென்றவுடன், அன்றிரவு தூக்கம் பிடியாது திருதராஷ்டிரன் விதுரரைப் புத்திமதி கேட்டான். அக்காலத்திலேயே விதுரருக்குத் துரியோதனனிடத்தில் பக்கலிலிருக்க மனம் ஒப்பவில்லை. பாண்டவர்களிடம் போனாலோ, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்ததாய்விடும் என்று தோன்றிற்று. பீஷ்மர் அகப்பட்டுக்கொண்ட கருமசங்கடத்தில் இவரும் அகப்பட்டுக்கொண்டார். யாவும் நடக்கிறபடி நடக்கட்டும் என்று மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு, திருதராஷ்டிரனிடம் வந்து கருமங்களை எடுத்துக் கூறுவதில் அன்றிரவு முழுவதையும் கழிக்கத் தொடங்கினர். சஞ்சயன் கூறியபடியே இவரும் கூறி முடிக்க, திருதராஷ்டிரன் தனக்கு ஞானவிஷயங்களை எடுத்துக் கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அதற்கு விதுரர், "அவ்விஷயங்கள் எனக்குத் தெரிந்திருந்தும், ஜாதி கருமப்படி அவைகளை எடுத்துக் கூற நான் தகுந்தவன் அல்லன்" என்று கூறித் தனது தியானபலத்தால் அந்த இடத்திற் பிரமாவின் மானஸ புத்திரரான ஸனத்குமாரரை வரவழைத்து அவனுக்கு ஞானோபதேசம் செய்யச் சொன்னர். அன்றிரவு நடந்த விஷயங்களால் விதுரரது ஞானச் சிறப்பு, தருமானுஷ்டானம், மனத்தின் வலிமை முதலியவைகள் வெளியாயின.

பின்னர், கண்ணன் பாண்டவர்க்காகத் தூது போன காலத்தில், பாண்டவர் பக்கத்தில் தாம் இருந்தலால், அஸ்தினபுரியில் தாம் உண்ணக்கூடிய சுத்தமான வீடு, நடுநிலைமையில் இருப்பவரான விதுரர்

வீடு ஒன்றே என்று மதித்து, எவரையும் கவனியாது அவர் வீட்டிலேயே போய்த் தங்கினர். பகவான் போனபின்னர், திருதராஷ்டிரன் வகை யறியாது குழம்பிக்கொண்டு விதுரரை யழைத்துக் கேட்டகாலத்தில் அவர், "துரியோதனன் பிறந்தபோதே சொன்னேனே; அவ்வாறு செய்திருந்தால் இங்கிலே வந்திராதே; இன்னும் தருணம் தப்பிவிடவில்லை. இப்பொழுதாகிலும் துரியோதனனைக் கடலிற்கொண்டு எறிந்துவிடும். அவன் இருக்கிறவரையில் நாசம் உம்மைவிட்டு அகலாது" என்று தைரியமாய்ப் புத்திமதி கூறினர். இதைத் துரியோதனன் மறைந்து கேட்டுக் கொண்டிருந்தான். உடனே மிகுந்த கோபம்வர, அவன் "நன்றிகெட்டவனே, என் ராஜ்யத்தைவிட்டு இன்றே போய்விடு" என்று பிதற்றினன். விதுரர் அதைக் கேட்டதும், 'பகவானே வழிவிட்டார்' என்று எண்ணினர். "அவனைவிட்டு எப்படி நீங்குவது என்றல்லவோ பார்த்திருந்தோம், இப்பொழுது தருணம் வாய்த்தது" என்று மிகுந்த சாந்த மனத்துடன் துரியோதனனையும் கடிந்துகொள்ளாது, பாண்டவர் பக்கமும் போக மனமில்லாதவராய் சந்நியாசியாக வெளிக்கிளம்பித் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டார்.

விதுரர் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு மனத்திலிருந்த பற்றுக்களை நீக்கி, மிகப் பரிசுத்தராய்த் திரும்பிவந்த காலத்தில், தருமபுத்திரர் துரியோதனுதியரை வேரோடு நாசம் செய்துவிட்டார் என்று கேள்விப்பட்டு ஓடோடியும் வந்து திருதராஷ்டிரனுக்கு நீதிக் கதைகள் சொல்லித் தேற்றி, காலக்கிரமத்தில் அவனுக்கு வைராக்கியம் வரும்படி செய்தார். அதன்

பின்பு அவனைக் காந்தாரி குந்தியோடு அஸ்தினாபுரியை விட்டு வெளியே வரும்படி செய்து, கங்கைக்கருகில் தவம் புரிந்து நற்கதியடையும்படி செய்தார். கங்கைக் கரை கொண்டுவந்து விட்டுவிட்டு, தீர்த்த யாத்திரையால் சுத்தமான தமது மனத்தில் ஞானோதயமாக, ஹரித்வாரம் சென்று அங்கு கிருஷ்ணபரமாத்மா பரமபதம் செல்லுங்கால், தமக்கு உபதேசிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மைத்ரேயர் அன்புடன் சொல்லியிருந்த விஷயங்களை அவரிடமிருந்து கிரகித்து நிஷ்டை கைகூடி, தேகாபிமானத்தைச் சற்றேனும் பாராட்டாத மேலான நிலையை அடைந்தார்.

இவ்வாறு அடைந்து, அவதூத சன்னியாசியாகித் தேகம் உட்பட ஒன்றையும் கவனியாதவராய்ப் பரம் பொருளோடு கலந்த மனத்துடன் காட்டில் பைத்தியம் பிடித்தவர்போலும் கட்குடியர்போலும் அவர் உலாவத்தொடங்கினர். இவரிடம் மிகுந்த அன்புபாராட்டிய தருமபுத்திரர் இந்நிலையில் இவரைக் கண்டார். அவர் முன்னிலையில் ஒரு மரத்திற் சாய்ந்த வண்ணம் இவர் ஸித்திபெற, இவர் தேகம் நழுவிவிட்டது. அன்பின் மிகுதியால் தருமபுத்திரர் இவருக்கு ஈமக்கடன்களைச் செய்ய முயன்றார். அப்பொழுது, "இறந்தபின் எல்லோர் விஷயத்திலும் இருப்பதுபோன்றதும், ஈமக் கடன்களைப் பெறுவதுமான சேஷம் இவர் விஷயத்தில் இல்லை. இவர் மேலான பதவியை அடைந்துவிட்டார். இவர் விஷயத்திற் செய்யப்படும் கர்மங்களெல்லாம் வீணேயாதலால் ஒன்றும் செய்யவேண்டாம்" என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று. அதனாலேயே

விதுரர் பிரமமாகி, விதேக முக்தி பெற்றார் என்பது வெளியாகும்.

இவர் சிறந்த ஞானயோகி. ஞானயோகத்தின் முக்கிய லக்ஷணங்களாவன :— (1) விஷயம் அநித்தியம், பிரமம் நித்தியம் என்ற அறிவு; (2) ஆத்துமாவே பிரமம் என்ற உணர்ச்சி ; (3) அதிற் கூறியபடி நின்று ஸஹஜ ஸமாதி பெற்று விதேக முக்தியடைதல் என்பவைகளே.

VI. ஆசாரியர்கள் சரிதை

48. ஸ்ரீமத் சங்கராசாரியர்

ஸ்ரீமத் சங்காசாரியர், கொச்சியைச் சேர்ந்த ஷோரனூர் இருப்புப் பாதையிலுள்ள ஆல்வாய் என்ற ஊருக்கு 5, 6-மைல் கிழக்கே யிருக்கும் காலடி என்னுங் கிராமத்திற் சுமார் *2,400 வருஷங்களுக்கு முன் அவதரித்தவர். இவர் தாய் தந்தையருக்கு முறையே ஆர்யாம்பா என்றும், சிவகுரு என்றும் பெயர். இவர்கள் சிவபக்தர்களா யிருந்தனர். இவர்கள் பக்திக்கு மெச்சி, பரமசிவனே இவர்களிடம் ஸ்ரீமத் சங்காசாரியாக அவதரித்தாரென்று இவரைப்பற்றிய சரித்திரங்கள் கூறுகின்றன. இவர் இளம்பிராயத்திலேயே மிகுந்த புத்தி நுட்ப முடையவரா யிருந்து சகல சாஸ்திரங்களையும் வெகு சீக்கிரத்திற் கற்றுணர்ந்தார். இளமையிலேயே இவர், தம் தகப்பனரை இழக்கும்படி நேரிட்டது. பின்னர், தாய்க்கு உதவியாக இவர் வளர்ந்துவரும் காலத்தில் இவரது கல்யாணப் பிரஸ்தாபம் ஏற்பட்டது. தமக்குத் துறவறத்திலேயே மனம் இருக்கிறதென்றும், ஆதலால் விவாகம்

* இவர் காலம் சுமார் 1,920-வருஷங்களுக்கு முன்புதான் என்று இக்காலத்தவர் மதித்திருக்கின்றனர். ஆனாலும் சுமார் 2,400-வருஷங்களுக்கு முன்னர் இவரது அவதார காலம் இருக்கவேண்டும் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றனவென்று இவ்விஷயத்தில் நூதனமாய் ஆராய்ச்சி செய்தோர் அபிப்பிராயப்படுகின்றனர்.

வேண்டாமென்றும் இவர் மறுத்தார். அப்பொழுது இவர் தாயார் மிகுந்த துக்கப்பட, அந்த வார்த்தையை அவ்வளவில் நிறுத்திவிட்டார். சில நாள் கழிந்த பின்னர், இவரும் இவர் தாயும் அருகேயிருந்த ஆற்றுக்கு நீராடச் சென்றனர். அங்கு முதலை யொன்று அவர் காலைக் கவ்விக்கொண்டது; அவர், "எனக்கு முடிவு காலம் வந்துவிட்டது, இப்பொழுதாவது ஆபத் சந்நியாசம் வாங்கிக்கொள்ள அனுமதி கொடுக்கவேண்டும்" என்று தாயை வருந்திக் கேட்டார். இந்தக் கஷ்ட சமயத்தில், தாய் மனமிரங்கி அனுமதி கொடுக்க, இவர் தம் மனத்திலேயே சந்நியாசத்துக்குரிய மந்திரங்களை யெல்லாம் தியானம் செய்து கொண்டு சந்நியாசியாகத் தீர்மானித்தார். முதலையும் இவரை விட்டுவிட்டது. கரை ஏறியதும், தாயாரைத் தம் உறவினரிடம் ஒப்புவித்து, அவள் முடிவு காலத்தில் தாம் எப்படியாவது வந்து உதவுவதாக வாக்களித்து இவர் குருவைத் தேடிக்கொண்டு தேச சஞ்சாரஞ் செய்யப் புறப்பட்டார்.

போகும் வழியிற் பல வித்துவான்கள், சிறு வயதா யிருப்பவர் சந்நியாசம் செய்துகொள்ளலாகா தென்று விஸ்தாரமாக இவருடன் வாதிக்க, இவர் சுருதி, யுக்தி முதலியவற்றால் வெகுநேரம் அவர்களுடன் தர்க்கம் செய்து, "சந்நியாசியாச்சிரமம் மிகவும் சிறந்தது! அது மோக்ஷத்திற்கு முக்கிய சாதனம்; அதை அடைவதில் வயது ஒரு தடை ஆகமாட்டாது. எவ்வயதிலாயினும், தகுந்த சாஸ்திர ஞானத்தின் பேரில் உலக விஷயங்களில் உண்மையான வெறுப்பு ஒருவனுக்கு ஏற்பட்டால், அவன் அப்பொழுதே சந்நி

யாசம் செய்துகொள்ளலாம்'' என்று முடிவு கூறி, அவ் வித்துவான்களை வாய் எடுக்கவொட்டாமற் செய்தார். அவர்களிடமிருந்து சந்நியாசப் பிரதிஷ்டாபனுசாரியர் என்ற பட்டப்பெயர் பெற்று, வடக்கே செல்லுகையில் நர்மதா நதி தீரத்தில் ஸ்ரீ கோவிந்த யோகி என்ற யதீசுவரரைக் கண்டு அவருக்குச் சிஷ்யனுக அமர்ந்து நிஷ்டை பழகி சித்திபெற்ருர். அவரிடத்தும் அவர் குருவாகிய ஸ்ரீ கௌடபாதரிடத்தும் தமக்குள்ள நன்றியறிதலைச் சங்கராசாரியர் பின்னர் தாம் செய்த கிரந்தங்களில் பல இடங்களில் தெரிவித்திருக்கிருர்.

ஆசாரியாது ஆக்ஞைப்படி அவர் காசி க்ஷேத்திரம் அடைந்து, அங்குச் சிஷ்யர்களை அங்கீகரிக்கத் தொடங்கினர். அங்கே இவருக்குப் பத்மபாதர் என்ற சிறுவரொருவர் சிஷ்யராக வந்து அமர்ந்தார்; அங்கே தான் சங்கராசாரியர் தமது வியாக்கியானங்களையும் அற்புதமான சிறிய சுலோகங்களையும் இயற்றியது. அங்கே, அவர் பஞ்சமனெருவனைத் 'தூர விலகு' என்று கூறின காலத்து, அவன் கேட்ட அத்வைதக் கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கருதி, ''பிரபஞ்சத்தை அத்வைத திருஷ்டியால் உணருபவன் எவனே, அவன் சண்டாளனுயினும் துவிஜனுயினும் என் குருவே'' என்று முடிவுபெறும் மனீஷா பஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்களையும், அநியாயமாய்த் தனது ஆயுள் முழுவதையும் இலக்கணப் பயிற்சியில் வீணுகக் கழித்த ஒருவனை நோக்கி பஜகோவிந்தம் என்று முடிவு பெறும் சுலோகங்களையும் இவர் வெளியிட்டார். காசிக்ஷேத்திரத்தில் அவருக்கும், மஹா ஞானியான

ஒரு கிழப் பிராமணருக்கும் பிரமஸூத்ர பாஷ்ய விஷயமாக வெகு தர்க்கம் ஏற்பட, அவர் முடிவில் தகுந்த ஆதாரங்கள் காட்டி, அவரைத் திருப்திப் படுத்தினார். வியாஸரே ஒரு கிழரூபமாக வந்து சங்கராசாரியரது அறிவின் நுட்பத்தைக் கண்டு ஆநந்தித்தார் என்று ஸ்ரீசங்கர சரிதைகள் கூறும்.

பின்னர், காசி க்ஷேத்திரத்திலிருந்து இவர் அத்வைத ஸித்தாந்தத்தைப் பரவச் செய்யத் தேச சஞ்சாரஞ்செய்யப் புறப்பட்டார்; பிரயாகையண்டை வருங்கால், அங்கு மாறுவேஷம் பூண்டு, பௌத்த மதத்தின் குற்றங்களைப் பௌத்த குருக்களிடமிருந்தே தெளிவாகத் தெரிந்துகொண்டு, பின்னர் அவைகளை எடுத்துக்காட்டி அந்த மதத்தைக் கண்டித்து, 'வேதத்தின் கர்ம காண்ட பாகங்களே மிகச் சிறந்தவை; ஈசுவரனை விட அவைகளே சிறந்தவை' என ஆரியதருமத்தை நிலைநிறுத்திய குமரிலபட்டரைக் கண்டார். அப்பொழுது அவர் சுற்றிலும் உமி முதலியவைகளால் மூட்டப்பட்ட நெருப்பில் பாதி எரிந்துகொண்டிருந்தார். அம்மாதிரி செய்யக் காரணம் என்னவென்று சங்கராசாரியர் கேட்க, அதற்கு அவர், "நான் என் குருக்களாகிய புத்தர்களுக்குத் துரோகம் செய்தேன்; கருமங்களின் சிறப்பை நிலை நிறுத்த, ஈசுவரனைக்கூட லக்ஷ்யம் செய்யாது விட்டுவிட்டேன். இவ்விரண்டு பாபங்களுக்கும் இதுவே பிராயச்சித்தம்" என்றார். பின்னர், அவருடன் சாஸ்திர ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற சங்கரரை நோக்கி, "எனக்கு மரண காலம் வந்துவிட்டமையால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் மாஹிஷ்மதி என்ற பட்டினத்தில்

என் சிஷ்யன் மண்டனமிச்ரன் என்னும் மஹா வித்துவான் ஒருவன் இருக்கிறான். அவனை நீர் திருப்தி செய்வித்தால் என்னைத் திருப்தி செய்வித்ததற்குச் சமானம்'' என்று கூறித் தேகத்தை விட்டார். இவரது நேர்மையையும் மனத்தின் சுத்தியையும் கண்டு மிகுந்த அன்புகூர்ந்து சங்கரர் சற்று வியப்படைந்தார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் மாஹிஷ்மதிக்கு வந்து, மண்டனமிச்ரரோடு வெகுநாள் வாதம் செய்து அவரைத் திருப்திப்படுத்திச் சந்நியாசி யாக்கினர். அப்பொழுது அவர் பெண்சாதியாகிய பாரதி தேவியும், துறவறம் பூண்டு, சங்கராசாரியரோடு கணவன் பின்னே புறப்பட்டாள். மண்டனமிச்ரருக்கு அந்த ஆச்சிரமத்தில் ஸுரேசுவராசாரியர் என்ற பெயர் வந்தது. பின்னர், சங்கரர் தக்ஷிணதேசத்தை நோக்கிப் புறப்பட்டார். இதற்குள் அவருக்குத் தோடகர், ஹஸ்தாமலகர் என்ற இருவர் சிஷ்யர்களாயினர். அவர் செல்லும் வழியில், கொடிய வழக்கங்களுடைய பல மதத்தினர் எதிர்ப்பட்டனர். அவர்களது மதங்களும், வழக்கங்களும் இன்னவையென்று அவர்களிடமிருந்தே சாவதானமாகத் தெரிந்துகொண்டு, அவர்களிடமிருந்த கெட்ட பழக்கங்களை யெல்லாம், வேதம் முதலியவைகளிலிருந்து தக்க ஆதாரங்களைக் காட்டி மறுத்து, அவர்கள் ஆராதனையை நிலைநிறுத்தி, அது சென்று முடியும் நிலையாகிய அத்வைத நிலையை நன்கு விளக்கி, மதத்துவேஷங்களை ஒடுக்கி, அவர்களையெல்லாம் சீர்திருத்தினர்.

பின்னர், தெற்கே துங்கபத்ரா நதி உற்பத்தி ஸ்தானத்தருகில் வந்துசேர்ந்தார். அங்கு அவர் சிருங்

ககிரி என்னும் இடத்தில் மடமொன்றைத் தாபித்து, அதில் தமது சிறந்த சிஷ்யரான ஸுரேசுவராசாரியரை அதிபதியாக ஏற்படுத்தினர். அங்கு அவர் கொஞ்சகாலம் தங்கியிருக்க, உடனிருந்த பாரதி என்பவளுடைய ஒழுக்கம், பரிசுத்தம் முதலிய சிறந்த ஆத்ம குணங்களைக் கண்டு, அவளது பிற்காலத்தில் அவளை அங்கேயே ஆராதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். அவள் சாரதாம்பிகையாக அம்மடத்துள் இன்னும் ஆராதிக்கப்பட்டு வருகிறாள்.

அங்கிருக்கையில் தம் தாயின் அபாய நிலை அவருக்குத் தெரியவந்தது. உடனே அவர் சிஷ்யர்களை விட்டுவிட்டுத் தாம் தனியாகக் காலடி வந்துசேர்ந்தார். அங்கு, சாகும் தருணத்திலிருந்த தாயாருக்குத் தகுந்தபடி உபதேசங்கள் செய்து, சுகமாக அவளைப் பரலோகம் சேர்ப்பித்துவிட்டு, அவளுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் செய்ய யத்தனித்தார். அங்கிருந்த பிராமணர்களெல்லோரும், "சந்நியாசிக்குக் கர்மம் செய்ய அதிகாரம் இல்லை" என்று கூறி அவருக்குச் சகாயம் செய்யாது ஒதுங்கிவிட்டார்கள். தாமே தம்மால் இயன்றமட்டும் தாய்க்குச் செய்யவேண்டியவைகளைச் சரிவர செய்துமுடித்து, தம்மைக் கஷ்டப்படும்படி விட்டுவிட்டவர்களது ஒழுக்கங்களை மாற்றிவிட வேண்டுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார். தாய் விஷயத்தில் சகாயமில்லாததால், அவர் எந்த எந்த மாதிரி யெல்லாம் செய்யும்படி நேர்ந்ததோ, அந்த அந்த மாதிரியாக அவரைத் தடுத்தவர்களெல்லோரும் எப்பொழுதும் செய்துவரவேண்டும் என்று அவ்வூர் அரசன் மூலமாய் ஏற்பாடுகள் செய்தார்.

இதன் பின்னர், அவர் தக்ஷிண தேசத்தின் கீழ்க் கரையோரமாக யாத்திரை செய்யப் புறப்பட்டுத் திருவானைக்காவல், கஜாரண்யம், காஞ்சிப்புரம், திருவொற்றியூர் முதலிய இடங்களிலிருந்த சாக்தர்களைச் சீர்திருத்திக்கொண்டு ஜகந்நாதம் வந்து, அங்கு ஒரு மடம் ஏற்படுத்தினர். பின்னர் ஆரியாவர்த்தத்தின் வழியாக யாத்திரைசெய்து அங்கிருந்த கொடிய மதஸ்தர்களைச் சீர்திருத்தித் துவாரகை வந்து அங்கும் ஒரு மடம் ஏற்படுத்தினர். காஷ்மீரம் சென்று அங்கிருந்த பௌத்தர் முதலியோரை ஜயித்து, வியாச பௌர்ணிமையன்று சர்வக்ஞபீடம் ஏறி மிகச் சிறப்புற்று விளங்கினர்.

இவ்வாறு மடங்களைச் சீர்படுத்திக்கொண்டு, ஆஸாம் தேசத்தில் காமரூபம் என்ற பட்டினம் வந்து, அங்கிருந்த அபிநவ குப்தன் என்ற பெரிய சாக்தேயனை எதிர்த்து தோல்வியுறச் செய்தார். அவன் கோபங்கொண்டு சங்காாசாரியர்மேல் ஆபிசாரப் பிரயோகம் செய்து, அவருக்கு மூலவியாதி வரும்படி செய்துவிட்டான். அதனால் வரவா அவர் பலம் குறைந்துகொண்டேவந்தது. அதைப் பத்மபாதர் உணர்ந்து, தகுந்த மந்திரங்கள் மூலமாக மாற்றிவிட்டார். ஆயினும் அந்த வியாதியின் வேகம் முற்றிலும் போகவில்லை. தேகம் தளர்வதைக் கண்ட ஆசாரியர் பதரிகாச்சிரமம் சென்று, அங்கோர் மடம் ஏற்படுத்தி, அருகே நாராயண க்ஷேத்திரமொன்றையும் கட்டிவைத்தார். பின்னர், கேதாரம் வந்து இளம்பிராயமாகிய 32-ம் வயதில் ஸித்திபெற்றார்.

ஸ்ரீமத் சங்காாசாரியர், வேதங்களில் அத்வைதம்

என்ற முடிவை எடுத்துத் தம் முன்னோர்கள் அனுஷ்டித்துத் தெளிந்தபடி உலகில் எல்லோரும் உணர்ந்து உய்யும்பொருட்டு அநேக கிரந்தங்கள் மூலமாக வெளியிட்டு யுக்திகள் மூலமாக அதை ஸ்தாபித்தார். அதன்படி:—

(1) பரமாத்மா ஒருவரே உண்மையான வஸ்து.

(2) ஜீவ ஜகத்தாகத் தோற்றுபவைகள் எல்லாம் மித்தியை: பரமாத்மாவே, கயிற்றிற் பாம்புபோல ஜீவனாகவும் ஜகத்தாகவும், ஈசுவரனாகவும் தோன்றுகிறார்.

(3) ஜீவாத்மா இதை நன்குணர்ந்து அனுபவித்துவிட்டால், கட்டு நீங்கி, 'நானே பரம்பொருள்' என்று தேறித் தெளிவன்; இதுவே மோக்ஷம்.

(4) வேதங்களிற் காணப்படும் மத பேதங்களெல்லாம் பலவிதமாக இருக்கும். ஜனங்களை இந்த அத்வைத முடிவிற் கொண்டுசேர்க்க அவசியமானவைகள்; ஆதலால் அவைகளைப் பின்பற்றுபவர் மனோநிலைக்கு ஏற்ற வழியைப் பின்பற்ற முயன்றால், கிரமமாக இந்த அத்வைத முடிவுக்கு வரலாம்; ஆதலால் ஒரு வழியையும் பழிக்க இடமில்லை.

என்று சகல மத ஸ்தாபனம் செய்து, அத்வைதத்தை ஸித்தாந்தம் செய்தார்.

49. ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர்

ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர் சென்னப்பட்டணத்திற்குத் தென்மேற்கே 20 மைல் தூரத்திலிருக்கும் ஸ்ரீ பெரும்பூதூர் என்ற ஊரில் சற்றேறக்குறைய 900-வருஷங்களுக்கு முன் அவதரித்தார். இவரை ஆதிசேஷ

னது அவதாரமென்று இவர் சரிதங்கள் கூறும். இவர் தாய்தந்தையர்கள் முறையே நஞ்சாம்பா, கேசவபட்டர் என்பவர்களே. அக்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் மதாதிபதியா யிருந்த ஸ்ரீஆளவந்தார் என்பவருக்கு இவர், தாய் வழியில் நெருங்கின உறவினர். இவருக்குத் தம்பி முறைமையில் கோவிந்தப்பட்டர் என்றொருவர் இருந்தார். இவர்கள் இருவரும் காஞ்சிப்புரம் சென்று யாதவப்ரகாசர் என்ற அத்வைத ஆசாரியரொருவரிடம் கல்வி கற்றனர். ராமாநுஜர் படித்து மேன்மேலும் விருத்தி யடைந்துவரும் சிறப்பைக் கேள்வியுற்று, ஆளவந்தார் ஸ்ரீரங்கத்திலிருந்து நேரில் வந்து, காஞ்சிப்புரத்தில் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாது இரகசியமாகவே யிருந்து ராமாநுஜரது கல்வித் திறமையைக் கண்டு மகிழ்ந்து, "இவரே நமக்குப்பின் மத அதிபதியா யிருக்கத் தகுந்தவர்" என்று மதித்து, தாம் வந்தது ராமாநுஜருக்குத் தெரிந்தால் எங்கே அவர் கல்விக்கு இடையூறு நேரிடுமோ என்று அஞ்சி, வந்தபடியே இரகசியமாக ஸ்ரீரங்கம் போய்ச்சேர்ந்தார்.

ராமாநுஜர் இவ்வாறு கல்வி கற்றுவரும் நாளில் சிற்சில விடங்களில் யாதவப்ரகாசர் எடுத்துக்கூறிய பொருள்கள் இவர் மனத்திற்குப் பொருந்தாதவை என்று தோற்ற, அவற்றின் பொருள்களைத் தாமே எடுத்து விஸ்தரிக்கலாயினர். இவர் கூறியது அங்கிருந்த சிஷ்யர்களுக்குப் பொருத்தமாகப் பட, குருவுக்கும் சிஷ்யனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. மேலும், அந்நாட்டு அரசன் பெண்ணைப் பேய் ஒன்று பிடித்து ஆட்ட, யாதவப்ரகாசர் என்ன சொல்லியும் நீங்காமல், அது ராமாநுஜரது உத்தரவின்மேல் அப்

பெண்ணை விட்டு ஓடிப்போய்விட்டது. அதனால் முன்னிருந்த மனஸ்தாபம் அதிகரிக்க, பின்னர் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தைச் சாக்கிட்டுக்கொண்டு யாதவப்ரகாசர், ராமாநுஜரைத் தம் சிஷ்யக்கூட்டங்களிலிருந்து நீக்கிவிட்டார். அது போதாதென்று, அந்த அத்வைத குரு, சிஷ்யரைக் கொல்வதற்காகக் காசி யாத்திரை என்ற வியாஜத்தைக்கொண்டு ராமாநுஜர், கோவிந்தப்பட்டர் முதலியோரையும் உடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். கொஞ்சதூரம் போவதற்குள் தம்மைக் கொல்லச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் ராமாநுஜருக்குத் தமது தம்பிமூலமாக வெளிவர, நடு இரவில் ராமாநுஜர் தப்பித்துக்கொண்டு விடியும் முன் காஞ்சிப்புரம் வந்துசேர்ந்தார்.

இங்கு வந்ததும், தாயாரின் வேண்டுகோளின்படி இவர் கிரகஸ்தாச்சிரமத்தில் அமர்ந்து, கஞ்சி வரதராஜருக்குத் தொண்டுசெய்து காலங்கழிக்கத் தொடங்கினர். இங்கு இப்படியிருக்க, ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஆளவந்தார் தமது காலம் சீக்கிரம் முடிந்துவிடுமென்று மதித்துத் தமது சிஷ்யர்களுள் பெரியவரான பெரிய நம்பி என்பவரைக் காஞ்சிப்புரம் அனுப்பி, எம் முயற்சி செய்தாவது ராமாநுஜரை அழைத்து வரவேண்டுமென்று சொன்னர். இவர் திரும்பிவருவதற்குள் ஸ்ரீ ஆளவந்தார், பகவான் பாதாரவிந்தங்களிற் சேர்ந்துவிட, அவரது தேகத்துக்குச் செய்யவேண்டிய கடன்களை மற்றைய சிஷ்யர்கள் செய்யத் தொடங்கினர்.

அச்சமயத்தில் ராமாநுஜரும் அங்கு வந்துசேர்ந்தார்; ஸ்ரீ ஆளவந்தாரிடம் இருந்த அன்பின் மிகுதியால் அவருக்கு மிகுந்த துக்கம் வர, அவர் தேகம்

முழுவதையும் மிகுந்த ஆவலுடன் உற்றுப்பார்த்தார். வலது கையில் மூன்று விரல்கள் மடிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். அதன் காரணத்தை விசாரித்த காலத்தில், ஆளவந்தாருக்கு மூன்று குறைகள் இருந்தனவென்றும், அவை (1) பிரமசூத்திரத்திற்கு எளிய நடையில் வியாக்கியானம் ஒன்று செய்வது; (2) பாராசர் என்ற பெயரைத் தகுந்தவருக்கு வைப்பது; (3) திருவாய்மொழிக்கு எளிய நடையில் வியாக்கியானம் செய்வது என்பன என்றும் தெரியவந்தது. அக்குறைகளைத் தீர்த்துவிடுவதாக ராமாநுஜர் வாக்களித்ததும், மடங்கிய விரல்கள் நிமிர்ந்தன. ஆளவந்தாரது ஈமக்கடன்கள் முடியும்வரை அங்கிருந்து, மறுபடியும் அவர் காஞ்சிப்புரம் திரும்பினர்.

தமது எண்ணம் முடிவு பெறாமையால், ராமாநுஜர் இன்னது செய்வதென்று தோன்றாமல் குழப்பத்தை யடைந்தார். அப்பொழுது அவருக்குப் பகவதனுக்கிரகத்தாற் "பரம்பொருளே சிறந்தது. முடிவான நிலையிற் பேதமற்றுப் போகாது, பக்தியே மோக்ஷ ஸாதனம். மோக்ஷம் பகவத் கிருபையால் வருவது, பெரிய நம்பியே சிறந்த ஆசாரியன்" என்ற விஷயங்கள் தெரியவந்தன. தெரிந்தவுடன், ஸ்ரீரங்கம் சென்று எப்படியாவது பெரிய நம்பியிடம் உபதேசம் பெற வேண்டுமென அவருக்குத் தோற்றியது. உடனே அவர் ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டார். இது ஒரு புறமிருக்க, ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் ஸ்தானத்தில் ஒருவரும் இல்லாமற் போக, அவருடைய பிரதம சிஷ்யர்களெல்லாம் சேர்ந்து பெரிய நம்பியை அழைத்து, "எப்படியாவது காஞ்சிப்புரம் சென்று ராமா

நுஜரை அழைத்து வரவேண்டும்'' என்று சொல்லி யனுப்பினார்கள். பெரிய நம்பி காஞ்சிப்புரம் நோக்கி வந்துகொண்டிருந்தார். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல' அவர்கள் மதுராந்தகம் ஏரிக் கரையிலுள்ள ஸ்ரீராமர் சந்நிதியில், ஒருவரை யொருவர் சந்தித்தார்கள். விசாரித்தபின் மேல் அவ்விருவரும் ஒருவரையொருவர் தேடிப் புறப்பட்டுவந்ததாக விவரம் தெரிந்தது. ராமாநுஜாது வேண்டுகோளின் மேல், அங்கு ஒரு மாத்தடியில் பெரியநம்பி அவருக்கு உபதேசம் செய்தார்; இருவரும் காஞ்சிப்புரம் வந்து அங்கேயிருந்து தமது குடும்பத்தினருடன் சிலநாள் சேர்ந்து வசித்தார்கள்.

ராமாநுஜர் மனைவி சிறந்த குணவதி யல்லளாதலினால் அவருக்குச் சிற்சில சமயங்களில் மனஸ்தாபம் வரும்படி நடந்துகொண்டாள். இரண்டு முறை அவர் மன்னித்தார். மூன்றும்முறை அவள் பெரிய நம்பியின் பெண்சாதியுடன் சண்டையிட, அவர் குடும்பத்தோடு புறப்பட்டு ஒருவருடனும் சொல்லிக் கொள்ளாது ஸ்ரீரங்கம் போய்ச்சேர்ந்தார். அதைக் கேட்டதும், ராமாநுஜர் மனம் மிக வருந்தியது; அந்தச் சமயத்தில், அவர் மாமனார் தம் பெண்ணை ஊருக்கு அனுப்ப வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, தாமதியாது அவளை அனுப்பிவிட்டு ராமாநுஜர் உடனே சந்நியாசம் வாங்கிக்கொண்டனர்.

இந்தச் சங்கதி வெளியானதும் அவரிடம் அநேகம் சிஷ்யர்கள் வந்து கூடினர். ஆளவந்தார் சிஷ்யரும் பிள்ளையுமான ஆரியரை, மற்றைய சிஷ்யர்கள் அனுப்பி, எம்முயற்சி செய்தாவது ராமாநுஜரை

ஸ்ரீரங்கம் அழைத்துவரவேண்டுமென்று ஏற்பாடு செய்தனர். ராமாநுஜர் ஸ்ரீரங்கம் வந்ததும் தமக்கு ஏற்பட்ட ஸ்தானத்துக்கேற்ப அதிகாரங்களைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினார். பெரிய நம்பியிடம் அவர் உபதேசம் பெற்றிருந்தும், வேறு குருக்களை நாடி மற்றைய சாஸ்திர விஷயங்களை அறிந்து கொள்ளும்படி நேரிட்டது. மந்திரார்த்தங்களைத் தெரிந்துகொள்ள அவர் வெகுநாள் திருக்கோஷ்டியூர் நம்பியிடம் நடந்து பார்த்தார். அவருக்குக் கருணை வாராதது கண்டு, இனிப் போகவேண்டுவதில்லை என்று தீர்மானிக்குந் தருணத்தில், ஆளவந்தார் சிஷ்யர்களால் தூண்டப்பட்டு, முடிவாக ஒரு முறை போவதாகத் தீர்மானித்தார். அம்முறை, நம்பி கருணைகூர்ந்து பகவத்கீதா ஸார சுலோகத்தை வெகு விஸ்தாரமாக உபதேசித்து, அதை அதிகாரிகள் அல்லாதவர்களிடம் சொல்லிவிடக் கூடாதென்று நிபந்தனை செய்தார். மந்திரார்த்தத்தையும், அதன் மூலமாக மனிதன் எளிதில் சீர்திருந்தி மோக்ஷம் அடையும் வழியை உணர்ந்ததும், உலகில் வீணே வழிதப்பி மதிமயங்கும் ஜனங்களுக்கு அவற்றை வெளியிட்டு அவர்களைச் சிறப்படையும்படி செய்யவேண்டும் என்ற அடங்கா ஆவல் ராமாநுஜருக்கு உண்டாய்விட்டது. குருவாஞ்சை அந்தச் சமயத்தில் முற்றும் மறந்து போய்விட, கருணை மிகுதியால் ராமாநுஜர் அருகேயிருந்த கோபுரத்தின் மீதேறிக்கொண்டு, உச்ச ஸ்வரத்தில் ஜனங்களுக்குக் கீதார்த்த ரகசியத்தை எடுத்து வெளியிட்டார். அதை அறிந்த குரு, அவரை அழைத்து விசாரிக்க, அவர், ''நான் செய்தது அபராதம்

தான். தகுந்த தண்டனையைப் பெறச் சித்தமாய் இருக்கிறேன்'' என்றார். குரு, ‘‘உனக்கு மீளா நரகம் இனிமேல் வரும், இங்கு ஒரு தண்டனையும் இல்லை'' என, ராமாநுஜர் ‘‘ஜனங்கள் துக்கம் நீங்கி மோக்ஷம் பெறுவது நிச்சயமானால், அவ்வாறு செய்த எனக்கு நரகம் வந்தாலும் வரட்டும்'' என்று மிகுந்த ஆராமை யுடன் சொன்னார். சிஷ்யனது ஆழ்ந்த கருணையைக் கண்டு குரு மகிழ்ந்து, ‘‘அதையே ஒரு மதமாகக் கொண்டு ஸ்தாபிக்கலாம்'' என அநுமதிகொடுத்தார்.

இந்தச் சமயத்தில் தமது சகோதர முறையி லிருந்த கோவிந்தப்பட்டர், யாதவப்ரகாசரோடு காசிக் குச்சென்று கங்கையில் ஸ்நானம் செய்யுங்கால், கையில் ஒரு லிங்கம் ஒட்டிக்கொண்ட நிமித்தமாகச் சிவபக்தராய் காளத்தியிலிருந்த விஷயம் அவருக்குத் தெரிந்தது. உடனே அவர் திருப்பதியிலிருந்த தமது மாமன்மூலமாகக் கோவிந்தப்பட்டரை வைஷ்ணவ மதத்திற்குத் திருப்பி, எம்பார் என்ற பேர்கொடுத்துத் தமக்குச் சகாயமாக வைத்துக்கொண்டார். அதன் பின்னர் ஆளவந்தார் பிள்ளையிடம், இவர் திருவாய் மொழி கற்றுக்கொண்டார். இந்தக் காலத்தில், ராமா நுஜரது நிலையைக்கண்டு சிலர் பொறாமைகொண்டு அவர் பிக்ஷைக்கு வருங்கால் அன்னத்தோடு விஷம் கலந்திட, அவர் அதைத் தற்செயலாய்க் கண்ட றிந்து, அதினின்றும் தப்பித்துக் கொண்டார். அன்று முதல் ராமாநுஜர் பிக்ஷைக்குப் போவது நின்றுவிட்டது. மடத்திலேயே அவர் ஆகாரத் திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பின்னர் ராமாநுஜர், யக்ஞமூர்த்தி என்று ஓர் அத்

வைத சந்நியாசியை வென்று, பின்னர் தமது சிஷ்யனான கூரத்தாழ்வாரது சகாயத்தால் பிரமசூத்திர பாஷ்யம் செய்து, அதைக் காச்மீரதேசத்து ஸாஸ்வதி பீடத்தில் அரங்கேற்றினார். அவ்விடத்தில், இவருக்கு ஹயக்ரீவ விக்கிரஹமும், 'பாஷ்யகாரர்' என்ற பெயரும் பரிசாக அளிக்கப்பட்டதாம். இவர் வியாக்கியானத்துக்கு ஸ்ரீபாஷ்யம் என்ற பெயரும் கிடைத்தது. இவர் தெற்கு நோக்கி வருங்கால், திருப்பதி வந்து அங்கிருக்கும் கோவில் விஷ்ணு கோவில்தான், சுப்பிரமண்யர் கோவில் அல்ல என்று ஸ்தாபித்தார். ஸ்ரீரங்கம் வந்ததும், அவர் சிஷ்யர் கூரத்தாழ்வாருக்கு, பகவதனுக்கிரகத்தால் ஒரு பிள்ளை பிறக்க, அதற்குப் பராசரப் பட்டர் என்ற பெயரிட்டு, அவர் மூலமாக ஸஹஸ்ர நாமத்துக்கு ஒரு வியாக்யானம் செய்வித்தார். தம்முடனிருந்த பிள்ளான் என்பவரிடம் திருவாய்மொழி விஷயமாக உள்ள ஞானத்தின் நுட்பங்களைக் கண்டு, அவர் மூலமாகத் திருவாய்மொழிக்கு ஒரு வியாக்கியானம் ஏற்படுத்தினார். இப்படிச் செய்யவே ஆளவந்தார் குறைகள் மூன்றும் தீர்ந்தன.

இப்படியிருக்கையில் குலோத்துங்க சோழன் என்ற அரசன், 'பரமசிவத்திற்குமேற் பரதெய்வமில்லை' என்ற கொள்கையைப் பரவச்செய்து, அதற்கு இணங்காதவர்களை யெல்லாம் கடுமையாய்த்தண்டித்து வந்தான். 'ராமாநுஜரையும் அழைத்து அதற்கு இணங்கச் செய்யவேண்டும்' என்று எல்லோரும் விரும்ப 'அவர் சீக்கிரத்தில் வந்துசேரவேண்டும்' என்ற உத்தரவும் பிறந்தது. ராமாநுஜருக்கு ஏதாவது அபாயம் வருமென்று பயந்து அவர் சிஷ்யனான கூரத்தாழ்வா

ரும் வேறொருவரும் சோழராஜன் சபைக்குப் போக ஒப்புக்கொண்டு, ராமாநுஜரைக் கிரகஸ்த வேஷம் பூண்டு தப்பி ஓடிவிடும்படி வேண்டிக்கொண்டனர்.

அவ்வாறே அவர் காவிரிக்கரை யோரமாக மேற்கேசென்று, சாளக்கிராமமென்ற ஊரில் தங்கினர். அப்போது அவர் கையிலுள்ள நாமக்கட்டி ஆய்விட்டது. இன்னவிடத்தில் அது அகப்படுமென்று தெரியவில்லை. மிகுந்த துக்கத்துடன் ராமாநுஜர் அங்கு உறங்குகையில், அருகே ஒரு பெரிய நாமக்கட்டியாலாகிய குன்று இருப்பதாகக் கனக்கண்டார். அங்குச் சென்று வெட்டிப்பார்க்க, நாமக்கட்டி அகப்பட்டதோடு உள்ளிருந்த கோவிலொன்றும் வெளியாயது. அதற்குத் திருநாராயணபுரம் என்று பெயர் கொடுத்தார். அங்கு வசிக்குங் காலத்தில் டில்லிபாக்ஷாவின் அரண்மனையில் ராமப்பிரியர் விக்கிரகம் இருப்பதாகக் கனக்கண்டு, மிகுந்த கஷ்டத்தின்மேல் வடக்கே சென்று, அந்த விக்கிரகத்தைக் கொண்டுவந்து, திருநாராயணபுரத்திற் பிரதிஷ்டை செய்தார். அதற்குள் வைஷ்ணவர்களைக் கஷ்டப்படுத்திய சோழன், தமது சிஷ்யரான கூரத்தாழ்வார் கண்ணை, அவர் கூறிய துடுக்கான பதிலுக்காகப் பிடுங்கிவிட்டதாகக் கேள்வியுற்று, தூதனொருவனை அனுப்பித் துக்கம் விசாரிக்கச்செய்தார். அவன் திரும்பி வருகையிற் சோழன் இறந்துபோன சமாசாரத்தையும் உடன்கொண்டுவந்தான். உடனே ராமாநுஜர் தமக்குள்ள அபாயம் நீங்கிவிட்டதென்று கண்டு, ஸ்ரீரங்கம் திரும்பிவந்து அங்குப் பன்னிரு ஆழ்வார்களது விக்கிரகங்களையும் ஸ்தாபனஞ்செய்து, அவைகளுக்குத் தகுந்த உற்சவங்கள் செய்ய எற்பாடு

செய்தார். அதன் பின்னர், கோவில் தருமகர்த்தனு யிருந்த ஸ்மார்த்தனுகிய அமுதன் என்பவனை வைஷ்ணவ மதத்திற்குத் திருப்ப, அவன் ராமாநுஜ தோத்திரமாக 108-பாடல்கள் பாடினன். அதையும் நாலாயிரப் பிரபந்தத்தோடு சேர்க்க அநுமதி பிறந்தது. அதன் பின்னர், அவர் ஆழ்வார்திருநகரி முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டு வருகையில், 'சிதம்பரத்திலிருந்த கோவிந்தராஜப் பெருமாள் விக்கிரகத்தைச் சைவர்கள் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட்டனர்' என்று கேள்வியுற்று, அவ்விக்கிரகத்தைத் தேடி எடுத்துத் திருப்பதி வந்து அங்கே மலையடிவாரத்தில் அதைத் தாபித்து, பிறகு யாத்திரை செய்துகொண்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். தமக்கு மரணதசை வருவதை அறிந்து அவர் தமது சிஷ்யர்கள் நால்வரிடமும் தமது பாஷ்யம் முதலியவைகளை யெல்லாம் ஒப்புவித்து, பிள்ளானிடம் நாலாயிரப்பிரபந்தத்தை ஒப்புவித்தார். அப்பிள்ளானே இவருக்குப்பின் இவர் ஸ்தானத்துக்கு வந்தார். இராமாநுஜர் பகவான் பாதாரவிந்தங்கள் சேருவதற்கு முன், அவரது விக்கிரகங்கள் மூன்று செய்யப்பட்டு ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்பூதூர், திருநாராயணபுரம் ஆகிய மூன்று இடங்களிலும் அவர் அநுமதியின்மேல் தாபிக்கப்பட்டன. அவர் 120-ஆம் வயதிற் சித்தியடைந்தார்.

ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர் நூல்களிற் காணப்படும் விசிஷ்டாத்வைதம் என்ற முடிவை எடுத்துத் தம் முன்னேர்கள் அநுஷ்டித்துத் தெளிந்தபடி உலகில் எல்லோரும் உணர்ந்து உய்யும்பொருட்டுப் பல கிரந்தங்கள் மூலமாக வெளியிட்டு யுக்திகளைக்கொண்டு அதைத் தாபித்தார். அதன்படி,

(1) உலகில் மூன்று வஸ்துக்கள் உண்டு; அவை யாவன:—சித், (ஜீவாத்மா), அசித்து (உயிரயற்றவைக ளுக்கு ஆதாரம்), ஈசுவரன் (விஷ்ணு);

(2) அவைகளிற் சித்துள்ளும் அசித்துள்ளும் பரமாத்மா பரவி நிற்க, அவைகள் பரம்பொருளுக்குத் தேகம்போல ஆகின்றன;

(3) அசித்தோடு சம்பந்தப்பட, சித் அசுத்தமாக விருக்கிற அணுவாக விருக்கிறது. இது பரமாத்மா கிருபையால் அசித் சம்பந்தம் நீங்கிவிட்டால், நெருப்புப் பொறி நெருப்புப்போ லிருப்பதுபோலவே, பரமாத் மாபோல ஆகி அவருடன் இருந்து சுகிக்கும். இதுவே மோக்ஷம்;

(4) பகவானை அடைய அவரிடம் சரணம் புக வேண்டும்; அப்பொழுது அவர் நமது ஆத்மாவைச் சுத்தப்படுத்தி மோக்ஷம் அளிப்பார் என்பன.

50. ஸ்ரீமத்வாசாரியர்

ஸ்ரீமத்வாசாரியர் என்பவர் உடுப்பி என்ற க்ஷேத்திரத்துக்கு அருகே உள்ள பஜக க்ஷேத்திரம் என்ற கிராமத்தில், சுமார் 750-வருஷங்களுக்குமுன் அவதரித்தவர். அவர் வாயுவின் அவதாரம் என்று அவரைப்பற்றிய சரித்திரங்கள் கூறும். அவர் தாய் வேதவதி; தந்தை மத்தியகேஹர். அவர் இளம்பருவத்தில் அற்புதமான திருவிளையாடல்களைச் செய்தார். அவர் தகப்பனை ஒரு நாள் கடன்காரன் வந்து மறித்துக்கொள்ள, அவர் மிகத் துன்பப்படுவதைக் கண்டு, அவர் அவனை ஒருபுறம் அழைத்துச் சென்று, அருகி

லிருந்த புளியங்கொட்டைகளை வாரி அவன் கையிற் போட்டார். உடனே அவைகள் அவனுக்குக் கொடுக்க வேண்டிய தொகையளவு பொன்னாக மாறின. அவன் அந்தச் சங்கதியை ஊரிலுள்ளாருக்கு வெளியிட, எல்லோரும் மிகுந்தஆச்சரியத்தையடைந்து அக்குழந்தையைத் தெய்விகக் குழந்தை என்று மதித்தனர். அநேக நாள் அக்குழந்தை காணாமற்போய், பின்னர் அதிவியப்பாக அகப்பட்டது. மத்வாது பால லீலைகள் சற்றேறக் குறைய ஸ்ரீகிருஷ்ணபகவானது பால லீலைகள்போல விளங்கும். அவர் தமது தகப்பனாரிடத்தும், கிராமத்திலிருந்த ஓர் ஆசாரியரிடத்தும் கல்வி கற்றார். எந்தக் காலத்திலும் அவர் அற்புதச் செயல்களைச் செய்வதுண்டு. அவர் தம் தோழனது நீராத் தலைவலியைக் காதில் ஊதி உடனே தீர்த்தார். படிப்பு முடிந்த காலத்தில், அவர் தமது குருவுக்கு ஐத்ரேய உபநிஷத்தின் ரகசியத்தை உபதேசித்துத் தமது விஷ்ணு பக்தியின் சிறப்பைக் காட்டினார்.

அவருக்கு உபநயனமான பிறகு ஒரு குருவைச் சென்று அடுத்தார். அதுமுதல் அவருக்குச் சந்நியாசத்தில் இச்சை பிறந்தது. உடுப்பியிலேயே அச்யுதப்ரேக்ஷர் என்ற ஓர் ஆசிரியர் அவருக்குக் கிடைத்தார். அவரிடம் இவர் உபதேசம் பெற்றுச் சந்நியாசம் வாங்கிக் கொள்வதாகத் தீர்மானித்தார். அவ்விஷயம் மத்யகேஹருக்குத் தெரிந்ததும், பிள்ளையை அவர் வந்து பார்த்துச் சந்நியாசம் வாங்கிக் கொள்ளலாகாதென்று புத்திமதி கூறினார். அதற்கு அவர் இசையாது பிடிவாதமாகவே இருந்தார். மத்யகேஹர் தமக்குப் பிள்ளையிருந்தும், வயது காலத்திற் பயன்படாது போனதை

வாய்விட்டுக் கூறி மிகவும் துக்கிக்க, மத்வரது மனம் இளகி, "தம்பி பிறக்கும்வரை நான் சந்நியாசம் வாங்கிக் கொள்வதில்லை" என்று வாக்களித்தார். அதற்கேற்பக் கொஞ்சநாளில் தம்பியும் பிறந்தான். உடனே மத்வர் சந்நியாசம் வாங்கிக்கொள்ளத் தாயினிடம் உத்தரவு கேட்டு, வெகு தர்க்கத்தின்மேல் அவளிடமிருந்து அனுமதிபெற்றுத் தமது குருவிடம் வந்து சந்நியாசம் பெற்றுப் பூர்ணப்ரக்ஞர் என்னும் பெயர் பூண்டார். அவ்வாறு பூண்டதும் உடனே அவர் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டார். போகும் வழியில் அவர் தெற்கே சென்று, விஷ்ணுமங்கலம் என்ற ஊரை அடைந்தார். அங்கு வாயுபுத்திரனை வீமனைப்போல் மிக்க ஆகாரத்தை உட்கொள்ள முடியுமென்றும், குறைந்த வஸ்துக்களை அதிகமாக்கும் திறன் உண்டென்றும் வெளிப்படுத்தினர். அக்காலத்திற்குள் அவருக்குச் சாஸ்திர ஞானமும், அதை எடுத்து விளக்கும் சாமர்த்தியமும், தர்க்கத்திற் பிறரை ஜயிக்கக் கூடிய ஞானமும் பூர்ணமாய் எற்பட்டன. அவருக்குச் சுற்றிலுமிருந்த அத்வைத ஸித்தாந்தம் பொருத்தமுள்ளதென்று படாமற்போக, அவர் பொதுவாக அதைக் கண்டித்து வாதம் செய்துவந்தார். மற்றைய ஸித்தாந்தங்கள் யாவும் அவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அப்படி அவர் வாதம்செய்துகொண்டு, திருவனந்தபுரம் வந்துசேர்ந்தார். அவர் அங்கு அப்பொழுதிருந்த சிருங்கேரி வித்தியாசங்காரரைச் சந்திக்கும்படி நேர்ந்தது. அரசன் முன்னிலையில் அவர்கள் இருவருக்கும் தர்க்கம் உண்டாக, ஒருவருக்கொருவர் சளைக்காது வெகு நாள் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் சொல்லி

வந்தனர். அதில் ஒருவருக்கும் ஜயம் என்பது ஏற்படாமல், துவேஷம் மாத்திரம் சித்தித்தது. அன்றுமுதல் ஸ்ரீமத்வாசாரியர் அத்வைதத்தை எல்லையின்றி இகழ்ந்துபேசவும், அதை நிலைநிறுத்திய ஆதிசங்கரரை வாய் கூசாது குற்றங்கூறவும் கிளம்பிவிட்டார். ஸ்ரீமத்வர் யாத்திரை செய்துகொண்டு இராமேசுவரம் வருங்கால், மறுபடியும் அவ்விருவருக்கும் அம்மாதிரி தருக்கம் உண்டாகி மனஸ்தாபங்கள் முதிர்ந்தன. அதனால் அந்த யாத்திரை முடிந்து ஸ்ரீமத்வர் உடுப்பி வந்ததும், தாம் ஸித்தாந்தமாகக் கொண்டிருக்கும் துவைதத்திற்கு இசைய, பகவத்கீதைக்கு ஒரு வியாக்யானம் செய்தார். அதன் பின்னர் அவர் வடக்கு நோக்கி யாத்திரை செய்யப் புறப்பட்டார்.

போகும் வழியில் அவருக்கு அநேக கஷ்டங்கள் நேர்ந்தன. அவைகளை எல்லாம் லக்ஷ்யம் செய்யாது, அவர் நேரே அரித்துவாரம் போய் அங்குக் கொஞ்ச நாள் இருந்துவிட்டு, அப்பால் பதரிகாச்சிரமம் சென்று, அங்கு ஓரிடத்தில் தம் சிஷ்யர்களையெல்லாம் நிறுத்திவிட்டுத் தாம் பாறை பாறையாகத் தாண்டி, வெகுவேகமாக வேதவியாஸர் ஆசிரமம் சென்றார்; அங்கு அவரிடமிருந்து நேரே உபதேசம்பெற்றுப் பின்னர் பிரமசூத்திரத்திற்கு வியாக்கியானம் செய்ததாக அவர் சரித்திரங்கள் கூறும். பிறகு அங்கிருந்து புறப்பட்டு, வங்காள தேசம் போய் அங்குத் தமது மதத்தைத் தாபித்துவிட்டு, ஜகந்நாத க்ஷேத்திரம் வந்துசேர்ந்தார். அங்கு வந்ததும், அவருக்கு இருவர் முக்கிய சிஷ்யர்களாயினர். அவர்களுக்கு முறையே ஸோபன்னபட்டர் என்றும், ஸாமி சாஸ்திரி என்றும் பெயர். அவர்கள் முத

வில் ஸ்ரீமத்வரிடம் தர்க்கம் செய்ய, வெகு விவாதத்தின் பேரில், முதலில் ஸோபன்ன பட்டரும், பின்னர் சாமி சாஸ்திரியும் அவருக்குச் சிஷ்யர்கள் ஆனார்கள், அதில் சாமி சாஸ்திரி சந்நியாசம் பெற்றதும், அவருக்கு நரகரிதீர்த்தர் என்று பெயரிடப்பட்டது. ஸ்ரீமத்வாசாரியர் தெற்கே புறப்பட்டதும், நரகரிதீர்த்தரும் அவர் கூடவே புறப்பட்டார். அப்பொழுது அவரை நோக்கி, "நீர் கலிங்கதேசத்தில் பரோபகாரமாகக் கொஞ்ச காலத்தைக் கழித்து அந்த அரசனிடமிருக்கும் மூல ராம மூல ஸீதா விக்கிரகங்களை உடுப்பியிற் கொண்டுவந்து சேர்ப்பீராக" என உத்தரவளித்தார். குருவைப் பிரிய மனமில்லாதவராயினும், நரகரிதீர்த்தர் கலிங்க தேசத்திலேயே தங்கிவிட்டார். அங்கிருந்த அரசன் சிறுவனா யிருந்ததால், அவன் தக்க பருவம் அடையும் வரை அவனுக்குப் பதிலாக நரகரிதீர்த்தரே அங்கு வெகுகாலம் ராஜ்யம் ஆளும்படி நேர்ந்தது. சோபன்னபட்டர், நரகரிதீர்த்தர் என்னும் இருவருடைய முயற்சியால் ஸ்ரீமத்வாது சித்தாந்தம் நன்றாகத் தெலுங்கு தேசங்களிலெல்லாம் வேரூன்றியது.

மத்வர் உடுப்பி வந்ததும், அச்யுதப்ரேக்ஷர் என்ற தமது குருவுக்குத் தாம் வியாசரிடம் கேட்ட அற்புத விஷயங்களை யெல்லாம் சொல்லித் தமது சித்தாந்தத்திற்கு அவரை இசையும்படி செய்து தாம் எழுதிய ஸூத்திர பாஷ்யத்தையும் அவருக்குக் காட்டினார். அவர் அவைகளை ஒப்புக்கொண்டு, துவைத சித்தாந்தத்தை அனுசரிக்கலாயினர். அந்தச் சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள், 'விஷ்ணுவினது ஆயுத முத்திரைகளைத் தேகத்திற் சூட்டிக்கொள்ள வேண்டும்' என்று

பின்னர் ஒரு நிபந்தனை செய்தார். அவ்வூரில் நாள் தோறும் எல்லோருக்கும் விடாது பகவத் விஷயங்களைப்பற்றி அவர் உபதேசித்துவந்தார்.


ஒருநாள் அவர் சமுத்திர ஸ்நானத்துக்குப் போயிருக்கையில் அவருக்கு ஸ்ரீகிருஷ்ணன்மேல் துவாதச ஸ்தோத்திரம் ஒன்று செய்யவேண்டுமென்ற பரபரப்பு உண்டாயிற்று. அந்தப் பரபரப்பினால் அன்றை தினமே உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ணபகவான் வந்துசேரப்போகிறார் என்னும் எண்ணமும் அவருக்கு உண்டாயிற்று. அவ்வெண்ணத்துடன் ஸ்நானம் செய்து பகவத் தியானம் செய்ய உட்கார்ந்தார். அப்பொழுது நடுவில் கண்ணைத் திறந்து நோக்கினார். உடனே எதிரில் துவாரகையிலிருந்து வந்துகொண்டிருந்த ஒரு கப்பல் தோன்றியது. அது அலைகளின் வேகத்தாற் கண்டபடி இழுக்கப்பட்டு வந்ததுபோல் தோற்றியது. அதில் இருப்பவர்கள் என்ன முயன்றும், அக்கப்பலைத் தடுத்து நடத்தமுடியவில்லை. அக்கப்பலையும், கப்பற்காரர்களையும் காப்பாற்றத் தமது கையிலிருந்த சிறு துண்டை ஸ்ரீமத்வர் (கப்பலை அழைப்பதைப்போல்) அசைத்தார். உடனே கப்பல் அபாயம் நீங்கிக் கரை வந்துசேர்ந்தது.

கப்பல் தலைவன் சந்தோஷம் அடைந்து மத்வரிடம் வந்து ஏதாவது கைம்மாறு பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மிக வணக்கத்துடன் கேட்டுக்கொண்டான். உடனே மத்வர், கப்பலிலிருந்த பணம் முதலியவைகளைக் கவனியாது, "உங்கள் கப்பலில் இருக்கும் கோபிசந்தன கட்டிகளுள் பெரியவைகள் சிலவற்றைக் கொடுத்துவிடுங்கள்" என்று கேட்டுக்

கொண்டார். அவர்கள் அவ்வாறு செய்ய, கட்டிகளுள் பெரிதாயிருந்த ஒன்றைத் தமது அருகே கொண்டுவரச் சொன்னார். அக்கட்டியை கீழே இறக்கியதும், அது இரண்டாகப் பிளந்து விழுந்தது. அதனுள்ளிருந்து அழகான சிறிய கிருஷ்ண விக்கிரகமொன்று, மத்தும் கையுமாய்த் தோன்றியது. உடனே மத்வர் பக்தி பரவசரானார். அந்த விக்கிரகத்தை உடுப்பிக்குக் கொண்டுபோய், கோயிலொன்று கட்டி அங்குத் தாபித்து அதில் பூஜாவிதிகளை ஏற்படுத்தி அவைகளை மிகுந்த சிரத்தையுடன் தாமே அனுஷ்டித்து வந்தார். அவர் காலம் முதல், அக்கோயில் மிகப் பிரபலமா யிருக்கிறது.

அதன்பின்னர் மத்வர், யாகங்களில் உயிர்ப் பிராணிகளைக் கொல்லக் கூடாதென்றும், அவைகட்குப் பதிலாக மாவாற் செய்த உருவங்களை வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஏற்பாடுசெய்து யாகங்களைச் சீர்திருத்தினார். தாம் இல்லாத காலங்களிலும் தமக்குப் பிற்காலத்திலும் கிருஷ்ணன் பூஜை உடுப்பியில் தவறாது நடந்துவருவதற்காக எட்டு மடங்களை ஏற்படுத்திப் பூஜை செய்யும் முறைமையும் ஏற்படுத்தினார். அந்த மடங்கள் இக்காலத்திலும் இருக்கின்றன; பூஜையும் தவறாது நடந்துவருகிறது.

அவ்வாறு உடுப்பியில் சீர்திருத்தங்கள் செய்துவிட்டு, மத்வர் இரண்டாமுறை பதரிகாச்சிரமம் நோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில், ஓர் அரசன் தன் எதிரில் ஜனங்களை யெல்லாம் பொதுநன்மைக்கு வேண்டிய வேலைகளைச் செய்வதிற் கட்டாயப்படுத்தி வேலை வாங்கிவந்தான். மத்வரையும் அவன் அவ்



ஸ்ரீமத்வாசாரியர்.

வாறே செய்ய, அவர் அவனைச் சற்று உற்று நோக்கி, வேலை செய்யும்படி ஏவினார். அரசன் மெய்மறந்து வேலைசெய்யத் தொடங்க, மத்வர் சமயம் பார்த்துச் சிஷ்யக் கூட்டங்களோடு தப்பித்துக்கொண்டு யாத்திரை செய்யப் புறப்பட்டார். வழியில் அவர் துருக்க அரசர்களைப் பார்க்க நேரிட, அவர்களிடத்தில் துருக்க பாஷையிலேயே பேசி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அநேக அபாயங்களிலிருந்து தப்பித்துக்கொண்டார். முன்பு சென்றவழியே வியாசரிடம் மறுபடியும் போய், எட்டு சாளக்கிராமங்கள் பெற்று, மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் என்ற நூலொன்றையும் செய்ய அனுமதி பெற்றாரென்று அவர் சரித்திரங்கள் கூறும். அநேக அற்புதச் செயல்களைச் செய்துகொண்டு, துவைத சித்தாந்தத்தை ஸ்தாபித்துக்கொண்டும் மத்வர் உடுப்பி வந்துசேர்ந்தார்.

மத்வர் இவ்வாறு ஜயம் பெற்றுத் தமது மதத்தைப் பரவச்செய்து வருங்காலத்தில் சிருங்ககிரி மடத்தில் அப்போதிருந்த பத்மதீர்த்தர் என்பவருக்கு மத்வ மதத்தை எப்படியாவது பரவவொட்டாது தடுக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அவருக்கு முன்னிருந்த ஆசாரியர் வித்தியாசங்காருக்கும், மத்வருக்கும் திருவனந்தபுரத்தில் நேர்ந்த மனஸ்தாபங்கள் அவருக்குத் தெரிந்தன. ஆதலால் மத்வமதத்தைக் குற்றங் கூறிப் பிரசங்கிக்க அநேகரை ஏற்படுத்தி, தாமும் மத்வரது மதவிஷய புத்தகங்களைத் தந்திரமாகக் கொள்ளையிட ஏற்பாடுசெய்தார். புத்தகங்கள் காணாமற்போனதும், மத்வர் அருகிலிருந்த ஜயஸிம்ஹன் என்ற அரசன் சகாயத்தாற் புத்தகங்களைப் பெற முயற்சித்தார்.

அதன் பின்பு அவர் விஷ்ணுமங்கலம் என்ற ஊரில் உபந்நியாசம் செய்து கொண்டிருக்கையில், திரிவிக்ரமர் என்ற பெரிய பண்டித ரொருவர் அவருக்குச் சிஷ்யராகக் கிடைத்தார். அங்குத்தான் ஜயசிம்மனிடமிருந்து மத்வர் தமது புத்தகங்களை நேரே பெற்றது. திரிவிக்ரமர் மத்வருக்குச் சிஷ்யரானதும் அவரால் மத்வ சித்தாந்தம் மிகவும் பரவ, அநேகர் அதை அங்கீகரித்தனர். அவரது வேண்டுகோளின்மேல், மத்வர் பிரமசூத்திரத்திற்கு விஸ்தார வியாக்கியானம் ஒன்று செய்தார். அந்தத் திரிவிக்கிரமரது பிள்ளையாகிய நாராயணாசாரியர் பின்னர் மத்வரது சரித்திரத்தை மத்வ விஜயம் என்ற காவிய ரூபமாகச் செய்தார்.

அப்படியிருக்க ஸ்ரீமத்வரது தந்தையான மத்யகேஹர் சாஸ்திர நெறி தவறாது ஒழுங்காக வாழ்ந்து வந்து, முதிர்ந்த வயதில் பகவான் பாதாரவிந்தங்களைச் சேர்ந்தார். கொஞ்சநாளில் அவர் தாயும், அவள் கணவன் சென்ற இடத்தைப் பின்தொடர்ந்தாள். மத்வரது தம்பி, தாய் தகப்பனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை ஒருவாறு செய்து, மத்வர் இருக்குமிடம் வந்து சங்கதிகளை யெல்லாம் சொல்லித் தமக்குச் சந்நியாசம் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அதைக் கேட்டதும் மத்வர், தம்பியை நோக்கி, "இன்னும் செய்யவேண்டிய கடன்களைச் செய்துமுடி; நான்கு மாதம் கழித்துப் பார்த்துக்கொள்வோம்" என்று உத்தாவளிக்க தம்பியும் அவ்வாறேயிருந்தனர். நான்கு மாதம் கழிந்ததும், மத்வரே பஜகக்ஷேத்திரம் சென்று தம்பிக்குச் சந்நியாசம் கொடுத்து விஷ்ணு தீர்த்தர் என்ற பெயரையும் கொடுத்தார். பின்னர்

அவரை உடுப்பியிலிருந்த எட்டு மடங்களுள் ஒன்றுக்கு அதிபதியாக்கினர்.

மத்வர் லோகோபகாரமாக வாதம் செய்து வந்தார். அவர் தம்பியோ, சந்நியாச முறைமைப்படி உலகினின்றும் ஒதுங்கிச் சந்நியாச ஒழுங்கை எல்லோருக்கும் அனுஷ்டித்துக் காட்டினர். அதன்பின்னர் மத்வர் தென்கன்னடம், மைசூர் முதலிய இடங்களுக்கு யாத்திரை சென்று, தாம் வாயுவினுடைய அம்சம் என்பதைத் தமது பலத்தின் சிறப்பு முதலியவைகளால் வெளிப்படுத்தினர். அந்த யாத்திரை முடிவில் நரகரிதீர்த்தர் கலிங்க தேசத்தில் வெகுகாலம் அரசாண்டு அரசனுக்குத் தகுந்த வயது வந்ததும் அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து, அவனிடமிருந்து இராமர் சீதையாகிய மூலவிக்கிரகங்களையும் பரிசிலாகப் பெற்று உடுப்பி வந்துசேர்ந்தார். மத்வர் அவைகளை மிகுந்த பக்தியுடன் பெற்றுப் பூஜையிற் சேர்த்து கொஞ்சநாள் ஆராதித்துவந்தார். அப்படியிருக்கையில், சுமார் 79-ஆம் வயதில் ஒரு நாள் பூஜை எல்லாம் முடித்துவிட்டு, ஐத்ரேய உபநிஷத்தைத் தமது சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துகொண் டிருந்தபொழுது, ஸ்ரீமத்வர் பகவான் பாதாரவிந்தங்களை அடைந்தார்.

ஸ்ரீமத்வாசாரியர் நூல்களிற் காணப்படும் துவைதம் என்ற முடிவை எடுத்துத் தம் முன்னோர்கள் அனுஷ்டித்துத் தெளிந்தபடி உலகில் எல்லோரும் உணர்ந்து உய்யும்பொருட்டுப் பல கிரந்தங்கள் மூலமாக வெளியிட்டு யுக்திகளைக்கொண்டு அதைத் தாபித்தார். அதன்படி:—

(1) உலகில் மூன்று வஸ்துக்கள் உண்டு. அவைகள்

சித் (ஜீவாத்மாக்கள்), அசித் (உயிரற்றவைகளுக்கு ஆதாரம்), ஈசுவரன் (பரம்பொருள்); அவைகள் எப்பொழுதும் வேறாகவே இருக்கும்.

(2) ஜீவாத்மாக்கள் பல; அவைகளுள் முக்த ஜீவர்கள், பக்த ஜீவர்கள், விடுபடக்கூடிய ஜீவர்கள் என்ற மூன்று வகுப்பினர் உண்டு.

(3) ஜீவர்கள் அசித்தின் சம்பந்தங்கள் நீங்கி விஷ்ணுவிடம் சென்று எப்போதும் அவரை யஜமானனாகவும், தம்மை அவருக்கு ஊழியக்காரனாகவும் எண்ணியிருப்பதே மோக்ஷம்.

(4) பகவத் பக்தி மூலமாகவே பகவத் கிருபை உண்டாகி இது நமக்குக் கிடைக்கவேண்டும். நாம் பகவானுக்கு ஊழியனாக எண்ணி ஈடுபடுவதே பக்தி எனப்படும்.

(இரண்டாம் பாகம் முற்றிற்று.)

Printed at the Guardian Press, Ltd., Madras. (28829-22)